செயற்திறன் அறிக்கை - 2021



சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

(செலவுத் தலைப்பு இலக்கம் - 414)

பொருளடக்கம்

உள்ளடக்கம்	பக்க இலக்கம்
அத்தியாம் 01 - நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு	01 - 15
அத்தியாம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்	16 - 39
அத்தியாம் 03 - வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயற்திறன்	40 - 64
அத்தியாயம் 04 - செயற்திறன் சுட்டிகள்	65 - 66
அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை (SDG)அடைவதன் செயற்திறன்	67 - 70
அத்தியாயம் 06 - மனித வளத் தோற்றுவாய்	71 - 73
அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை	74 - 82

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தோற்றுவாய்/நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று

தொலைநோக்கு

2030 ஆம் ஆண்டளவில் வறுமை மற்றும் பசியற்ற இலங்கை

பணிக்கூற்று

மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், வாழ்வாதார உதவிகள், நுண்நிதிய வசதிகள், தொழில் வாய்ப்புக்கள், தொழில்சார்ந்த அறிவு மற்றும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினை வழங்குவதனூடாக பாதிக்கப்படக்கூடிய சமுதாயத்தினை வலுவூட்டுதல்.

1.2 அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2194/74 என்ற இலக்க மற்றும் 2020.09.25 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக, சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டளவில் வறுமையினை ஒழித்து, சௌபாக்யமான (சுபீட்சமான) தேசமொன்றினைக் கட்டியெழுப்பும் தொலைநோக்குடன், மக்களினை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தினை உருவாக்குவதற்கு உரிய சட்டதிட்டங்களின் பிரகாரம், சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி விடயங்களுக்கான கொள்கைகளினை வகுப்பதற்கு உதவுதல், தேசியப் பாதீடு. அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களினை அமுலாக்குதல், அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபை நிறுவனங்களின் விடயங்கள், செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்பிலான கொள்கைசார் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினை அமுலாக்குதல், பின்னூட்டுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் அமைச்சின் கடமைப் பொறுப்பு என்பதுடன், திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள் பின்வருமாறாகும்.

I. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் (DSD)
II. சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் (SDB)
III. பிராந்திய அபிவிருத்தி வங்கி (RDB)
IV. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் (NSPD)
V. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SLSSB)
VI. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் (NISD)
VII. கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் (RDTRI)
VIII. உளவளத்துணைப் பிரிவு
IX. அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் (SRMC)

அதன் பிரகாரம், சமூகத்தில் வாழும் பின்தள்ளப்பட்ட நிலைமையிலுள்ள நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழல் மற்றும் வாய்ப்புக்களினை வழங்கி அவர்களினை அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குவதற்கு பின்வரும் இலக்கிடப்பட்ட குழுக்களுக்கு சேவையினை வழங்குகிறது.

- குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்கள்
- அங்கவீனமுற்ற நபர்கள்
- தனிப்பெற்றாரைக் கொண்ட குடும்பங்கள்

இப்பிரதானஇலக்கிடப்பட்டகுழுக்களின்மீது அதிக கவனத்தினைச் செலுத்தி, கடந்த வருடங்களினுள் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக குறைந்த வருமானப் பயனாளிகள்சமுதாயத்தின் வறுமையினைக் குறைத்து சுபீட்சமான தேசமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு இவ் அமைச்சினூடாக மிகப் பிரமாண்டமான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அமைச்சு மற்றும் இணை நிறுவனங்கள் செலவுத் தலைப்பு இலக்கம் 414 இன் கீழ் செயலாக்கப்படுவதுடன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் செலவுத் தலைப்பு 331 இன் கீழ் அமுலாக்கப்படுகிறது.

1.3 பிரதான செயற்பாடுகள் மற்றும் அதிஉன்னதமான முக்கியத்துவங்கள்

(2020.09.25 ஆந் திகதிய 2194/74 என்ற இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்)

செயற்பாடுகள் மற்றும் பணிகள்


நிதி அமைச்சரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் மக்களினை மையமாகக் கொண்ட பொருளாதாரமொன்றினை உருவாக்குவதற்கான சட்டதிட்டங்களுக்கு அமைவாக, சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி விடயத்துடன் தொடர்பிலான கொள்கைகளினை வகுப்பதற்கு உதவுதல், தேசியப் பாதீடு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழுள்ள கருத்திட்டங்களினை அமுலாக்குதல், அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபை நிறுவனங்களின் விடயங்கள், செயற்பாடுகள், அதனுடன் தொடர்பிலான கொள்கைசார் நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்திட்டங்களினை அமுலாக்குதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

அதி உன்னதமான முக்கியத்துவங்கள்

- சமுர்த்திப் பயனாளிகளினை இலக்காகக் கொண்டு வீட்டுப் பொருளாதாரத்தினை வலுவூட்டுதல், சமுதாய அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்கள், நுண்நிதிய நிறுவனங்கள், சேவை வசதிகளினை வலுவூட்டுதல் மற்றும் சுய தொழில் வாய்ப்புக்களினை விரிவுபடுத்துதல்.
- சிறிய மற்றும் நடுத்தரளவிலான உற்பத்திகளினை மேம்படுத்தி உள்ளூர் உற்பத்தியினை விரிவுபடுத்துதல்
- புதிய தொழில் முனைவோர்களுக்குத் தேவையான நீண்டகால வாடகை அடிப்படையின் கீழ் வழங்கப்படும் காணிகள், கடன் வசதிகள், வியாபார ஆலோசனை, தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற அனைத்தையும் இலகுவாக வழங்கும் விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றினை அமுலாக்குதல்.
- சிறிய மற்றும் நடுத்தரளவிலான கைத்தொழில் துறை தொடர்பில் ஒரு நிறுவனத்தினூடாக சகல சேவைகளினையும் வழங்கும் மூலோபாயமொன்றினைத் தயாரித்தல் மற்றும் அத்துறைகளில் பெறுமதியினை அதிகரிக்கும் கைத்தொழில்களினை ஆரம்பிப்பதற்கு முன்னுரிமையினை வழங்கி தேவையான வலுவூட்டலினை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களினை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு


சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு



பணி.நா. (DSD)- **பணிப்பாளர் நாயகம்** (Department of Samurdhi Development)
பணி.நா.(NISD) - **பணிப்பாளர் நாயகம்** (National Institute of Social Development)
மே.ப.நா. (DSD) - **மேலதிகப் பணிப்பாளர் நாயகம்** (Department of Samurdhi Develop
மே.ப.நா. (DSD) - **மேலதிகப் பணிப்பாளர் நாயகம்** (National Institute of Social Devel
சிரே.உ.செ.- சிரேஸ்ட உதவிச் செயலாளர்
உ.செ. - **உதவிச் செயலாளர்**
பி.பணி. - **பிரதிப் பணிப்பாளர்**
உ.பணி. - **உதவிப் பணிப்பாளர்**
பணி. (RDTRI) - **பணிப்பாளர்** (Rural Development Training and Research Institute)
பி.பொ.முகா.(SSB) - **பிரதிப் பொது முகாமையாளர்** (Sri Lanka Social Security Board)
உ.பணி. (சமு.அபி.) -உதவிப் பணிப்பாளர் (சமுர்த்தி அபிவிருத்தி)
அபி.உத். - **அபிவிருத்தி உத்தியோகத்தர்**

பணி.(அபி.) -பணிப்பாளர் (அபிவிருத்தி)
பணி. (திட்.) - **பணிப்பாளர் (திட்டமிடல்)**
பணி. (HRD) - **பணிப்பாளர்** (Human Resource Developmet)
பணி. (SDB) - **பணிப்பாளர்** - (Saubhagya Development Bureau)
பி.க. - **பிரதான கணக்காளர்**
பி.உ.க. - **பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்**
பணி.(NSPD) -**பணிப்பாளர்** (National Secretariat for Persons with Disabilities)
பணி.(Coun) - **பணிப்பாளர்** - (Counselling)
பணி.(SSB) - **பணிப்பாளர்** (Sri Lanka Social Security Board)
பி.பொ.முகா.(RDB) - **பிரதிப் பொது முகாமையாளர்** (Rural Developmet Bank)
மு.சே.உத். - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
அலு.பணி. - **அலுவலகப் பணியாளர்**

1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்/நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்



1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் பிரிவுகள்

1.6.1 நிர்வாகப் பிரிவு

அமைச்சின் நிர்வாகம், தாபனங்கள், போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பச் செயற்பாடுகளினைச் செயற்படுத்துதல், அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள், நிறுவனங்களின் நிர்வாகம், நிறுவனம்சார் செயற்பாடுகளினைச் செயற்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் பின்வரும் நோக்கங்களினைக் கொண்டு இடம்பெறுகின்றது.

i. அமைச்சுக்கும் மற்றும் அப்பிரிவுக்கும் உரித்தான சகல நிறுவனங்களின் பதவியணிக்கான நிறுவனம்சார் மற்றும் நிர்வாகம்சார் செயற்பாடுகளினை செயற்படுத்துதல்.
ii. உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளினை வழங்குவதனூடாக மனித வள இயலுமைகளினை மேம்படுத்துதல்.
iii. அமைச்சின் விடயப் பரப்புக்கு உரித்தான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், சட்டவரைவுகள் போன்றவற்றினைச் சரியானவாறு முன்வைத்தலினூடாக கொள்கைகளினை வகுப்பதற்குப் பங்களிப்பினை நல்குதல்.
iv. அமைச்சுக்கான செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்லுவதற்காகத் தேவையான மனித வளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்
v. அமைச்சுக்கு உரித்தான சகல நிறுவனங்களினதும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
vi. அமைச்சுக்கு உரித்தான உத்தியோகத்தர்களின் மனித வள அபிவிருத்தித் திறன்களினை மேம்படுத்துதல்.

02/2018 என்ற இலக்க மற்றும் 2018.01.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிரூபத்தின் பிரகாரம், இலங்கையின் அரச சேவையினை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட மனித வளங்களினை வினைத்திறனாகவும்,தரமானதாகவும் மற்றும் விளைத்திறனாகவும் நாட்டின் அபிவிருத்திக்கு மூலதனமொன்றாகப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டதாக மேம்படுத்துவதற்கு அரச நிறுவனங்களில் கடமையாற்றும் ஒட்டுமொத்தப் பதவியணியின் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கான கடமைகளினைச் சரியானவாறு நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட வேண்டிய பயிற்சியினைச் சரியானவாறு அடையாளம் கண்டு அப்பயிற்சியினை குறிப்பிட்ட காலப்பகுதியில் வழங்குவதும், சகல உத்தியோகத்தர்களும் வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்திற்குக் குறையாது பயிற்சியளிப்பதற்குச் சந்தர்ப்பத்தினை வழங்குவதும் சகல அரச நிறுவனங்களினாலும் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந் நோக்கங்களினை நிறைவேற்றுவதற்கும், சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மற்றும் இணை நிறுவனங்களின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்களினை அடையச் செய்து அதன் செயற்திறனினை அதிகரிப்பதற்கும் இராஜாங்க அமைச்சின் மற்றும் இணை நிறுவனங்களின் மனித வளங்களினை பெறுமதியான மூலதனமொன்றாக மேம்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களின் விடய அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கு விருத்தி மற்றும் ஆன்மீகம்சார் வளர்ச்சி, அவர்களின் சேவைகளினை விளைத்திறன், வினைத்திறன் மற்றும் தரமான முறையில் பயன்படுத்துவதற்கு பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதல் இடம்பெற்று வருகிறது.

1.6.2 கணக்குகள் பிரிவு

அமைச்சுக்கான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் வருடாந்த ஒதுக்கீடுகளினைப் பெறுதல், முகாமை செய்தல் மற்றும் கொடுப்பனவினை முன்னெடுப்பதுடன், அரச கணக்குகளினை முன்னெடுத்து வெளிப்படைத் தன்மையுடன், நிதிப் பிரமாணங்களினூடாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதியினை ஒழுக்காற்றுடன் முன்னெடுத்துச் செல்லுதல் கணக்குகள் பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

இங்கு பிரதான நிதி உத்தியோகத்தரினதும் மற்றும் பிரதான கணக்காளரினதும் வழிகாட்டல், முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் செயற்படுத்தலினூடாக கணக்கு நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன், நிதிப் பிரமாணங்கள், விசேட ஏற்பாடுகள் மற்றும் அரச சுற்றுநிரூபங்களினூடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

i. அமைச்சுக்கு உரித்தான முழுமையான வருடாந்தப் பாதீட்டு ஆவணத்தினைத் தயாரித்து உரிய தினத்திற்கு முன்னர் தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
ii. சகல கொடுக்கல் வாங்கல்களினைச் சரியாக நாளதுவரைப்படுத்திக் கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளினை முன்வைத்தல்.
iii. நிதிக் கொள்கைகளினை வகுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.
iv. சகல கிடைப்பனவுகள், செலவுகளினைக் கண்காணித்தல் மற்றும் செலவுகளினைக் கட்டுப்படுத்துதல்.
v. செலவுகளினை மீளாய்வு செய்வதற்கு உயர் முகாமைத்துவத்திற்கு முன்மொழிவுகளினை முன்வைத்தல்.
vi. பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் அதிபதிக்கு இறுதிக் கணக்குகளினை முன்வைத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.
vii. சகல கொள்வனவுகளின்போது வெளிப்படைத் தன்மையுடனான கொள்முதல் நடைமுறையினூடாக நிதிச் சட்டதிட்டங்களினைச் சரியானவாறு அமுலாக்குதல் மற்றும் உதவுதல்.
viii. நாடுபூராவும் பரவலாகவுள்ள நிவாரணங்களினைப் பெறும் பயனாளிகளின் பயன்களினை உரிய திகதியில் நேரகாலத்துடன் அவர்களுக்கு வழங்குவதற்கு உதவியினை வழங்குதல்.
ix. அமைச்சின் கீழுள்ள அரசின் சொத்துக்களினை நாளதுவரைப்படுத்தல், வருமானங்களினைத் திரட்டுதல் மற்றும் ஆய்வு செய்தல்.
x. அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களின் நிதி மற்றும் கணக்குச் செயற்பாடுகளினைச் சரியானவாறு முன்னெடுப்பதற்கு உதவுதல்.

1.6.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதித் பிரமாண விதிக்கோவையின் 133 மற்றும் 134 பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட கடமைகள், உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டியில் சொல்லப்பட்ட ஆலோசனைகள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் viiவது பாகத்தின் 40 வது பிரிவின் பிரகாரம், அமைச்சின் செயலாளருக்கு நேரடியாக அறிக்கையிடுவதற்குக் கடப்பாட்டினைக் கொண்ட பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

அதேபோல நிறுவனத்தின் நோக்கங்களினை எட்டும்போது, நிதியினைத் திட்டமிடுதல், உள்ளகக் கட்டுப்பாடு, புத்தகங்கள் மற்றும் கணக்குகளினைச் சரியானவாறு முன்னெடுத்துச் செல்லுதல், நிதி முகாமை மற்றும் முகாமைத்துவ தகவல்களினை வழங்கும் மூலோபாயம் விளைத்திறனாக இடம்பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல் இப்பிரிவின் நோக்கமாகும்.

1.6.4 திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

அமைச்சு, அதன் கீழுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் விடயப் பரப்புக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களினை வடிவமைப்பதற்குத் தேவையான வசதிகளினை வழங்குதல், அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினைச் செயற்படுத்துதல், முன்னேற்றத்தினை முகாமை செய்தல் பிற நேர் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல் இப்பிரிவின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

1.6.5 அபிவிருத்திப் பிரிவுகள் (I,II,III)

அபிவிருத்திப் பிரிவுகள் 3 என செயலாக்கப்படுவதுடன், அந்நிறுவனங்களின் தலைவர் மேலதிக செயலாளர் ஆவர். அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளினூடாக செயலாக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான கண்காணிப்பு, வழிகாட்டல் மற்றும் அமைச்சுடன் ஒருங்கிணைப்பினை முன்னெடுத்தல் இப்பிரிவுகளின் பிரதான கடமைப் பொறுப்பு என்பதுடன், பின்வருமாறு அபிவிருத்திப் பிரிவுகள் தொடர்பிலான நிறுவனங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

- அபிவிருத்திப் பிரிவு I - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
- அபிவிருத்திப பிரிவு II - அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும்
  தேசியசெயலகம்
  பிராந்திய அபிவிருத்தி வங்கி
  சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்
- அபிவிருத்திப் பிரிவு III - சமூகப் பாதுகாப்புச் சபை
  தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்
  கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்
  உளவளத்துணைப் பிரிவு

1.6.6 சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்

நாட்டினைக் கட்டியெழுப்பும் சுபீட்சமான தொலைநோக்கினை நனவாக்கும் பொருட்டு கிராம மக்களினை நேரடியான உற்பத்திச் செயற்பாட்டிற்குத் தொடர்புடுத்தி தேசிய உற்பத்தியினை அதிகரிப்பதற்கு சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம் நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமங்களிலும் காணப்படும் வளங்களின் கிடைக்கும் தன்மை, உற்பத்தித் திறன் மற்றும் நிலைபேறானதாக அமுலாக்கும் இயலுமையினை அடிப்படையாகக் கொண்டு, பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களினை உற்பத்தி செய்யும் செய்யும் அல்லது சேவைகளினை வழங்கும் கிராமங்கள் உற்பத்திக் கிராமங்களாக உருவாக்கப்படுகின்றன.

நோக்கங்கள்

i. உள்ளூர் உற்பத்திகளினை வலுவூட்டுதல் மற்றும் ஊக்குவித்தல்
ii. தற்போது காணப்படும் விசேட உற்பத்திகளினை வலுவூட்டுதல்.
iii. தொழில் வாய்ப்புக்களினை உருவாக்குவதனூடாக தொழிலற்ற தன்மையினைக் குறைத்தல்.
iv. கிராமியப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு மாற்றீட்டு வருமான வழிகளினை உருவாக்குதல்.
v. தேசிய உற்பத்தியினை மேம்படுத்துதல்.

மூலோபாயங்கள்

i. ஒரு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பிற மூலப் பொருட்கள், பொதியிடல் போன்றனவற்றினை பிற கிராமங்களினுள் உற்பத்தி செய்வதற்கு வலுவூட்டுதல்.
ii. பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கப்படும் பயன்களுக்கு 50% அல்லது அதற்கு மேலாக, பயனாளி பங்களிப்பினை ஈடுசெய்தல்.
iii. பயனாளிகள், பங்களிப்பினை பண வடிவிலோ அதேபோல மூலதன வடிவிலுள்ள பிற உள்ளீடுகளிலோ செய்யலாம்.
iv. உற்பத்திக் கிராமத்தின் அனைத்துப் பயனாளிகளையும் உற்பத்திச் சங்கத்தின் உறுப்பினர்களாகக் கொண்டிருப்பதன் மூலம் ஒரே உற்பத்திப் பிரிவாகச் செயல்படும் திறன்.
v. உற்பத்தியாளர்கள் பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் மற்றும் பிற வசதிகளினை உற்பத்திச் சங்கத்திற்கு வழங்குவதன் மூலம் அதிகளவிலான நபர்களுக்குப் பயன்களினை வழங்குதல்.

1.6.7 உளவளத்துணைப் பிரிவு

அவ்வேளை பெண்கள் வலுவூட்டல் மற்றும் சமூக நலன்புரி அமைச்சாக அமுலாக்கப்பட்ட இவ் அமைச்சின் கீழ் 2003 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் தலையீட்டுடன் உளவளத்துணை சேவையினை வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமி பேரழிவின் காரணமாக இவ் அமைச்சின் கீழ் உளவளத்துணைப் பிரிவு என்ற பெயரில் பிரிவொன்று அமைக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டில் புதிய பட்டதாரிகளினை ஆட்சேர்க்கும் தேசியக் கொள்கையின் பிரகாரம், திணைக்களம்சார் பதவியொன்றாக "உளவளத்துணை உதவியாளர்" என்ற பெயரில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு உளவளத்துணை தலையீட்டின் செயற்பாடு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அவ்வப்போது பல்வேறு கொள்கைகளின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு இதுவரையில் கடமையாற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 209 ஆகும். தலைமை அலுவலகத்திற்கும், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கும் உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டு உளவளத்துணை சேவைகளினை வழங்குதல் இடம்பெற்று வருகிறது. ஆனால், 2019 ஆம் ஆண்டில் உளவளத்துணைப் பிரிவு தொடர்பில், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் 324 உத்தியோகத்தர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆனாலும் அவ்வெண்ணிக்கை தற்போது நிலவும் உளவளத்துணை சேவைகளுக்கான தேவை மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் தேவையின் பிராகரம் போதாது என்பதுடன், அவ் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையினூடாக மேலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

சமுதாயம் உளக்கோளாறுகளினால் பாதிக்கப்படுவதைக் குறைத்தல், உளவளத்துணைக் களத்துறையில் புதிய நூதனங்களினைப் பாவித்துத் தரமான உளவளத்துணை சேவைகளினை வழங்குதல்,உளவளத்துணை சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மையாளர்களுக்கிடையே முறைசார் தொடர்பொன்றினை ஏற்படுத்துதல், உளவளத்துணை சேவைகளினை வழங்குதல் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல் இப்பிரிவின் நோக்கங்களாகும் அதன் கீழ் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது.

i. உளவளத்துணை சேவை தொடர்பில் தேசியக் கொள்கையினைத் தயாரித்தல்/செயலாக்குதல்/ஒழுங்குமுறைப்படுத்துதல்.
ii. உளவளத்துணை சேவை தொடர்பில் பிரமாணங்களினைத் தயாரித்தல்.
iii. மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் மட்டத்தில் உளவளத்துணை உத்தியோகத்தர்களினை இணைத்து உவளத்துணை சேவை நிலையங்களினை அமைத்தல்.
iv. உளவளத்துணை சேவைத் தேவைப்பாடுகளினைக் கொண்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உளவளத்துணை உத்தியோகத்தர்களின் சேவையினை வழங்குதல், (வைத்தியசாலைகள் - உளநோய் சிகிச்சை/முடக்கவாத நோய் சிகிச்சை (Stroke)/ புற்றுநோய் சிகிச்சை/சிறுநீரக நோய் சிகிசை/சிறைச்சாலை, சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள், விமானச் சேவைக் கம்பனி)
v. உளவளத்துணை சேவையின் உதவியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அவசியமாகி அலுவலக உத்தியோகத்தர் ஒருவரினைச் சந்திப்பதற்கு இயலாத வேளையில் அல்லது தேவையானவேளையில் சேவையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வசதிகளைத் திட்டமிடுவதற்கென 24 மணிநேர கையடக்கத் தொலைபேசி மூலமான உளவளத்துணை சேவையொன்றினை அமுலாக்குதல்.

vi. இயற்கை மற்றும் மனிதர்களினால் உருவாக்கப்பட்ட அநர்த்தங்களுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு அநர்த்த உளவளத்துணை சிகிச்சைகளினை நடாத்துதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.

vii. அபிவிருத்திசார் மற்றும் நிவாரணம்சார் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதனூடாக உளவளத்துணை சேவையினை விளம்பரப்படுத்தல்.

viii. உளவளத்துணை சேவை தொடர்பில் நடைமுறை மற்றும் செய்முறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதனூடாக திறனினை விருத்தி செய்தல்.

ix. உளவளத்துணை சேவைகளினை வழங்கும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினை ஒருங்கிணைத்தல்.

x. உளவளத்துணை விடயக் களத்துறை தொடர்பில் நடைமுறை அறிவினை வளர்ப்பதற்கு அச்சுப் பிரசுரங்களினை வெளியிடுதல் (சிங்களம் மற்றும் தமிழ் மொழி)

1.6.8 அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்கான ஏற்பாடுகளினைச் செய்வதற்கு அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழலொன்றினை உருவாக்குவதற்காக அங்கவீனமுற்ற நபர்களினை உரிமைகளினை மேபடுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரி உட்பட நிவாரணங்களினை வழங்குவதற்காக கொள்கைசார் தீர்மானங்களினை எடுப்பதற்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல தேசிய சபையினூடாக எடுக்கப்படும் தீர்மானங்களினை அமுலாக்குவதற்கு தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. அந்நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாவது,

i. அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துவதற்கு, மீள் அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் பாதுகாப்பதற்குப் பொறுப்பு நிற்றல்.

ii. அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல், அவர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் மீள் அபிவிருத்தி செய்தல் தொடர்பில் உரிய தரப்பினர்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.

iii. உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், அரச மற்றும் பிரத்தியேகப் பிரிவுகள் மற்றும் அமைப்புக்களினூடாக வினவி அங்கவீனமுற்ற நபர்களின் அர்த்தமுள்ள சம்பவம் மற்றும் உரிமைகளினை மேம்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கையினையும் எடுத்தல்.

iv. அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களினைப் பாதுகாப்பதற்கான முன்மொழிவுத் திட்டங்களினை பரிந்துரைத்தல்.

v. அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்கான முன்மொழிவுத் திட்டங்களினை ஆரம்பித்தல் மற்றும் செயலாக்குதல்.

vi. அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான சர்வதேசப் பிரகடனங்கள் மற்றும் அங்கீகாரங்கள் அரசினால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் மற்றும் பின்பற்றப்படுவதற்கும் பொறுப்பு நிற்றல்.

vii. அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் மிகவும் சிறந்த வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குவதற்குப் பொறுப்பு நிற்றல்.

viii. அங்கவீனமுற்ற நபர்களினைப் பாதுகாப்பதற்கு நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுதல், அவற்றிற்கு உதவுதல், அச்செயற்பாடுகளினை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.

ix. அங்கவீனமுற்ற நபர்கள் அணுகக்கூடியவாறு பௌதிகச் சூழலொன்றினை அமைக்கும் வேலை ஒழுங்குகளினை அறிமுகப்படுத்துதல், தகவல்கள், தொடர்பாடலுக்கான அணுகல் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்குக் கிடைக்கக்கூடிய முன்மொழிவுத் திட்டங்களினை அமுலாக்குதல்.

1.6.9 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆரம்பம் தொடர்பில் நோக்குவோமாயின், 1952 ஆம் ஆண்டில் சில தன்னார்வத் தொண்டு அமைப்புக்களின் பங்குகொள்ளலுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள "சமூகப் பணி தொடர்பிலான நிறுவனமாகும்". 1964 ஆம் ஆண்டில் இது அரசுக்கு ஒப்படைக்கப்பட்டதுடன், "லங்கா சமூக சேவைகள் பாடசாலை" எனப் பெயரிடப்பட்டது. அதன் பின்னர் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் பட்டத்தினை வழங்கும் நிறுவனமொன்றாக மாற்றப்பட்டது.

1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க என்ற தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு நிறுவனத்தின் பின்வரும் நோக்கங்களினை எட்டச் செய்வதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

- தொழில்வாண்மை சமூகப் பணிக்கல்வி, சமூக நலன்புரி முகாமைத்துவம் மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பில் உயர் பாடநெறிகளினை நடாத்துதல், மேம்பாடு மற்றும் அவற்றினைச் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மட்டத்திறிக்குக் கொண்டு செல்லுதல்.
- பயிற்சிப் பாடநெறிகளினை விரிவுபடுத்துதல், வலுவூட்டுதல், சமூக நலன்புரி தொடர்பில் மனித வளத்தினை மேம்படுத்தும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து அவற்றினை நடாத்துதல், குறைந்த பயன் பெறுபவர்களினை வலுவூட்டுதல், மனித திறன்கள் மற்றும் தொழில்வாண்மை மேம்பாட்டினூடாக நபர்களுக்கு மிகவும் சிறந்த வாழ்க்கை மட்டத்தினை வழங்குதல்.
- சமூகப் பணிக் கல்வி, பயிற்சி, சமூக நலன்புரி மற்றும் அபிவிருத்திக்கான ஆய்வுச் செயற்பாடுகள், மேம்பாடு மற்றும் முன்னெடுத்துச் செல்லுவதனூடாக சமூக அபிவிருத்தி துறையில் முன்னேற்றத்தினை வழங்குதல்.
- சமூக நலன்புரி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பிலான கொள்கைகளினைத் தயாரிப்பதற்கும், திட்டமிடுவதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்கும் தேவையான விசேட பங்களிப்பினை வழங்குதல்.
- மேற்குறிப்பிட்ட சகல நோக்கங்களையும் வெற்றிகரமாக அடைவதற்குத் தேவையான நிதிசார் கல்வி, வர்த்தகம், மனித ஆற்றல் மற்றும் விசேடமாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்திற்கு நிரந்தரமான இடமொன்றினை ஸ்தாபித்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளினை உள்ளடக்கி பிற வளங்களினைப் பெற்றுக் கொள்ளுதல்.

1.6.10 கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்

கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம், 1974 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போது, அது, சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. இது, 1978 ஆம் ஆண்டில் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் மூலோபாயமொன்றாக,அபிவிருத்தி நீரோட்டத்தில் ஓரங்கப்பட்டப்பட்ட அல்லது ஓரங்கட்டப்பட்ட வறிய சமுதாயத்தின் சாத்தியமான ஆற்றலினை உயர்த்தி, அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் கூட்டுத்தன்மையினை வளர்த்துக் கொள்ளுவதற்கு பங்களிப்பு மேம்பாட்டு எண்ணக்கருவின் அடிப்படையிலான வேறுபட்ட செயற்பாட்டுப் பயிற்சி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தினூடாக புதிய அபிவிருத்தி மூலோபாயமொன்றினை அறிமுகப்படுத்திய தேசிய நிறுவனமொன்றாகும்.உற்பத்தியின்போது, விற்பனையின்போது, நுகர்வின்போது மற்றும் கடன் செயற்பாடுகளின்போது வறிய சமுதாயம் முகங்கொடுக்கும் பாதகமான நிலைமையினை மிகவும் சாதகமான நிலைமையாக முழுமையாக மாற்றுவதற்கு தேவையான வலுவூட்டும் வினையூக்க செயல்முறை இந்நிறுவனத்தின் கடமைப் பொறுப்பொன்றாகும். பரிசோதனையின் மூலம் செயலில் கற்றல் செயல்முறை என்பது ஒரு சமூக உயிரோட்டமானது ஆகும். அதாவதுமுதியோர் கல்விக்கு ஒரு புதிய அணுகுமுறையைப் பயன்படுத்துகிறது. பங்கேற்பு மேம்பாட்டு முறை பின்னர் இலங்கையில் கிராமப்புற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு நோக்கத்துடன் செயற்படுத்தப்பட்ட அனைத்து தேசிய மற்றும் பிராந்திய அபிவிருத்தி திட்டங்களுக்கும் மாற்றியமைக்கப்பட்டது. இதன் பயிற்சி செயன்முறையின் மூலம், மேம்படுத்தப்பட்ட 12 பயிற்சி மாதிரிகள் தொடர்பில் கிராமப்புற மற்றும் பிரதேச மட்டத்தில் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள அரச, அரச சார்பற்ற மற்றும் 12 பயிற்சி மாதிரிகள் தொடர்பில் கிராமப்புற மற்றும் பிரதேச மட்டத்தில் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள அரச, அரச சார்பற்ற மற்றும் சமுதாய அமைப்புப் பணியாளர்களுக்குப் பயிற்சியினூடாக அவர்களினை வலுவூட்டுவது இடம்பெற்று வருகிறது.

1.6.11 இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தினூடாக அதன் விடயப் பரப்பினை மேலும் விரிவுபடுத்தி, சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் அமுலாக்கப்படும் அரச நியதிச்சபை நிறுவனமொன்றாகும்.

அரச சேவையில் ஓய்வூதியமற்ற சகலருக்கும் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்களினை வழங்குதல் சபையின் கடமைப் பொறுப்பாகும். இங்கு சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர், பிரத்தியேத் துறையின் சேவையிலுள்ளோர், வெளிநாட்டுச் சேவையிலுள்ளோர், கலைஞர்கள் மற்றும் சுதேச வைத்தியர்கள் போன்ற சகல துறைக்கும் சேவைகளினை வழங்குதல் இதன் கடமைப் பொறுப்பாகும்.

1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியான நோக்கங்கள் பின்வருமாறாகும்.

- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அவர்களின் வயோதிபக் காலத்தில் அல்லது அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்படும்போது, அக்காலத்தில் அவர்களுக்குச் சமூகப் பாதுகாப்பினைச் செய்து கொடுத்தல்.
- சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மரணிக்கும்போது, அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நிவாரணத்தினை வழங்குதல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களினை உரிய தொழிற் பயிற்சிகளில் ஈடுபடும்படி வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
- சுய தொழில்களில் ஈடுபடும் இளைஞர்களினை வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளினை மேம்படுத்துதல்.
- சிக்கனமாகவிருத்தல் மற்றும் வள முகாமைத்துவத்தின் பலாபலன்கள் தொடர்பில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களினை விழிப்புணர்வூட்டுதல்.
- பொதுவாக சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களின் வாழ்க்கைத தரத்தினை மேம்படுத்துதல்.

1.6.12 பிராந்திய அபிவிருத்தி வங்கி

பிராந்திய அபிவிருத்தி வங்கியின் ஆரம்பம், 1985 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் அமுலாக்கப்படும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினை அமைத்தல் வரை நீண்டு சென்றுள்ளது. 1997 ஆம் ஆண்டின் இறுதியில் 17 பிராந்திய அபிவிருத்தி வங்கிகள், ரஜரட்ட, ருகுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி வங்கிகளாக மாகாண மட்டத்தில் செயற்படுத்தப்படும் 6 அபிவிருத்தி வங்கிகளாக நிறுவப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டின் மே மாதத்தில் ஆறு அபிவிருத்தி வங்கிகளினையும் ஒன்றிணைத்து பிராந்திய அபிவிருத்தி வங்கி தேசிய மட்ட வங்கியொன்றாக நிறுவப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி வங்கி முழுமையான அரச வங்கியொன்றாகும், இவ்வங்கி கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு அவர்களின் தேவைக்கேற்ப நிதிசார் வசதிகளினை வழங்குவதனூடாக கிராமியப் பொருளாதாரத்தினை வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. விசேடமாக "வெறுங்கால் வங்கியியல் எண்ணக்குவினை ("Barefoot Banking Concept")அடிப்படையாகக் கொண்டு வருமான பிரமிட்டின் நடுத்தர மற்றும் கீழ் அடுக்குகளுக்குப் புதுமையான மற்றும் எளிய நிதி சேவைகளினை எமது வங்கி வழங்குகிறது.

பிராந்திய அபிவிருத்தி வங்கி, நுண்நிதிய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர்கள், பெண்கள் அதேபோல விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடி மற்றும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் போன்ற சகல பங்குதாரர்களினையும் வலுவூட்டுவதற்கு வங்கி ஆர்வமாக உள்ளது. அதேபோல சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களுக்கு அதிகூடிய வட்டியினை வழங்கி, கிராமப்புற மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதுடன், பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் சிறு பிள்ளைகளினையும் சேமிப்பதற்கு வலுவூட்டுகிறது.

இதன் விளைவாக எமது வங்கி 6 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களினைக் கொண்டுள்ளதுடன், சுமார் 3,000 க்கும் அதிகமான பணியாளர்களினை, 276 தமது சேவை நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்தியுள்ளது.

1.6.13 அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்

அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனம், 2020 புதிய அரசின் கீழ் 2205/15 என்ற இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பொதுத் திறைசேரிக்கு சகல பங்குகளும் உரித்தான வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாகும்

நோக்கம்

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத பொருளாதார வளங்களினை அபிவிருத்தி செய்வதற்கும், நிர்வகிப்பதற்கும், மூலோபாயத் திட்டங்களினை உருவாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் நிறுவப்பட்ட நோக்கங்களினை அடைவதற்கு தேசிய நிறுவனங்களினை வழிநடத்துவதன் மூலம் தேசியப் பொருளாதாரத்திற்குத் திறம்பட பங்களிப்பு வழங்குதல்

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

நிர்வாகப் பிரிவு

முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிர்வாகப் பிரிவினால் இராஜாங்க அமைச்சின் பதவியணி தொடர்பில் பின்வருமாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

I. உளப்பாங்கு மற்றும் அறிவு விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

II. திறன் மற்றும் அறிவு வளர்ச்சிக்கான பாடம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

- பொதுவான பாடம் தொடர்பான திறன்கள் மற்றும் அறிவு மேம்பட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
- வெளி வள நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட்ட பாடம் தொடர்பான திறன்கள் மற்றும் அறிவை வளர்ப்பதற்கான தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

(விரிவாக அறிக்கை பக்க இலக்கங்கள் 72, 73)

திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

முன்னேற்றம் மற்றும் விசேட சாதனைகள்

I. அமைச்சின் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினை வகுப்பதற்குத் தேவையான அடிப்படைத் தரவுகள் மற்றும் தகவல்களினைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

II. 2021 ஆம் ஆண்டுடன் தொடர்பிலான செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் தேவைப்பாட்டின் பிரகாரம் அச் செயற்பாட்டுத் திட்டம் திருத்தப்பட்டுள்ளது.

III. 2020 ஆம் ஆண்டுடன் தொடர்பிலான அமைச்சின் செயற்திறன் அறிக்கையினைத் தயாரித்துப் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

IV. 2021 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளினைத் தயாரித்தல்.

V. 2021 ஆம் ஆண்டின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் அமுலாக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கு காலாண்டு ரீதியில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல்.

VI. அமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்பிலான பல்வேறு பங்குதாரர்களுக்கிடையே சிறந்த ஒருங்கிணைப்பினை முன்னெடுத்துத் தேவைப்பாட்டின் பிரகாரம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை செயற்படுத்துதல்.

சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்

ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவு

I. சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களினை உருவாக்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகளின் அளவு ரூபா. 4,874.00 ஆகும்,

II. சௌபாக்யா மேம்பாட்டு பணியகத்தினூடாக அமுலாக்கப்பட்ட உற்பத்திக் கிராமங்களினை உருவாக்கும் செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் அளவு ரூபா. 4,825.00 ஆகும்.

III. தனிப்பெற்றாரினைக் கொண்ட குடும்பங்களின் செயற்திட்டத்திற்கு ரூபா.48.5 மில்லியன் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினூடாக வழங்கப்பட்டுள்ளது. (விவரங்களுக்கான பக்க இலக்கங்கள் 25, 26)

முன்னேற்றம்

I. 574 உற்பத்திக் கிராமங்களினை அமைத்தல்.

II. பொது உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்தும் செயற்திட்டங்கள் 1,436அமுலாக்கப்பட்டு நிறைவுபெறுதல்.

III. மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ரூ. 48 மி. பற்றுச்சீட்டுக்கள் செலுத்தப்படுதல்

IV. கையிலுள்ள ரூ. 73.49 மி. பற்றுச் சீட்டுக்கள் கொடுப்பனவு செய்யப்பட்டு நிறைவு பெறுதல்.

V. உற்பத்திக் கிராமங்களின் செயற்திட்டத்திற்கான நிதிசார் முன்னேற்றம் ரூ.2,811,610 மி. ஆகும்.

VI. 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கையிலுள்ள பற்றுச்சீட்டுக்கள் ரூ. 73.49 கொடுப்பனவு செய்யப்பட்டு நிறைவு பெயுதல்.

VII. கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களின் அளவு ரூ. 1,270.21 மி ஆகும்.

விசேட சாதனைகள்

சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகத்தின் தொடக்க ஆண்டான கடந்த வருடத்தில் பணியகத்தினால் பல சாதனைகளினை சுவீகரித்துக் கொள்ளுவதற்கு முடிந்துள்ளது.பல நிறுவனங்களினை ஒருங்கிணைத்து முன்னெடுக்கப்பட வேண்டிய புதுமையான நிகழ்ச்சித் திட்டமான சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களினை நிறுவுவது, குறிப்பாக 2021 ஆம் ஆண்டு முழுவதும் நாட்டினைப் பற்றிக் கொண்ட கொரோனா தொற்றுநோய்க்கு மத்தியிலும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாரம்பரிய மற்றும் புதிய எண்ணக்கருவின் கீழ் உற்பத்திக் கிராமங்கள் நாடுபூராவும் சகல மாவட்டங்களினை உள்ளடக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அதனினுள் சில உற்பத்திக் கிராமங்கள் இது வரையில் ஏற்றுமதிச் சந்தைக்கு புதிய உற்பத்திகளினை வெற்றிகரமாக முன்வைத்துள்ளதுடன், ஏற்கனவேயுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு முகங்கொடுத்து இறக்குமதி மாற்றீடுகளினை உள்ளூர் சந்தைக்கு வழங்குவதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் நுகர்வோர்களுக்கும் இவ் உற்பத்திக் கிராமங்களினை அமைத்ததனூடாக நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல வாழ்வாதார மேம்பாட்டிற்காக நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளினூடாக வழங்கப்பட்ட ஆதரவைக் கருத்திற் கொண்டு நாடுமுழுவதும் உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவது முன்னெடுக்கப்பட்டது. உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம், அடிப்படை இலக்குகளினை மீறி மிக உயர்ந்த செயற்திறனினை எட்டியுள்ளது. இதன் பிரகாரம், ஆரம்ப இலக்காக ஆயிரத்து இருநூற்றி ஐம்பது உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களினை அபிவிருத்தி

செய்வதாக இருந்போதிலும், வருட இறுதிக்குள் மொத்தமாக ஆயிரத்து நானூற்று முப்பத்தாறு உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களினை அபிவிருத்தி செய்வதற்கு இயலுதல் உன்னதமான சாதனையொன்றாக குறிப்பிட முடியும்.

சவால்கள் மற்றும் எதிகால இலக்குகள்

உற்பத்திக் கிராமங்களின் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் சுயாதீனமான உற்பத்தி அலகுகளினை செயற்படுத்துவது பேண்தகு அபிவிருத்திக்கு இன்றியமையாத காரணியாகும். கடந்த வருடத்தில் நாட்டில் காணப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள், அவ்வப்போது நாடு மூடப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக சில உற்பத்திக் கிராமங்களினைத் திட்டமிட்டவாறு பூர்த்தி செய்வதற்கு முடியாது போனமை இப் பணியகம் எதிர்கொண்ட சவால்களின் ஒன்றாகும்.

இச்சவாலினைச் சமாளிப்பற்கு கடந்த ஆண்டில் நிறுவப்பட்ட உற்பத்திக் கிராமங்களினை மேம்படுத்துவதற்கான அத்தியாவசியக் கூறுகளினைப் பூர்த்தி செய்வதற்கு சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகத்தினூடாக 2022 ஆம் ஆண்டுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் புதிய உற்பத்தியாளர்களினைத் திட்டத்தில் சேர்த்தல், உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செயல்முறையினை மேம்படுத்துவதற்கும், உற்பத்தித் திறனினை மேம்படுத்துவதற்கும் உதவுகின்ற புதிய எந்திரங்களினை வழங்குதல், புதிய தொழில்நுட்பம் மற்றும் பயிற்சியினை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விரிவான விளம்பரமொன்றினை, இவ் உற்பத்திக் கிராமங்கள் வழங்குவதனூடாக உற்பத்திக் கிராமங்கள் தொடர்பில் புதிய சந்தைகளினைத் திறப்பதற்கும் மற்றும் நிலையான சந்தையொன்றினை உருவாக்குவதற்கும் இலக்கிடப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூர் பொருளாதாரத்தின் முக்கிய அங்கமான சுற்றுலாத் துறையானது, 2022 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் அனைத்து மாவட்டங்களினையும் உள்ளடக்கி ஊக்குவிப்பு உற்பத்திக் கிராமங்களினை நிறுவுவதை நோக்கமாகக் கெண்டுள்ளதுடன், இதன் கீழ் பல்வேறு கருப்பொருள்கள் தொடர்பாக மிகவும் புதுமையான சுற்றுலா அனுபவத்தினை, உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உளவளத்துணைப்ப பிரிவு

விசேட சானைகள் மற்றும் முன்னேற்றம்

மொத்த வருடாந்த ஒதுக்கீடுகள் (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
10.232	**10.128**

I. தரப்பட்டுத்தப்பட்ட உளவளத்துணைச் சேவையினை வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட சட்டவரைவினை தயாரிப்பதற்கு ரூ. 0.133 மி. செலவு செய்யப்பட்டு 116 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

II. முறைசார் திட்டமொன்றுடன் மறுவடிவமைக்கப்பட்ட 24 மணி நேர கையடக்கத் தொலைபேசி உளவளத்துணைச் சேவையினூடாக 2,662 பயனாளிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

III. உளவளத்துணை சேவையினை ஊக்குவித்தல் தொடர்பில் சேவை நாடியினர்களினை இனங்காணும் தாள்கள் 41,000, உளவளத்துணை கைநூல் (சிங்களம்) 50,000, உளவளத்துணை கைநூல் (தமிழ்) 10000 அச்சிடுதல் மற்றும் உளவணத்துணை பிரிவு தொடர்பில் இணையப் பக்கமொன்றினைத் தயாரித்தல்.

IV. தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிக்கப்பட்ட உளவளத்துணை செயற்பாடுகள் தொடர்பிலான கூட்டங்கள் 77 நடாத்தப்பட்டுள்ளன.

V. சமூகம், உளக்கோளாறுகளுக்கு ஆளாகுவதைத் தடுப்பதற்கு குழு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டது.

VI. சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1,041 உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை. (பயனாளிகளின் எண்ணிக்கை -34,735 ஆகும்.)

VII. அரச உத்தியோகத்தர்கள்/சமூகம்/கல்வி போன்ற துறைகள் தொடர்பில் 1,179 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை. (பயனாளிகள் -52,884)

VIII. Zoomதொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி 435 பேர் பங்குகொள்ளலுடன் 03 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை.

IX. உளவளத்துணை சேவையினை மிகவும் விரிவுபடுத்தும் நோக்குடன் சித்சரண உளவளத்துணை நிலையங்களினை நிர்மாணித்தல். இடங்களினை ஒதுக்குதல், பராமரிப்புச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல் மற்றும் அலுவலக உபகரணங்களினை வழங்குதல் இடம்பெற்றுள்ளது.

X. ஒன்லைன் தரவுத் தளமொன்றினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு இலங்கை ரெலிகொம் நிறுவனத்திற்குக் கொடுப்பனவினைச் செய்வதற்கு 2,091 சேவைநாடியினர் தொடர்கள் நடாத்தப்பட்டமை.

எதிர்கால இலக்குகள்

I. சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களின் பயனாளிகளின் உளத்தினை வலுவூட்டி மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார வலுவூட்டுதல் தொடர்பில் உளவளத்துணை தலையீடு.

II. அபிவிருத்திசார் மற்றும் தீர்வுசார் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்தி உளவியல் சிக்கல்களினைக் குறைத்தல்

III. பிரதேச மட்டத்தில் அமுலாக்கப்படும் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் சமுதாயப் பங்களிப்பினை மேம்படுத்துதல்.

IV. உளவளத்துணை சேவையில் ஈடுபட்டுள்ள உளவளத்துணையாளர்கள் மற்றும் நிறுவனங்கள் அங்கீகரித்துள்ள முறையான ஒழுங்குமுறைத் திட்டமொன்றினூடாக உளவளத்துணைசேவை தொடர்பில் சமுதாயத்தினுள் நம்பகத்தன்மையினைக் கட்டியெழுப்புதல்.

V. உளவளத்துணை சேவை தேவையான எனினும் அது தொடர்பில் நேரடியாக முன்நிற்பதற்கு தயக்கம் காட்டுபவர்கள் அல்லது இயலாத பயனாளிகளுக்கு தொலைபேசி வசதிகளினூடாக உளவளத்துணை சேவையினை வழங்கும் திட்டத்தினை மேம்படுத்துதல்.

VI. உளவளத்துணை சேவை தொடர்பாக சமூகமயப்படுத்தப்பட்ட பல்வேறு கருத்துக்களை சரிசெய்தல் மற்றும் தெளிவான புரிதலை சமூகமயப்படுத்துதல்

VII. மனநோய்கள் மற்றும் உள ஆரோக்கியத் துறைகள் தொடர்பில் சமூகத்திலுள்ள இழிவுபடுத்தும் முத்திரைகளை அகற்றி ஆலோசனை சேவைகளுக்கு முன்வைப்பதற்கு வசதிகளினை எளிதாக்குதல்

VIII. உளவளத்துணை சேவை தொடர்பில் காணப்படும் புதிய போக்குகள் மற்றும் முறை நுட்பங்கள் தொடர்பில் கற்கை ஆய்வினை முன்னெடுப்பதற்கு வாய்ப்புக்களினை மேம்படுத்துதல்.

அமுலாக்கியவேளையில் முகங்கொடுத்துள்ள சவால்கள்

I. கிராமப்புற மட்டத்தில் செயலாக்கப்படும் உளப்பாங்கு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், நிதி கல்வியறவு தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், வாழக்கை இலக்கினை கட்டியெழுப்புதல் போன்ற உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் இளைஞர்களின் பங்கேற்பு மிகவும் குறைவாக எடுத்துக் காட்டப்படுவதனூடாக அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்களிப்பு முறையாக கிடைக்காமை.

II. குடும்பத் தொடர்புகள் மற்றும் பிள்ளைகளின் பிரச்சினைகளில் கணவன் மற்றும் மனைவி போன்ற இருவரினதும் பங்களிப்பு அத்தியாவசியமானபோதிலும் கணவனின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுவது கடினம் என்பதால் தலையீடு செய்தல் வெற்றியளிக்காமை.

III. உளவளத்துணை சேவையினூடாக உடனடித் தீர்வுகளினைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதுடன், அது தொடர்பில் பல அமர்வுகளில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால் பொருளாதாரக் கஸ்டங்கள் காரணமாக சேவைநாடியினர் உளவளத்துணைகளின் பல அமர்வுகளில் கலந்துகொள்ளுவதற்கு இணக்கத்தினைக் காட்டவில்லை.

IV. உளநோய்கள் மற்றும் உள ஆரோக்கியத் துறை தொடர்பில் சமூகத்தில் நிலவும் களங்கப்படுத்தப்பட்டு ஒட்டப்பட்ட முத்திரைகளினால் உளவளத்துணை சேவையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்வருவதற்குத் தயக்கம் காட்டுதல்.

V. உளவளத்துணை சேவையினை வழங்குவதற்கு உகந்த சூழல்/சூழலுடனான குறைந்த மட்ட அல்லது போதிய வசதிகளினைக் கொண்ட உளவளத்துணை நிலையங்கள் அல்லது உளவளத்துணை அறைகள் அநேகமான மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இல்லாமை.

VI. தற்போது ஊடகத்துறையின் பல்வேறு செயற்பாடுகளின் காரணமாக உளவளத்துணை சேவை மற்றும் வாழ்க்கைத்தொழில் தொடர்பில் சரியானதும் மற்றும் தெளிவானதுமான புரிந்துணர்வு சமுதாயத்தில் காணப்படாமை.

VII. உளவளத்துணை சேவை தொடர்பில் நிலவும் புதிய போக்குகள் மற்றும் நுட்பங்கள் தொடர்பிலான கற்கை ஆய்வினைச் செய்வதற்கு தற்போதுள்ள வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்.

VIII. உளவளத்துணை துறை தொடர்பில் விசேட நிபுணத்துவம் வாய்ந்த நிபுணர்களினை, வளதாரர்களாக அரச நிறுவனங்களின் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அவர்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இயலாது காணப்படுதல்.

IX. உளவளத்துணை துறை தொடர்பில் சர்வதேசப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்துகொள்ளுவதற்குள்ள வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் புதிய சட்ட வரைவு.

இச்சட்டம் விசேட குழுவொன்றினூடாக வரைவுபடுத்தப்பட்டுள்ளதுடன், இது வரையில் சகல செயற்பாடுகளும் நிறைவு பெற்று சட்டவரைஞர் திணைக்களத்தின் மூன்றாவது முறை கண்காணிப்புக்காக,2019.07.19 ஆந் திகதி முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும் புதிய அரசின் கீழ் தற்போது அமுலாக்கப்படும் சௌபாக்யா தொலைநோக்குக் கொள்கை நெறிகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட சட்ட வரைவு தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதால், திருத்தம் செய்யப்பட்ட சட்டவரைவுக்கு புதிய அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதால் அமைச்சினூடாக வரைவினை மீளவும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் பலசுற்றுக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு வரைவின் அதிகளவிலான பகுதி இதுவரை திருத்தப்பட்டுள்ளது.

சைகை மொழிச் சட்டவரைவு

சைகை மொழிச் சட்டவரைவுக் குழுவின் இணக்கத்துடன் திருத்தம் செய்யப்பட்ட சட்ட வரைவு, 2020.02.24 ஆந் திகதி சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. புதிய சைகை மொழியினை முறைசார் தொடர்பாடல் ஊடகமொன்றாக ஏற்றுக்கொள்ளுவதற்கு புதிய அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் 2020.12.17 ஆந் திகதி விஞ்ஞாபனமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் 2021.01.18 ஆந் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. 2021.12.23 ஆந் திகதி சட்ட வரைஞரினால் குறைபாடுகள் எடுத்துக்காட்டப்பட்டு அனுப்பப்பட்ட வரைவினைத் தயாரிப்பதற்கு 2021.12.30 ஆந் திகதி முன்னெடுக்கப்பட்ட சபையில் 8 பேரினைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளைகள் வர்த்தமானி

அரச கட்டிடங்கள், பிரசித்திபெற்ற இடங்கள் மற்றும் சேவைகளினைக் கொண்ட இடங்களினை, அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடிய முறையில் அமைப்பதற்காக 2006.10.17 ஆந் திகதிய 1467/15 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதனைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள 1619/24 என்ற இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தற்போது காணப்படும் நிலைமைக்குப் பொருந்தும் வகையில் மீளவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய துறை தொடர்பில் நிபுணத்துவத்தினைக் கொண்ட குழுவினூடாக திருத்தம் இடம்பெற்றுள்ளதுடன், இதுவரையில் குழுவின் இறுதி அவதானிப்பு இடம்பெற்று வருவதுடன், 2022 ஆம் ஆண்டில் இதனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வெள்ளைப் பிரம்பு வர்த்தமானி

அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கென 2021/27 என்ற இலக்க மற்றும் 2017.05.31 ஆந் திகதிய 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெள்ளைப் பிரம்பு விதிகள் வர்த்தமானி வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு பிற்கொடுப்பனவு பக்கேஜினை அறிமுகம் செய்தல்

அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பாடல் அணுகலினை உறுதிசெய்யும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கையடக்கத் தொலைபேசி பிற்கொடுப்பனவு பக்கேஜினை மேலும் வசதிகளினை விரிவுபடுத்தி அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு மிகவும் அதிகூடிய பயன்களினை வழங்கும் முறையில் தயாரிப்பதற்கும் மற்றும் ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா. 5000/- மாதாந்த வாழ்வாதார உதவியினை வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்தும் நோக்குடன் 2007 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்படும் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களின் குடுபங்களினை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வாழ்க்கை மட்டத்தினை உயர்த்துதல், ஊட்டச்சத்தினை அதிகரித்தல், உள மற்றும் சமூக நிலையினை மேம்படுத்துவதை இதில் அடையாளம் காணலாம்.

இதுவரையில் வழங்கப்பட்டுள்ள ரூபா. 3000 வாழ்வாதார உதவி, 2019 ஆம் ஆண்டிலிருந்து ரூபா.5000 ஆக அதிகரிக்கப்பட்டு, 32,000 பயனாளிகளுக்கு 40,000 புதிய பயனாளிகளினை ஒன்றிணைத்து மொத்த எண்ணிக்கையினை 72000 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
72,000	4,320.00	4,311.337

விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவியினை வழங்குதல்.

சுமார் 147 படுக்கையிலுள்ள நோயாளர்கள் தொடர்பில் சேவைகளினை வழங்கும் இராஜகிரிய விக்டோரியா இல்லத்தின் ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கொடுப்பனவுகளுக்கு மாதாந்தம் ரூபா. 7 இலட்சம் என்றவாறு ரூபா. 8.6 மில்லியன் நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
147	8.6	8.6

சிறுநீரக நோயாளர்களுக்கு ரூபா. 5,000/- வாழ்வாதார உதவிகளினை வழங்குதல்.

முழையிலேயே இனங்காணப்படாத நீண்டகால சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளினை வழங்குதல் 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்படுகிறது. ரூபா. 3000 வாழ்வாதார உதவியொன்றாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது ரூபா. 5000 வாழ்வாதார உதவியாக அமுலாக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் பரிந்துரையுடன் தீராத சிறுநீரக நோய் பரவியுள்ள 11 மாவட்டங்களிலுள்ள 84 பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நோயாளர்கள் ஜனவரி தொடக்கம் ஆகஸ்டு மாதம் வரை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், செப்ரெம்பர் மாதத்திலிருந்து நாட்டினை உள்ளடக்கும் வகையில், சகல வகையிலான சிறுநீரக நோயினால் வருந்தும் 39,169 பயனாளிகளுக்குக் கொடுப்பனவினைச் செய்வதற்கு முடிந்துள்ளது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
39,169	2,349.00	2,326.076

அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தொழில் பயிற்சியினை வழங்குதல்.

தொழிலில் ஈடுபடக்கூடிய நிலையிலுள்ள அங்கவீனமுற்ற நபர்கள் பிரத்தியேகத் துறையின் தொழிலுக்கு முன்வைக்கப்படுவர் என்பதுடன், அந்நிறுவனத்தினால் வழங்கப்படும் சம்பளத்திலிருந்து 50% (ஆகக்கூடியது ரூபா. 15,000 என்றவாறு) 24 மாதங்களுக்கு இவ் அலுவலகத்தினூடாக கொடுப்பனவினைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டு தொடர்பில் இக்கருத்திட்டத்தின் ஆரம்பக் கட்டச் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன. அதில், பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களினை அடையாளம் காணுதல், தொழில்களினை வழங்குவதற்கு இணக்கத்தினைத் தெரிவிக்கும் பிரத்தியேக நிறுவனங்களினை ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. அதன் பிரகாரம், சகல மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் கலந்துரையாடல்களினூடாகவும் அதேபோல சுற்றுநிரூபத்தினூடாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர் என்பதுடன், உடன்படிக்கையொன்றினூடாக பிரத்தியேக நிறுவனங்களினை ஒருங்கிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அடையாளம் காணப்பட்ட சுமார் 130 அங்கவீனமுற்ற நபர்களினை, 2021 ஆம் ஆண்டில் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு தொடர்பில் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதற்கு சுமார் 150 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
130	10.00	9.975

மருத்துவ உதவிகளினை வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் நீண்டகாலம் நோய்களின் பாதிக்கப்பட்டவர்கள், அங்கவீன நிலைக்கு உட்படுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகிறது. அதில் அரச மருத்துவசாலைகளில் வழங்கப்படாத மருந்துகளினைப் பெற்றுக்கொள்ளுவதற்கும், சிகிச்சைகளுக்குச் செல்லுவதற்கும், இருதயம், சிறுநீரகம், மூளை, இடுப்பு எலும்பு மற்றும் கோக்லியர் உள்வைப்புகள் போன்ற வேண்டிய சத்திர சிகிச்சைக்குத் தேவையான செலவுகளினை ஈடுசெய்வதற்குமென, ரூபா. 6000 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆகக்கூடியது ரூபா. 20,000 வரை இதன் கீழ உதவிகள் வழங்கப்படுகின்றன.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
967	13.592	13.592

உதவி உபகரணங்களினை வழங்குதல்

அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு உதவுமுகமாக, ஒன்றுதிரட்டும் மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மற்றும் அவர்களினைச் சுயாதீனமாக நபர்களாக உருவாக்குவதற்கும் மூக்குக் கண்ணாடிகள், சக்கரநாற்காலிகள், செவிப்புலக் கருவிகள், முச்சக்கர வண்டிகள், ஊன்றுகோல்கள், கையூன்றுகோல்கள் போன்ற உபகரணங்கள் என்றவாறும், காற்று மெத்தை, நீர் மெத்தை போன்ற விசேட உபகணரங்கள் தொடர்பிலும் ஆகக்கூடியது ரூபா. 20,000 வரையான நிதியுதவிகளினை வழங்குவது இடம்பெறுகிறது. இவ்வருடத்தில் 17 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டு 10,234 உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

கொமட் சக்கர நாற்காலிகள்	சக்கர நாற்காலிகள்	கையூன்று கோல்கள்	ஊன்று கோல்கள்	வோக்கர்	சிறுவர் சக்கர நாற்காலிகள்	மூக்குக் கண்ணாடிகள்	விசேட உபகரணங்கள்
49	53	38	15	11	02	10,061	5

திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

அங்கவீனமுற்ற நபர்களினதும் மற்றும் அங்கவீனமுற்ற நபர்கள் கல்வி கற்கும் விசேடக் கல்வி அலகுகள் தொடர்பிலும் அவர்களின் விளையாட்டுக்கள், கலைகள், அழகியல் திறன்கள் மற்றும் பிற கெட்டித்தனங்களினை மெருகூட்டும் நோக்குடன் ரூபா. 50,000 ஆகக்கூடியதன் கீழ் நிதி அனுசரணை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இடம்பெறுகிறது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
03நிறுவனங்கள்	0.15	0.15

சுய தொழில்களினை வழங்குதல்

குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களின் குடும்பங்களில் காணப்படும் வறுமையினைக் குறைப்பதற்கு சுய தொழிலொன்றினை ஆரம்பித்தல் அல்லது மேம்படுத்துவதற்கு நபர் ஒருவருக்கு அல்லது குடும்பமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா. 25,000 வரையான சுயதொழில் உதவிகளினை வழங்குவது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெறுகிறது. அதேபோல, சுய தொழில்களிளை ஒழுங்குபடுத்தல், உற்பத்திகளினை தரமிக்கதாக மேம்படுத்துவதற்கு வழிகாட்டல் மற்றும் விற்பனை தொடர்பான தலையீடும் இங்கே இடம்பெறுகிறது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
200 பயனாளிகள்	5.00	4.99

கல்வி உதவிகளினை வழங்குதல்.

குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற பிள்ளைகள் மற்றும் அங்கவீனமுற்ற பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவிகளினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்நாள்பூராவும் ஒரு தடைவை கிடைக்கப் பெறும் வகையில் ஆகக்கூடியது ரூபா. 10,000 என்றவாறு கல்வி உதவிகளினை வழங்குவதற்கு உதவிகள் வழங்கப்படுகிறது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
621 பயனாளிகள்	5.5	5.5

சுய தொழில் அமைப்புக்களினை வலுவூட்டுதல்

இச் செயலகத்தின கீழ் பதிவு செய்யப்பட்ட 144 நிறுவனங்கள் காணப்படுவதுடன், இந்நிறுவனங்களில் அநேகமானவை முறைசார் நிதியுதவிகள் கிடைக்கப் பெறாத நிறுவனங்களாகும். கிடைக்கப் பெறும் வேண்டுகோளின் பிரகாரம், களப் பரிட்சிப்பினூடாக உறுதிப்படுத்தியதன் பின்னர் அந்நிறுவனங்களின்

பௌதிக நிர்மாணிப்புக்கு ரூபா. இரண்டு இலட்சம் வரை நிதிசார் உதவிகளினை வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம் நடவடிக்கை எடுக்கிறது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
3 நிறுவனங்கள்	0.575	0.575

சர்வதேச அங்கவீனர் தினக் கொண்டாட்டம்

இத்தடைவை சர்வதேச அங்கவீனர்கள் தினக் கொண்டாட்ட வைபவம், "அங்கவீனமுற்ற நபர்களின் தலைமைத்துவம், பங்கேற்பு உட்பட, COVID – 19 க்குப் பிந்தைய அணுகக்கூடிய மற்றும் நிலைபேறான உலகத்தினை நோக்கி" என்ற தொனிப்பொருளினை மையமாகக் கொண்டு கொவிட் 19 தொற்றுநோய்க்கான சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம், 2021.12.03 ஆந் திகதி 100 அங்கவீனமுற்ற நபர்களின் பங்குகொள்ளலுடன் அப்பே கம வளாகத்தில் விழா நடைபெற்றது. இதேவேளை கல்வி, விளையாட்டு மற்றும் கலைத்துறைகளில் சிறந்து விளங்கிய அங்கவீனமுற்ற சிறுவர் சிறுமிகளுக்கான மதிப்பீடும் இடம்பெற்றது. இது தொடர்பிலான மொத்தச் செலவு ரூ. 3.457 என்பதுடன், இவ்வருடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூபா. 0.5 மில்லியனுக்கு மேலாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் முன்னைய ஆண்டுகளில் மீதமான நிதியும் பயன்படுத்தப்பட்டன.

வீடமைப்பு உதவிகளினை வழங்குதல்

எந்தவொரு வருமானமுமற்ற காணி தொடர்பில் உரித்தினைக் கொண்டிருந்தபோதும் வீடொன்று இல்லாத அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடு ஒன்றினைக் கட்டும் நிகழ்ச்சித் திட்டம் 2001 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்படுவதுடன், தேசிய லொத்தர் சபையின் சுப்பிரி வாசனா சீட்டிழுப்பினூடாக கிடைக்கப் பெறும் வருமானத்திலிருந்து 5% வருடந்தோறும் இந்நிதியம் தொடர்பில் ஒதுக்கி நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா. 250,000 நிதியும், பழுதுபார்ப்பதற்கு ரூபா. 150,000 நிதியும் தவணை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

ஒதுக்கீடுகள் போதாமையின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் மந்தகதியிலுள்ளது என்பதுடன், வீட்டுக் கனவுடன் காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களின் எண்ணிக்கை 1027 க்கும் அதிகமாகும்.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
155தவணைகள்	10.50	11.79 (கடந்த வருடத்தின் காசோலைகள் மீளவும் கிடைத்தலினை உள்ளடக்கி)

தனிப் பெற்றாரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

வாழ்க்கைத் துணை மரணித்தல், பிள்ளைகள் மற்றும் வாழ்க்கைத்துணை கைவிட்டுச் செல்லுதல் போன்ற காரணங்களினால் தனிப் பெற்றாராக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை துரிதகதியில் உயர்ந்துள்ளமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. இக்குடும்பங்கள் முகங்கொடுக்கும் பொருளாதார, சமூக, உளநிலை மாற்றங்களினைத் தவிர்ப்பதற்கு உதவிக்கரம் வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம்

அமுலாக்கப்படுகிறது. அதன் பிரகாரம், சில துணை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்ப நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இது தொடர்பிலான ஒதுக்கீடுகள் இச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், சௌபாக்யா உற்பத்திக் கிராமத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து ரூ. 48.5 மி.ஒதுக்கப்பட்டுள்ளது. (பக்க இலக்கம் 17).

நிகழ்ச்சித் திட்டம்	வருடாந்த ஒதுக்கீடுகள் (ரூ.மி.)	2021.12.31 ஆந் திகதிய நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	பயனாளிகளின் எண்ணிக்கை
தனிப் பெற்றாரினைக் கொண்ட குடும்பங்ளுக்குச் சுயதொழிலினை வழங்குதல்.	20.53	19.501	667 பயனாளிகள்
தனிப் பெற்றாரினைக் கொண்ட பிள்ளைகளுக்குக் கல்வி உதவியினை வழங்குதல்.	27.39	27.696	3095 பயனாளிகள்
வாசிகசாலைகளினை ஆரம்பித்தல்	0.47	0.345	6 நிலையங்கள்
திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல்.	0.06	0.060	2 நிகழச்சித் திட்டங்கள்
கள ஆய்வு	0.05	0.023	1கள ஆய்வு(கண்டி)
மொத்தம்	**48.50**	**47.625**	

சைகை மொழியினை மேலதிக பாடமொன்றாக நிறுவுதல்

அரச உத்தியோகத்தர்ளுக்கு சைகை மொழியினை மேலதிகப் பாடமொன்றாக அமைத்து அவர்களினை இச் செயற்பாட்டில் வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதன் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களுக்கு அரச சேவையில் அதிகபட்ச பயன்களினைப் பெற முடியும். இது தொடர்பில் உரிய விடயப் பரிந்துரைகள் போன்றன தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உரிய சுற்றுநிரூபங்கள், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

04 பராமரிப்பு நிலையங்களினை அமைத்தல்.

நாடுபூராவும் 6 பராமரிப்பு நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு அமைப/18/0755/711/015 என்ற இலக்கப் பத்திரத்தினூடாக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது, 2021 ஆம் ஆண்டு தொடர்பில் 04 நிலையங்களினை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்ட காணிகளினைச் சுவீகரிப்பதில் சட்டரீதியிலான சிக்கல்களின் காரணமாக தடை ஏற்பட்டுள்ளமையினால், இதுவரையில் அக்குரஸ்ஸ மற்றும் தம்புள்ள போன்ற பிரதேசங்களிலுள்ள 02 காணிகளினை சுவீகரிக்க முடிந்துள்ளது.

மாகாணம்	இடம்	தற்போதைய நிலவரம்
தெற்கு	அக்குரஸ்ஸ	திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கொள்முதல் செயற்பாடுகளுக்குECDசெயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
மத்தி	தம்புள்ள	உலக வங்கியினால் இதன் சுற்றுச்சூழல் அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. காணியினை அளக்கும் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளமையினால் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தேசியக் கட்டிடத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுவருகிறது.

விசேட சாதனைகள்

கொவிட் 19 தொற்றுநோயினை எதிர்கொண்டபோதிலும் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினை வெற்றிகரமாக நிறைவேற்றி அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி மற்றும் உரிமைகளுக்கென ஆகக்கூடிய பயன்களினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முடிந்துள்ளது.

எதிர்கால இலக்குகள்

I. 2022 ஆந் திகதியளவில் சைகை மொழிச் சட்ட வரைவினை அங்கீகரித்தல்.

II. தற்போது திருத்த மட்டத்திலுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கு பிரவேசிப்பு வசதிகளினை வழங்கும் வர்த்தமானியின் செயற்பாடுகள் நிறைவு பெறுதல்.

III. 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைவுத் திருத்தங்கள் 2022 ஆம் ஆண்டளவில் நிறைவு பெறுதல்.

IV. 2022- 2023 ஆம் ஆண்டளவில் அங்கவீனமுற்ற நபர்களுக்குப் பாதுகாப்பினை வழங்கும் 02 நிறுவனங்களினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

V. 2022 ஆம் ஆண்டில் சைகை மொழியினை, அரச உத்தியோகத்தர்கள் தொடர்பிலான மேலதிகப் பாடமொன்றாக அமைத்தல்.

VI. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நாளதுவரைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

முன்னேற்றம் மற்றும் எதிர்காலச் சாதனைகள்

திறைசேரி ஒதுக்கீடுகளினூடாக அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

- சமூக சேவைப் பாடசாலையினூடாக அமுலாக்கப்பட்ட பாடநெறிகள்

  I. சமூகப் பணியில் இளங்கலைப் பாடநெறிகள்
  சிங்கள மொழிப் பாடநெறிகள் 3ம், தமிழ் மொழிப் பாடநெறிகள் 3ம், ஆங்கில மொழிப் பாடநெறிகள் 6 ம் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டுள்ளதுடன், பங்குகொண்ட மாணவர்கள் 130 ஆகும். இது தொடர்பில் ரூபா. 1.75 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

  II. சமூகப் பணி தொடர்பில் உயர் டிப்ளோமாப் பாடநெறிகள்
  சிங்கள மொழிப் பாடநெறிகள் 3 மற்றும் தமிழ் மொழிப் பாடநெறிகள் 3 நடாத்தப்பட்டது. மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 89 ஆகும். இது தொடர்பில் ரூபா. 0.3 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

- பயிற்சிப் பிரிவினூடாக அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

  இப்பிரிவினூடாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் கொழும்பு தலைமை நிலையம், ரன்ன, தலாவ, அம்பாறை, கிளிநொச்சி போன்ற பிரதேசப் பயிற்சி நிலையங்கள், திருகோணமலை, மாத்தறை, குருனாகல், மட்டக்களப்பு, இரத்தினபுரி, கண்டி போன்ற நகரங்களினை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டது அது தொடர்பில் 5863 பயனாளிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், மொத்தச் செலவு ரூபா. 0.95 மில்லியனாகும்.

- சமூக அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் வெளியீட்டுப் பிரிவினூடாக இடம்பெற்ற ஆராய்ச்சி, ஆய்வு தொடர்பில் வெளியீடு செய்யப்பட்ட பிரசுரங்கள்.

I. கல்விச் செயற்பாடுகள் சபையின் அங்கீகாரத்தின் கீழ் சமூக நாளேடு அரையாண்டுதயாரிக்கப்பட்டுள்ளது. நிதிசார் முன்னேற்றம் - ரூபா. 42,000/- ஆகும்.

II. கல்விச் செயற்பாடுகள் சபையின் அங்கீகாரத்தின் கீழ் சமூக அபிவிருத்தி நாளேடு அரையாண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. - நிதிசார் முன்னேற்றம் ரூபா. 18,000/- ஆகும்.

III. E-Journal அரை ஆண்டு வெளியீடு இணையத்தில் வெளியீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் - நிதிசார் முன்னேற்றம் ரூபா. 27,000/- ஆகும்.

IV. செய்திக் கதிர் அச்சிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. நிதிசார் முன்னேற்றம் ரூபா. 202,000/- ஆகும்.

V. வருடாந்த நூல்களினை வெளியீடு செய்தல் Book Launch- நிதிசார் முன்னேற்றம் ரூபா. 48,180/ ஆகும்.

VI. மாணவர் சமூகப் பணி இதழ் 2021 -தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளினை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். நிதிசார் முன்னேற்றம் ரூபா. 7,500/- ஆகும்.

VII. ஆராய்ச்சித் திட்டம் தொடர்பிலான சான்றிதழ் பாடநெறியின் விடயப் பரிந்துரையினை மேம்படுத்துதல்.

VIII. கொவிட் 19 வைரசால் பாதிக்கப்பட்ட சமூகம் அதிலிருந்து மீண்ட பின்னர் சமூகத் தொடர்புகளில் எதிர்கொள்ளும் உளவியல் சிக்கல்கள் பற்றிய ஆய்வு - தரவு சேகரிப்பு, தரவு உள்ளீடு, தரவு திட்டமிடல் மற்றும் அறிக்கை எழுதுதல்.

IX. கொவிட் 19 காலத்தில் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் கழிவு முகாமைத்துவத்தினை முன்னெடுக்கும்போது சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கம், எதிர்காலச் சமூகத்தின் பின்னடைவு - தரவு சேகரிப்பு, தரவு உள்ளீடு, தரவு வடிவமைப்பு மற்றும் அறிக்கை எழுதுதல்.

X. சமுர்த்தி உற்பத்திக் கிராமங்களின் சமூக, பொருளாதார நிலையினை அலசி ஆராயும் மதிப்பீட்டுக் கற்கை ஆய்வு 2021 - தரவு சேகரிப்பு, தரவு உள்ளீடு,, தரவு வடிவமைப்பு மற்றும் அறிக்கை எழுதுதல் - நிதிசார் முன்னேற்றம் ரூ. 505,291,50 ஆகும்.

XI. சமூகக் கொள்கைகள் தொடர்பிலான கல்வி அறிக்கையினைத் தயாரித்தல் - ஆராய்ச்சித் தரவுகளினைச் சமூகமயமாக்குதல் மற்றும் புதிய ஆராய்ச்சிக்கு அறிஞர்களினை முன்வைத்தல் - நிதிசார் முன்னேற்றம் ரூபா. 170,000/- ஆகும்.

கட்டணங்கள் அறவிடப்பட்டு அமுலாக்கப்பட்ட பாடநெறிகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

- சமூக சேவைப் பாடசாலையினூடாக அமுலாக்கப்பட்ட பாடநெறிகள்

I. சமூகப் பணியில் முதுகலைப் பாடநெறி (MSW)

ஆங்கில மொழிப் பாடநெறிகள் 4ம், சிங்கள மொழிப் பாடநெறிகள் 3 ம், தமிழ் மொழிப் பாடநெறிகள் 3 ம் நடாத்தப்பட்டதுடன், சகல கல்வி ஆண்டுகளின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 130 ஆகும். பாடநெறிக் கட்டணங்களாக மாணவர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்ட நிதி ரூபா. 6.77 மில்லியன் ஆகும். செலவு செய்யப்பட்ட நிதி ரூபா. 1.75 மில்லியனாகும்.

- பயிற்சிப் பிரிவினூடாக அமுலாக்கப்பட்ட பாடநெறிகள்

I. முதியோர் கல்வி மற்றும் முதியோர் பாதுகாப்புத் தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறி (சிங்கள மொழி) மாணவர்களின் எண்ணிக்கை 19 ஆகும். மொத்தச் செலவு ரூபா. 0.795 மில்லியனாகும்.

II. உளவளத்துணை தொடர்பிலான டிப்ளோமாப் பாடநெறிகள்

சிங்கள மொழிப் பாடநெறிகள் 11 ம், தமிழ் மொழிப் பாடநெறிகள் 12 ம், ஆங்கில மொழிப் பாடநெறிகள் 2 ம் நடாத்தப்பட்டுள்ளதுடன், சகல இறுதி வருடங்களின் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 947 ஆகும். மாணவர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட்ட மொத நிதி ரூபா. 10,961 மில்லியனாகும் என்பதுடன் செலவு ரூபா. 10.416 ஆகும்.

கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகள் ரூபா. 14.9 மில்லியனாகும். 2021.12.31 ஆந் திகதிய மொத்தச் செலவு ரூபா. 12.7 மில்லியனாகும்.

I. ஆய்வுப் பிரிவு

சமுர்த்தி உற்பத்திக் கிராமங்கள் மற்றும் சௌபாக்யா உற்பத்தி குக்கிராமங்களில் இடம்பெற்ற சமூக - பொருளாதாரத் தாக்கம் மற்றும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களினை இனங்காணும் ஆய்வு

201 ஆம் ஆண்டில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், விவசாய அமைச்சின் பங்கேற்புடன் அமுலாக்கப்பட்ட சமுர்த்தி உற்பத்திக் கிராமங்கள் மற்றும் சௌபாக்யா குக்கிராமங்களின் நிகழ்ச்சித் திட்டத்தினூடாகத் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களினுள் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் மாற்றங்களினை ஆய்வு செய்தல் இடம்பெற்றது. இந்த ஆய்வுக்காக 2765 பயனாளி குடும்பங்களின் மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு நேர்காணல்கள், வினாடி வினாக்கள் மற்றும் இருதரப்பு முறைகள் மூலம் தகவல்கள் கேரிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகவல்களின் பகுப்பாய்வினூடாக பின்வரும் விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- உற்பத்திப் பொருட்களினைத் தரமானதாக மேம்படுத்துவதற்கு மேலதிக இயந்திரங்கள்/உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பக் கையாளுகை தொடர்பில் தொழில்முனைவோர் வெற்றிகரமாக நியமிக்கப்படுதல் தொடர்பானது.
- குடும்பத்தின் கூட்டு உழைப்புப் பங்களிப்பின் அடிப்படையில் இடம்பெற்ற வருமான உழைப்பு வழிகள் வெற்றிகரமாக உயர்ந்துள்ளது.
- நிறுவனம் மூலம் உழைக்கும் வருமானத்தில் அதிக நிதியினை முதலீடு செய்யும் தொழில்முனைவோர் மிகவும் வெற்றிபெறுகின்றனர் என்பது தொடர்பானது.
- வெற்றிகரமான தொழில்முனைவோருக்கு புதிய தொழில் வாய்ப்புக்களினை உருவாக்க முடியும். சமுர்த்தி வங்கி போன்ற தொழில்முனைவோருக்கு கடனினை வழங்கும் நிறுவனங்களூடாக கடனினைப் பெற்றுக் கொள்ளும் உற்பத்தியாளர்கள் பாரியளவில் வெற்றியடைந்துள்ளனர்.

- விழிப்புணர்வு பெற்ற சமுதாயத்தில் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வம் உயர் மட்டத்தில் காணப்படுவதன் காரணமாக அவர்களின் தொழில் வெற்றியடைந்துள்ளது.
- கிராமப்புற கள அலுவலர்களின் அதிக ஈடுபாட்டுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றி பெற்றுள்ளன. இது தொடர்பிலான செலவு ரூபா. 0.16 மில்லியனாகும்.

- வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான விடய ஆய்வு நிகழ்ச்சித் திட்டம்.
  முழு நாட்டினையும் உள்ளடக்கும் வகையில் 200 கிராமங்கள் பூராவும் விரிவுபடுத்தப்பட்ட சமுர்த்தி உற்பத்திக் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட
  கிராமங்கள் தொடர்பில் 25 விடய ஆய்வு இடம்பெற்றது. இது தொடர்பிலான செலவு ரூபா. 0.1 மில்லியனாகும்.
- கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் மனித வள மேம்பாடு.
  இதன் கீழ் கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பயிற்சிகள் மற்றும் ஆய்வுச் செயற்பாட்டில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களின் விடய ஆய்வுத் திட்டம் தொடர்பிலான அறிவு, திறமை மற்றும் உளப்பாங்கு விருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று அமுலாக்கப்பட்டதுடன், அது தொடர்பில் 23 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளனர். இது தொடர்பிலான செலவு ரூபா. 0.05 மில்லியனாகும்.
- கிராமிய அபிவிருத்தி தொடர்பில் பங்குதாரர் நிறுவனங்களினைத் தொடர்புபடுத்தி 2 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் 65 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

II. பயிற்சிப் பிரிவு

இவ்வருடத்தில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலையின் காரணமாக வகுப்பறை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துவதற்கிருந்த சிக்கலின் காரணமாக ஒன்லைன் ஊடாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களின் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் தொடர்புபடுத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

நிகழ்ச்சித் திட்டம்/ செயற்பாடு	வருடாந்த ஒதுக்கீடுகள் (ரூ.மி.)	செலவு (ரூ.மி.)	பௌதிக முன்னேற்றம்
தொழில் முனைவோவர் பயிற்சி	0.060	0.060	நிகழ்நிலை (ஒன்லைன்) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 19, கலந்துகொண்டோர் 850.
சமூகத்தினை உயிரூட்டும் இடையீட்டாளர் பயிற்சி	0.150	0.150	நிகழ்நிலை (ஒன்லைன்) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 37, கலந்துகொண்டோர் 1232
சமுதாய மட்ட அமைப்புக்களினை மேம்படுத்துவதற்குத் தலைமைத்துவப் பயிற்சி	0.200	0.020	நிகழ்நிலை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 02, கலந்துகொண்டோர் 90.
மொத்தம்	0.410	0.230	நிகழ்ச்சித் திட்டங்கள் 58, கலந்துகொண்டோர் 2172.

III. வெளியீடுகள் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவு

- பிரஜா சக்தி சஞ்சிகையினை வெளியிடுதல்.

  2021 ஆம் அண்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலையின் காரணமாக இச்சஞ்சிகையின் 01 மற்றும் 02 வது தொகுதிகள் அச்சிடப்படவில்லை என்பதுடன், நிறுவனத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- தரணய செய்திக் கதிரினை வெளியிடுதல்.

  இப் பிரசுரமும் அச்சிடப்படவில்லை என்பதுடன், நிறுவன இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நிறுவனத்தினால் இடம்பெற்றுவரும் ஆய்வுகள், பயிற்சிகள், வெளியீட்டுச் செயற்பாடுகளுக்கான தகவல்களினை, அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள், வறிய சமுதாயம் மற்றும் சமுதாய அபிவிருத்திப் பணியாளர்களுக்கு பரப்புவதனூடாக நிறுவனத்தினூடாக சமுதாயத்திற்குத் தேவையான சேவைகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வழிகாட்டுவதற்கு தரணய செய்திக் கதிரினை வெளியிடுவதற்கு நேரிடுதல்.

IV. நிறுவனம்சார் பயிற்சி வசதிகளினை மேம்படுத்துதல்.

கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனத்தினால் அமுலாக்கப்படும் பயிற்சி மற்றும் ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பொரள்ள தலைமை அலுவலகப் பயிற்சி நிலையத்திலும் மற்றும் பிலிமத்தலாவ பயிற்சி நிலையத்திலும் செயலாக்கப்படுகிறது. அதேபோல பயிற்சி நிலையங்களின் வசதிகள், வெளி நிறுவனங்களினாலும் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் நிலையின் காரணமாக வெளி நிறுவனங்களினால் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களே நடாத்தப்பட்டுள்ளன. எனினும், பொரள்ள பயிற்சி நிலையத்தினால் வெளி நிறுனங்களுக்கு சேவைகளினை வழங்கியதனூடாக இவ்வருடத்தில் ரூபா. 538,378.50 வருமானமொன்றினை உழைப்பதற்கு முடிந்துள்ளது.

கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் விரிவுரை மண்டபங்கள் மற்றும் தங்குமிடங்களினைப் புதுப்பிக்கும் செயற்பாடுகள் சற்று தாமதமாகியபோதிலும், ஆண்டின் நடுப்பகுதியில் புதுப்பிக்கப்பட்டது. 60 பேர் வரை அமரக்கூடிய 2 விரிவுரை மண்டபங்கள் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது. புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட விடுதியில் 30 பேர் வரை தங்க முடியும் என்பதுடன், சமையலறை மற்றும் உணவு புசிக்கும் மண்டபம் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் ரூபா. 5.3 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூபா. 3.7 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல்.

1996.01.01 தொடக்கம்2020.12.31வரையிலான சேகரிப்பு		2021.01.01 – 2021.12.31 வரையிலான சேகரிப்பு		2021.12.31 வரையிலா மொத்தச் சேகரிப்பு	
அங்கத்தவர்களின் எண்ணிக்கை	முதலாவது தவணை தொகை (ரூ.மி.)	அங்கத்தவர்களின் எண்ணிக்கை	முதலாவது தவணை தொகை (ரூ.மி.)	அங்கத்தவர்களின் எண்ணிக்கை	முதலாவது தவணை தொகை (ரூ.மி.)
776,993	512.51	57,803	126.33	834,796	638.84

பயன்கள் கொடுப்பனவு

I. ஓய்வூதியக் கொடுப்பனவு

1996.01.01 தொடக்கம் 2020.12.31 வரையிலான சேகரிப்பு		2021.01.01 – 2021.12.31		2021.12.31 வரையிலான மொத்தச் சேகரிப்பு	
அங்கத்தவர்களின் எண்ணிக்கை	பெறுமதி (ரூ.மி.)	அங்கத்தவர்களின் எண்ணிக்கை	பெறுமதி (ரூ.மி.)	அங்கத்தவர்களின் எண்ணிக்கை	பெறுமதி (ரூ.மி.)
31,769	2,265.75	32,976	356.9	32,976	2622.65

II. பணிக் கொடை செலுத்துதல்

விவரம்	1996.01.01தொடக்கம்2020.12.31 வரையிலான சேகரிப்பு		2021.01.01 - 2021.12.31 வரையிலான சேகரிப்பு			2021.12.31வரையிலான சேகரிப்பு	
	எண்ணிக்கை	பெறுமதி (ரூ.மி.)	எண்ணிக்கை	பணிக் கொடை நிதி (ரூ.மி.)	தேறிய பங்களிப்பு நிதி (ரூ.மி.)	எண்ணிக்கை	பெறுமதி (ரூ.மி.)
மரணப் பணிக் கொடை	2,267	39.51	26	1.5	-	2293	41.01
முழுமையான அங்கவீனப் பணிக் கொடை	35	9.71	-	0.7		35	10.41
பகுதியளவிலான அங்கவீனப் பணிக் கொடை	73		02			75	
முழுமையன அங்கவீன மாதாந்தக் கொடுப்பனவுகள்	27		27			54	

III. "ஆரஸ்ஸாவ" முன் திட்டமிடல் பிரேரணைத் திட்டத்தின் மேலதிகப் பயன்கள் கொடுப்பனவு

விவரம்	1996.01.01 தொடக்கம்2020.12.31 வரையிலான சேகரிப்பு		2021.01.01 தொடக்கம் 2021.12.31 வரையிலான சேகரிப்பு		2021.12.31 வரையிலான சேகரிப்பு	
	எண்ணிக்கை	பெறுமதி (ரூ.மி.)	எண்ணிக்கை	பெறுமதி (ரூ.மி.)	எண்ணிக்கை	பெறுமதி (ரூ.மி.)
ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை	1248	12.36	342	31	1590	43.36
க.பொ.த. (சா.த) பரீட்சை						
க.பொ.த. (உ.த) பரீட்சை						
தேறிய பங்களிப்புத் தொகைக் கொடுப்பனவு						

2021.01.01 தொடக்கம் 2021.12.31வரை நடாத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

I. தனியார் பேரூந்து ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன் பிரேரணைகள் திட்டத்தினை அறிமுகஞ் செய்தல்.

II. 2021.04.20 ஆந் திகதி நடாத்தப்பட்ட புதுபுத் மாபிய கரசர நிகழ்ச்சித் திட்டம்.

III. "கலைஞர்" பங்களிப்பு ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டம் சுயாதீன தொலைக்காட்சியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கென அறிமுகப்படுத்துதல்.

IV. "சௌபாக்யா வாரம் 3" சார்பாக மாலுமிகளுக்கு சமூகப் பாதுகாப்புப் பிரேரணைகள் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துதல்.

V. அரச சார்பற்ற அமைப்புக்களுடன் (NGO)இணைந்து ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்தினை மேம்படுத்துதல்.

VI. 2021 பணியாளர்களினை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

VII. சமூகப் பாதுகாப்புடன்கூடிய இளைஞர் சமுதாயத்தினை சுய தொழில் தொடர்பில் வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.

VIII. ஆலய ஊழியர்களுக்கு ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல்.

பிராந்திய அபிவிருத்தி வங்கி

பிராந்திய அபிவிருத்தி வங்கிக்கு வருடாந்தப் பாதீட்டினூடாக நிதி ஒதுக்கீடுகளினை ஒதுக்குதல் இடம்பெறவில்லை என்பதுடன், சகல மூலதனச் செலவுகள், மீண்டுவரும் செலவுகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித திட்டங்களுக்குத் தேவையான ஒதுக்கீடுகள் வங்கி வருமானத்திலிருந்து செலவு செய்யப்படுகிறது.

வழங்கப்பட்ட கடனின் அளவு மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை

கடனின் வகை	வழங்கப்பட்ட கடன் நிதி (ரூ.மி.)	பயனாளிகளின் எண்ணிக்கை
பயிர் வளர்ப்புக்கான கடன்	4,628.64	47,979
விவசாயக் கடன்	10,286.73	49,264
விவசாய உபகரணங்கள்	532.31	4,663
ஒடபன கடன்	180.48	24
நுகர்வோர் கடன்	17,430.87	25,465
வர்த்தகக் கடன்	20,364.03	98,406
மீன்பிடித் தொழில்	1,435.45	6,771
வீட்டுக் கடன்	233.37	304
தொழில்துறை கடன்	9,576.39	16,383
கால்நடைக் கடன்	4,635.62	64,776
பிற கடன்	50,083.97	628,568
மொத்தம்	**11,9387.86**	**942,603**

விசேட சாதனைகள்

I. பாலியகொட புதிய மெனிங் சந்தைத் தொகுதியின் சேவை நிலையமொன்றினை 2021.01.15 ஆந் திகதி அமைத்தல்.

II. "RDB சித்தம் பஞ்சா" ஓவியப் போட்டி உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு சிறுவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக RDB கெகுளு கணக்கினை மேம்படுத்துவது நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

III. சிறந்த தொழில்முனைவோரினைத் தெரிவு செய்யும் "திரி அபிமானி" நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்குதல்.

IV. பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யும் தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துதல் மற்றும் வாங்குபவர்களை எளிதாக்கும்onlineசேவையொன்றை,seilama.lkஎன்ற பெயரில் விரிவுபடுத்துதல்.

V. அரச ஓய்வூதியமொன்றுக்கு உரித்தினைக் கொண்டிராத பிராந்திய அபிவிருத்தி வங்கியின் வாடிக்கையாளர்கள் உட்பட சகலருக்கும் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்களினை அறிமுகப்படுத்துவதற்கு சமூகப் பாதுகாப்புச் சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினைக் கைச்சத்தாத்திடுதல்.

VI. QR வசதியினை, வணிக சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்துதல்.

VII. ஓய்வூதியர்கள் தொடர்பில் கைரேகைகளினைப் பெற்றுக் கொள்ளும் 20 எந்திரங்களினை எமது 20 கிளைகளில் அமைத்தல்.

VIII. "சௌபாக்யா வாரத்தில்" பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்தல்.

IX. RDB நடமாடும் வங்கி ஊர்தியினூடாகCOVID 19காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு அருகில் சென்று வங்கச் சேவையினை வழங்கியது.

எதிர்கால இலக்குகள்

I. ATMமற்றும் CDMவசதிகளுடன் கூடிய 20 Smart Centreஐ அமைத்தல்.

II. 6 புதிய வங்கிக் கிளைகளினை வட பகுதியினை உள்ளடக்கி அமைத்தல்.

III. ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் ஒருவர் வீதம் 15,000 புதிய தொழில்முனைவோரினை உருவாக்குதல்.

IV. QRவசதியினை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறிமுகப்படுத்துதல்.

V. செயலிலுள்ள வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையினை 2.9 மில்லியன் வரை அதிகரிக்கச் செய்தல்.

VI. வைப்பு இலாகாவினை ரூபா. 219 பில்லியன் வரை அதிகரித்தல் (சேமிப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்கள்) வைப்பு விகிதாசாரம் 39:61 ஆக முன்னெடுத்தல்.

VII. கடன் இலாகாவினை ரூபா. 216 பில்லியன் வரை அதிகரித்தல்.

VIII. Debit Card வசதிகளினை அறிமுகப்படுத்துதல்.

IX. பின்வரும் விசேட நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

- 10,000 இளம் ஆண் தொழில்முனைவோரினை உருவாக்குதல்.
- 10,000 பெண் தொழில் முனைவோரினை உருவாக்குதல்.
- மீன்பிடிக் கடனினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

- சிறந்த தொழில் முனைவோரினைத் தெரிவு செய்யும் திரி அபிமானி 2022 நிகழ்ச்சித் திட்டத்தினூடாக தொழில்முனைவோரினை வலுவூட்டுதல்.
- கிரி சக்தி நிகழ்ச்சித் திட்டம்
- துருணு திரிய வேலைத்திட்டத்தினை அமுலாக்குதல்.

X. தொழில்முனைவோருக்கான கண்காட்சியினை ஏற்பாடு செய்வதனூடாக அவர்களின் சந்தை வாய்ப்புக்களினை மேம்படுத்துதல்.

XI. கிளை மட்டத்தில் சிறந்த வாடிக்கையாளர்களினைத் தெரிவு செய்து அவர்களினைப் பாராட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.

XII. நடமாடும் வங்கி ஊர்தியினூடாக தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கி வசதிகளினை வழங்குதல்.

XIII. அந்நியச் செலாவணி நடவடிக்கைகளினை ஆரம்பித்தல்.

XIV. ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் புறக்கோட்டை மிதக்கும் சந்தையில் சேவைக் கருமபீடமொன்றினை அமைத்தல்.

XV. பள்ளி மாணவர்களுக்கு (15 வயதுக்கு மேற்பட்டவர்கள்) மற்றும் பள்ளி செல்லாத மாணவர்களுக்கு வங்கியுடன் இணைந்த சிறப்புத் திட்டத்தின் கீழ் பள்ளி மொபைல் வங்கிச் சேவைகளை வழங்குதல் மற்றும் பள்ளிக்கு வெளியே உள்ள மாணவர்களை தொழில் பயிற்சி வகுப்புகளுக்கு வழிநடத்துதல்.

XVI. பள்ளி மாணவர்கள் (15 வயதுக்கு மேற்பட்டவர்கள்) மற்றும் பள்ளி செல்லாத மாணவர்களுக்கு வங்கியுடன் இணைந்த விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலை நடமாடும் வங்கிச் சேவைகளினை வழங்கி எதிர்கால வாடிக்கையாளர்களினை தயார்படுத்துதல் மற்றும் தொழில் பயிற்சிப் பாடநெறிகளுக்குப் பள்ளி செல்லாத மாணவர்களினை முன்வைத்தல்.

சவால்கள்

I. புதிய வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கும் மற்றும் தற்போதுள்ள சந்தைப் பங்கைப் பராமரிப்பதற்கும் நிதிச் சந்தைகளில் காணப்படும் போட்டி.

II. கிராமப்புறங்களில் உள்ள நுண் மற்றும் சிறியளவிலான தொழில்முனைவோரை கையகப்படுத்துவதில் நுண் நிதி நிறுவனங்கள் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன. எனினும் நுண்கடன் துறை,முறைசாரா நுண் நிதிய நிறுவனங்களால்பாதிக்கப்பட்டுள்ளது.

III. விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்கு அதிகூடிய செலவு செய்யப்படுதல்.

IV. உரிமம் பெற்ற சிறப்பு வங்கியாக வணிக வங்கிகளுடன் ஒப்பிடுகையில், வைப்புத்தொகை குவிப்பு செலவு அதிகரித்தல்.

V. இலக்கிடப்பட்ட சந்தையில் நிதிக் கல்வி அறிவு குறைவாகக் காணப்படுதல்.

VI. விவசாயத் துறையின் உற்பத்தித் திறன் குறைந்து வருவதன் காரணத்தினால், விவசாயிகளுக்கிடையே, புதிய மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டங்களை செயல்படுத்துதல் வேண்டும்.

VII. கொவிட் 19 இன் தாக்கம் காரணமாகபொருளாதாரத்தில் இடம்பெற்ற எதிர்பாராத சிரமங்களின் அடிப்படையில் ஏற்பட்ட இடையூறுகள்.

அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்

அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய நிலவரம் மற்றும் தற்போது நிறைவு செய்துள்ள செயற்பாடுகள்.

I. அக்கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 2021.07.15 ஆந் திகதிய ரூபா. 1,521,370.78 வங்கிப் பற்று (சாதகமான) மீதி மற்றும் தற்போதைய பெறுமதி ரூபா. 61,928,356.90 நிலையான வைப்பொன்று உள்ளது.

II. வரையறுக்கப்பட்ட இறப்பர் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான நிர்வாகம் மாத்திரம், இக்கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட 03 சொத்துக்கள் (காணிக் கட்டிடங்கள்) அரோமா நேச்சுரல் இறப்பர் பிரைவேட் லிமிடட் நிறுவனத்திற்கு 30 வருடக் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

III. அம்மூன்று சொத்துக்களிலிருந்தும் வருடாந்தம் ரூபா. 10,849,164 குத்தகை வருமானம், அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகும். அதேபோல 2021.04.15 ஆந் திகதி வரை சகல குத்தகை வாடகைகளும் அரோமா நச்சூரல் இறப்பர் பிரத்தியேக நிறுவனத்திடமிருந்து அறவீடு செய்யப்பட்டுள்ளது.

IV. அதேபோல குத்தகை அடிப்படையின் கீழ் இதுவரை யாருக்கும் ஒப்படைக்கப்படாத அல்பிட்டிய காணி மற்றும் அதிலுள்ள 150*300 சதுர அடிக் கட்டிடம், அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாகும். அத் தொழிற்சாலை 20 வருடங்காக மூடப்பட்டுள்ளது.

V. அல்பிட்டிய தொழிற்சாலையின் தற்போதைய நிலவரத்தினை பரிட்சிப்பதற்கு அல்பிட்டிய பிரதேச செயலாளரின் பங்குகொள்ளலுடன், இவ் அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் பேரில் மேலதிக செயலாளர் (நிர்வாகம்), பிரதான நிதி உத்தியோகத்தர், கணக்காளர் (கொடுப்பனவுகள்) மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் பங்குகொள்ளலுடன் 2021.07.08 ஆந் திகதி அத் தொழிற்சாலை அவதானிப்பு விஜயத்திற்கு உட்படுத்தப்பட்டது.

VI. அவ்விஜயத்தின்போது இப்பிரதேசம் பல்வேறு சட்டவிரோதச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதாக அல்பிட்டிய பிரதேச செயலாளரினூடாக அறியக் கிடைத்துள்ளது. ஆதலால் இது தொடர்பில் உடனடி நடவடிக்கையாக அல்பிட்டிய பிரதேச செயலாளரின் கண்காணிப்பின் கீழ் பொருத்தமான மதிப்பீடொன்றின் கீழ் முழுமையான கட்டிடப் பிரதேசத்தினையும் புனரமைப்பதற்கும் அது தொடர்பில் பொருத்தமான பாதுகாப்பான வேலைத்திட்டமொன்றினைப் பயன்படுத்துவதற்கும் தேவையான நிதியினை, தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளுவதற்கு அங்கீகாரத்தினைக் கோரி நிதி அமைச்சுக்கு கடிதமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

VII. அக் கடிதத்திற்கு மறுமொழியாக PED/P/SRMC/1/11 (i)என்ற இலக்க 2021.09.10 ஆந் திகதிய கடிதப் பிரதியில் குறிப்பிட்டுள்ளவாறு தற்போது செயலற்றுள்ள வரையறுக்கப்பட்ட அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினை மீளவும் ஆரம்பித்தல் பொதுத் திறைசேரிக்கு மேலதிகமான செலவுச் சுமையொன்று என்பதால், விரைவில் கலைக்குமாறு நிதி அமைச்சின் செயலாளரினால் அரச முயற்சியாண்மை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

VIII. அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் பதிவுகளை சட்டப்பூர்வமாக உறுதிப்படுத்துவதற்கு, இந்த அமைச்சிடம் எழுத்துப்பூர்வ ஆவணங்கள் எதுவும் இல்லை.

IX. மேலும், ஒரு நிறுவனத்தின் கலைப்பு செயல்முறை கடுமையான சட்ட வடிவத்தை எடுப்பதால், அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் அனைத்து பணிப்பாளர் குழுவும் தற்போது இராஜினாமா செய்துள்ளனர் மற்றும் சங்க யாப்புக்களின் பிரகாரம், சகல பங்குகளின் உரித்து பொதுத் திறைசேரியிடம் காணப்படுவதால் தீர்மானமெடுக்கும் சகல அதிகாரமும் பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் மேற்குறிப்பிட்ட விடயம் அனைத்தையும் கவனத்திற்கொண்டதன் பின்னர் அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தினைக் கலைக்கும் செயற்பாடுகள், பொது முயற்சியாண்மை திணைக்களம் மற்றும் திறைசேரி சட்ட திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் முன்னெடுப்பதற்கு முடியுமாயின் அது மிகவும் சாலச் சிறந்தது என முன்மொழிந்து இது தொடர்பில் ஆலோசனைகளினை வேண்டி இவ் அமைச்சின் செயலாளரினால் நிதி அமைச்சுக்கு 2021.09.27 ஆந் திகதி எழுத்து மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

X. லங்கா மினரல் சாண்ட்ஸ் லிமிட ட்டினால் SRMCக்கு எதிராக கொழும்பு வர்த்த நீதிமன்றில் வழக்கு இலக்கம் CHC/569/17/MRஎன்ற இலக்க வழக்கொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த வழக்கினை ஒருமித்த அமைப்பின் கீழ் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இவ் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம், இந்த வழக்கைத் தீர்ப்பதற்கு பங்களிப்பு வழங்குமாறு கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிதியினூடாக செயலாக்கப்பட்ட செயற்திட்டங்கள்

வெளிநாட்டு நிதியினூடாக அமுலாக்கப்படும் இச் செயற்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு, திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவினூடாக இடம்பெறுகிறது.

செயற்திட்ட இக்கம் 01	**இலங்கை கொவிட் - 19 உடனடியான பதில் சுகாதார முறைமை - முன் தயாராகும் செயற்திட்டம் - மேலதிக நிதியினை வழங்குதல்.**
நிதி மூலம்	உலக வங்கி நிதியம்
செயலாக்கப்பட்ட இடம்	நாடுபூராவும்
இலக்கிடப்பட்ட குழு	கொவிட் - 19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள்
காலவரையறை	2020 – 2023
ஒதுக்கப்பட்ட நிதி	அமெரிக்க டொலர் 87.24 மில்லியன் (கொவிட் பாதிப்புக்கு உள்ளான குடும்பங்களுக்கு நிதிசார் மற்றும் சமூகம்சார் நிவாரணம் வழங்குவதற்கு மேலதிக நிதியினை வழங்குதல்.)
2021.12.31ஆந் திகதிய செலவு	கொவிட்- 19 இன் காரணமாக பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு ரூபா. 5000/- உதவியினை வழங்குவதற்கு 2020 மற்றும் 2021 காலப்பகுதியில் சமுர்த்தி இராஜாங்க அமைச்சினூடாக ரூபா. 6,017.85 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது
செயற்திட்ட இக்கம் 02	**சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்திட்டம்**
நிதி மூலம்	உலக வங்கி நிதியம்
செயலாக்கப்பட்ட இடம்	நாடுபூராவும்
இலக்கிடப்பட்ட குழு	குறைந்த வருமானத்தினைக் கொண்ட பயனாளி குடும்பங்கள்
காலவரையறை	2017 – 2022
ஒதுக்கப்பட்ட நிதி	அமெரிக்க டொலர் 75மில்லியன்
2021.12.31ஆந் திகதிய செலவு	நிதி அமைச்சில் அமைக்கப்பட்டுள்ள செயற்திட்ட அலுவலகத்தினூடாக செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2 இலட்சம் சமுர்த்தி பயனாளி குடும்பங்களினை மையமாகக் கொண்ட முழுமையான வீட்டுப் பொருளாதாரம் மற்றும் இணைந்த கிராமங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்

செயற்திட்டம் தொடர்பிலான அடிப்படை அறிமுகம்:-

நாட்டினை உருவாக்கும் சுபீட்சத்தின் தொலைநோக்கு "பயனுள்ள குடிமகன்மகிழ்ச்சியுடன் வாழும் குடும்பம்" என்ற முக்கிய எண்ணக்கருவினை மெய்யாக்கி, பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் வளமான தேசத்தினைக் கட்டியெழுப்புவதற்கு, தேசியப் பொருளாதாரத்தினை வலுவூட்டும் அரசின் முதன்மையான திட்டத்திற்கிணங்க, நிலைபோறான நுகர்வு மற்றும் வருமான ஈட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு "முழுமையான வீட்டுப் பொருளாதாரம் மற்றும் இணைந்த கிராமங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்" இவ்வமைச்சினூடாக அமுலாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதன் மூலம், குடும்ப அலகின் நிலைபேறான நுகர்வுக்கு மக்களை பழக்கப்படுத்தி, குடும்ப வருமானம் மற்றும் செலவினங்களை நன்கு நிர்வகிப்பதற்கும்,அவர்களின் மேலதிகமான உற்பத்தியை கிராமப்புற சந்தைக்கு அனுப்புவதனூடாகவீட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத் தேசிய வேலைத்திட்டத்தின் பிரதான மையமொன்றாக, வீட்டுப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு முன்னுரிமையளித்து, யால மற்றும் மஹா பருவகாலத்தினை அடிப்படையாகக் கொண்டு வீட்டுத் தோட்ட வேலைத்திட்டம் உட்பட ஐந்து துறைகளை உள்ளடக்கி நிலைபேறான முறையில் இரண்டு இலட்சம் சமுர்த்திப் பயனாளி குடும்பங்களினை (200,000) வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2021.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

நிதிசார் முன்னேற்றம் - ரூ.10,000 மி. ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ரூ. 5,750.00 மி. ஒதுக்கீடுகள் பொதுத் திறைசேரியினூடாக வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2021.12.31 ஆந் திகதிய கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி ரூ. 739.78 மில்லியனாகும். உண்மையான செலவு ரூ. 3,533.50 மி. ஆகும்.

பௌதிக முன்னேற்றம் -இந் நிகழ்ச்சித் திட்டம் 2 பிரிவுகளின் கீழ் அமுலாக்கப்படுகிறது.

I. இரண்டு இலட்சம் சமுர்த்திப் பயனாளி குடும்பங்களினை வலுவூட்டுதல்.
கிராம உத்தியோகத்தர் தொகுதி ஒன்றுக்கு ஆகக்குறைந்த வகையில் 15 பயனாளிகள் என்றவாறு தொகுதிகள் மட்டத்தில் வலுவூட்டக்கூடிய சமுர்த்தி/குறைந்த வருமானத்தினைக் கொண்ட பயனாளி குடும்பங்களினை இனங்கண்டு, அவர்கள் தற்போது ஈடுபடும் வருமானத்தினை பெருக்கும் செயற்திட்டங்களினை மேலும் மேம்படுத்துவதற்கும் மற்றும் மாதாந்த வருமானத்தினை மேம்படுத்துவதற்கு இயலுமானவாறு உதவிச் சேவை நிறுவனங்களின் பங்களிப்பினையும் பெற்று பயனாளிகள் செயற்திட்டங்களில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்கே CRM கணனி மென்பொருள் ஊடாக செயற்திட்டப் பயனாளிகளின் தகவல்கள் மற்றும் முன்னேற்றத்தினைப் பெற்றுக் கொள்ளும் மூலோபாயமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இங்கே, விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடி, கைத்தொழில், வாழ்க்கைத் தொழிற் பயிற்சி மற்றும் சந்தைப்படுத்தல் என்றவாறு 76,587 செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

II. தெரிவு செய்யப்பட்ட 2 இலட்சம் சமுர்த்திப் பயனாளி குடும்பங்களினை உள்ளடக்கி 1,000,000 வீட்டுத் தோட்டங்களினை அபிவிருத்தி செய்தல்.

பயனாளி குடும்பங்களின் ஊட்டச்சத்தினை அதிகரிப்பதற்கு தேசியத் தோட்டப் பயிர் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

இதன் கீழ் ;

- அந்தந்த மாவட்டங்களுக்குப் பொருத்தமான பழக் கன்றுகள் மற்றும் ஏற்றுமதி விவசாயம் தொடர்பிலான நாற்று வகைகளினை, 1,000,000 குடும்பங்களுக்கு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 756,859 மரக்கறி விதை பொதிகள், 756848 பயனாளிகள் தொடர்பிலும், 1,117,126 பழக் கன்றுகள், 698,482 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- தொகுதி ஒன்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3 சமுர்த்திப் பயனாளி குடும்பங்கள் என்றவாறு 31,656 குடும்பங்களுக்கு 280778 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.
- தெங்குப் பயிர்ச் செய்கை சபையினால் 1,000,000 சமுர்த்திப் பயனாளிகளுக்கு தலா ஒரு தென்னங் கன்று என்றவாறு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் இதுவரை 238,299 தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இச் செயற்திட்டத்திலிருந்து மக்களுக்குக் கிடைக்கும் பயன்கள் ;-

- முழுமையான வீட்டுப் பொருளாதாரத்துடன் குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களினை வலுவூட்டுதல்.
- மாற்று வருமான வழிகளினை உருவாக்குதல்.
- சந்தை வலையமைப்பினை வலுவூட்டுவதனூடாக உள்ளூர் உற்பத்திகளினை ஊக்குவித்தல்.
- நிறுவன வளர்ச்சி மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தினைக் குறைத்தல்.
- உற்பத்திக் கிராமங்களினை உருவாக்குவதனூடாக விசேட உற்பத்திகளினை வலுவூட்டுதல்.
- நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியினை அதிகரித்து உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்
- முறைசாரா கடன்கள் தொடர்பிலான நாட்டத்தினைக் குறைத்து சலுகை வட்டி விகிதாசாரத்தின் கீழ் கடன்களினை வழங்குதல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறைக்கு பொதுமக்களினைப் பழக்கப்படுத்துதல்.
- உடல் மற்றும் உடல் ரீதியான ஆரோக்கியமான ஆன்மீகம்சார் வகையில் விருத்தி செய்யப்பட்ட சமுதாயமொன்றினை உருவாக்குதல்.

.....

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்:-

பெயர்:-

பதவி :-

திகதி :- 2022-06-16

Neel Bandara Hapuhinne
Secretary
Ministry of Women, Child Affairs and Social Empowerment
1st Floor, "Sethsiripaya" Stage II, Battaramulla

39

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
செயற்திறன் அறிக்கை 2021

அத்தியாயம் 03-2021 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதிச் செயற்திறன்

3.1 நிதிச் செயற்திறன் கூற்று

ஏசீஏ - எவ்

2021.12.31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிச் செயற்திறன் கூற்று

ரூ.

பாதீடு -2021		குறிப்பு	உண்மைநிலை		
			நடைமுறை ஆண்டு	மீளவும் இணக்கம்	
			2021	2020	
-	**வருமானப் பெறுகைகள்**				
-	வருமான வரி	1	இல்லை	இல்லை	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	இல்லை	இல்லை	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	3	இல்லை	இல்லை	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	இல்லை	இல்லை	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		இல்லை	இல்லை	
-	**வருவாய் அல்லாத பெறுகைகள் (அ)**				
-	திறைசேரிக் கட்டுநிதி		585,115,000	526,972,639	ஏசீஏ-3
-	வைப்புக்கள்		2,774,467	13,193,843	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		15,613,973	24,751,602	ஏசீஏ-5
-	பிற பிரதான ஏட்டுக் கணக்குப் பெறுகைகள்		-	10,848,622	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**603,503,440**	**575,766,706**	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகளும்இ = (அ)+(ஆ)**		**603,503,440**	**575,766,706**	
	திறைசேரிக்கு அனுப்புதல் (ஈ)		(5,763,205)		
	தேறிய வருமானப் பெறுகைகள் மற்றும்				
	மற்றும் வருமானம் அல்லாத பெறுகைகள்உ =(இ)-(ஈ)		597,740,235		
	கழித்தல்: செலவுகள்				
7,464,800,000	**மீண்டுவரும் செலவுகள்**				
280,500,000	சம்பளம், கூலி மற்றும் மற்றும் ஊழியர் பயன்கள்	5	253,921,427	235,985,212	
206,950,000	ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6	189,569,819	167,782,083	ஏசீஏ2(ii)
6,977,300,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	6,891,660,011	6,305,875,127	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8			

50,000	ஏனைய மீண்டுவரும் செலவுகள்	9			
7,464,800,000	**மொத்தமீண்டுவரும் செலவுகள் (ஊ)**		**7,335,151,257**	**6,709,642,422**	
	மூலதனச் செலவுகள்				
10,750,000	மூலதனச்சொத்துக்களினைப் புனரமைப்பதும், மேம்படுத்துவதும்	**10**	8,387,962	4,275,637	
251,150,000	மூலதனச்சொத்துக்களினைக் கொள்ளல்	**11**	123,136,547	130,345,065	
80,000,000	மூலதனமாற்றல்கள்	**12**	69,551,098	52,336,674	
-	மூலதனச்சொத்துக்களினைக் கொள்ளல்	**13**		-	**ஏசீஏ-(ii)**
1,700,000	திறன்விருத்தி	**14**	718,155	1,076,275	
11,115,000,000	பிறமூலதனச் செலவுகள்	**15**	6,492,900,836	535,801,942	
11,458,600,000	**மொத்த மூலதனச் செலவுகள் (எ)**		**6,694,694,598**	**723,835,594**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		2,823,923	4,999,220	**ஏசீஏ-4**
	முற்பணக் கொடுப்பனவுகள்		14,843,681	70,894,121	**ஏசீஏ-5/5**
	பிற பிரதான ஏட்டுக் கணக்குக்கொடுப்பனவு				
	பிரதான ஏட்டுச்செலவுகள் (ஏ)		17,667,604	75,893,341	
	மொத்தச் செலவுகள் எ = (ஈ+உ+ஊ)		**14,047,513,459**	**7,509,371,357**	
	2021 திசம்பர் 31 ஆந் திகதிய கட்டுநிதி மீதிஏ = (இ-எ)		**(13,449,773,224)**	**(6,933,604,651)**	
	கட்டுநிதி இணக்கக் கூற்றின் பிரகாரம் மீதி		**(13,449,773,224)**		**ஏசீஏ-7** **ஏசீஏ-3**
	திசம்பர் 31 ஆந் திகதிய கட்டுநிதி மீதி		-		
			(13,449,773,224)		

3.2 நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று

ஏசீஏ- 1

2021.12.31 ஆந் திகதிய
நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று

	குறிப்பு		உண்மைநிலை	
			2021(ரூ.)	2020(ரூ.)
நிதியல்லாத சொத்துக்கள்				
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6		1,094,223,666	1,008,272,864
நிதிச்சொத்துக்கள்				
முற்பணக்கணக்குகள்	ஏசீஏ-5/5(ஏ)		51,683,324	52,453,617
காசுமற்றும் காசுக்குச் சமமானவை	ஏசீஏ-3			2,241,772
மொத்தச் சொத்துக்கள்			**1,145,906,990**	**1,062,968,253**
தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு				
திறைசேரிக்குத் தேறிய சொத்துக்கள்			(1,708,496)	(987,659)
ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண இருப்பு			1,094,223,666	1,008,272,864
வாடகை மற்றும் பணி முற்பண இருப்பு	ஏசீஏ-5(பீ)			
நடைமுறைப் பொறுப்புக்கள்				
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4		53,391,820	53,441,276
கட்டுநிதி மீதி	ஏசீஏ-3			2,241,772
மொத்தப் பொறுப்புக்கள்			**1,145,906,990**	**1,062,968,253**

பக்க இலக்கம் 01 முதல் 50 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களின் பக்க இலக்கம் 51 முதல் 68 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புக்களின் விவரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கும்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில், இங்கு நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுபடுத்துகிறோம்.

.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர் :
பதவி :
திகதி: 2022.06.16

Neel Bandara Hapuhinne
Secretary
Ministry of Women, Child Affairs and
Social Empowerment
1st Floor, "Sethsiripaya", Stage II, Battaramulla.

.....
பிரதான நிதி உத்தியோகத்தர்/பிரதான கணக்காளர்/பணிப்பாளர் (நிதி)/ ஆணையாளர் (நிதி)
பெயர் :
பதவி :
திகதி: 2022.05.24

R.A.W. Wickramasingha
Chief Financial Officer
State Ministry of Samurdhi, Home Economy,
Microfinance and Self-Employment
Sethsiripaya Stage II,
Battaramulla

3.3 காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

ஏசீஏ - பீ

2021 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் தொடர்பிலான கூற்று

	உண்மைநிலை	
	2021(ரூ.)	**2020(ரூ.)**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்டகாசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்		இல்லை
கட்டணங்கள், மேலதிகங்கள், தண்டப் பணங்கள் மற்றும் உரிமங்கள்		இல்லை
இலாபம்		இல்லை
வருமானம் அல்லாதபெறுகைகள்		10,848,622
ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காகசேகரிக்கப்பட்டவருமானம்	11,981,295	-
கட்டுநிதிக் கிடைப்பனவு	585,115,000	526,972,639
முற்பணத்தினை அறவீடு செய்தல்	15,774,774	14,605,406
வைப்புக் கிடைப்பனவுகள்	2,774,467	13,193,843
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்டகாசுப் பாய்ச்சல் (அ)	**615,645,536**	**565,620,510**
கழித்தல் :நிதியினைச்செலவு செய்தல்		
ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும்தொழிற்பாட்டுச் செலவினங்கள்	321,406,134	240,225,976
மானியங்கள்மற்றும் மாற்றல்கள்	19,790,700	
ஏனையசெலவினத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	1,907,343	50,857,340
திறைசேரிக்குதீர்க்கப்பட்ட கட்டுநிதி	5,763,205	14,672,268
வைப்புக் கொடுப்பனவுகள்	2,823,923	4,999,220
முற்பணக் கொடுப்பனவுகள்	14,843,681	9,372,330
செயற்பாட்டுநடவடிக்கைகள்தொடர்பில் செலவுசெய்யப்பட்டகாசுப் பாய்ச்சல் (ஆ)	**366,534,986**	**320,127,134**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் (இ) = (அ) -(ஆ)	**249,110,550**	**245,493,376**
முதலீட்டுச்நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்டகாசுப் பாய்ச்சல்		
வட்டி	இல்லை	இல்லை
பங்குலாபம்	இல்லை	இல்லை
உரிமைகளை நீக்கும் ஏற்பாடுகள் மற்றும்பௌதிகச்சொத்துக்களை விற்பனை செய்தல்.	இல்லை	இல்லை
உப கடனினை அறவீடு செய்தல்	இல்லை	இல்லை
முதலீட்டுச்நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்டகாசுப் பாய்ச்சல் (FF)	-	-

கழித்தல் :காசினைச் செலவுசெய்தல்		
பௌதிகச் சொத்துக்கள்நிர்மாணித்தல், கொள்வனவு செய்தல் மற்றும்வேறு முதலீட்டிற்கு கையகப்படுத்தல்.	249,110,550	245,493,376
முதலீட்டு நடவடிக்கைகளுக்குச்செலவு செய்யப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)	**249,110,550**	**254,865,706**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(249,110,550)**	**(254,865,706)**
செயற்பாடு மற்றும் முதலீட்டுச்செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல். (எ)=(இ) + (ஊ)	-	**(9,372,330)**
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாகியகாசுப் பாய்ச்சல்		
உள்நாட்டுக் கடன்	இல்லை	இல்லை
வெளிநாட்டுக் கடன்	இல்லை	இல்லை
மானியக் கிடைப்பனவுகள்	இல்லை	இல்லை
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக்காசுப் பாய்ச்சல் (ஏ)	-	-
கழித்தல் :காசினைச் செலவுசெய்தல்		
உள்நாட்டுக் கடனினை மீளவும்செலுத்துதல்	இல்லை	இல்லை
வெளிநாட்டுக் கடனினை மீளவும்செலுத்துதல்	இல்லை	இல்லை
நிதி நடவடிக்கைகளுக்குச்செலவு செய்யப்பட்டமொத்தக்காசுப் பாய்ச்சல் (ஐ)	-	-
நிதிச்செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்டநிதிப் பாய்ச்சல் கூற்று (ஒ)=(ஏ)-(ஐ)	-	**(9,372,330)**
நிதியின் தேறிய மாற்றங்கள் (ஓ) = (எ) -(ஒ)	-	**(9,372,330)**
ஜனவரி 01 ஆந் திகதியன்றையஆரம்பக் காசு மீதி	இல்லை	இல்லை
திசம்பர்31 ஆந்திகதியன்றையஇறுதி காசு மீதி	-	-

3.4 நிதிசார் குறிப்பு - தொடர்பற்றது

3.5. வருமானங்களினைச் சேகரிக்கும் செயற்திறன் - தொடர்பற்றது

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளினைப் பயன்படுத்துவதன் செயற்திறன்

ஒதுக்கீடுகளின் வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள்		உண்மைச் செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்கீட்டு அளவு % மாக
	ஆரம்ப ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
மீண்டுவரும்	7,459,800,000	7,464,800,000	7,335,151,256	98.26
மூலதனம்	5,703,600,000	11,458,600,000	6,694,694,598	58.43

3.7 நி.பி. 208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவர் ஒருவராக இத் திணைக்களத்திற்கு/மாவட்ட செயலகத்திற்கு/மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்.

தொ. இல.	ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற அமைச்சு/திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் % மாக
			ஆரம்ப ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
01	புகையிரதத் திணைக்களம்	ஆணைச்சீட்டுக்கள் 414-1-2-0-1003	162.16	162.16	162.16	100
02	அரச அச்சகம்	அச்சு நடவடிக்கைகள்	46.289	46.289	46.289	100
03	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்	அரச நிறுவனங்களுக்கு மாற்றுதல் - ஆளுக்குரிய வேதனாதிகள் -414-1-2-1-1503	90,000	90,000	80,300	89.22
04	சமூகப் பாதுகாப்புச் சபை	அரச நிறுவனங்களுக்கு மாற்றுதல் - ஆளுக்குரிய வேதனாதிகள் -414-1-2-2-1503	96,000	96,000	96,000	100
05	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்	அரச நிறுவனங்களுக்கு மாற்றுதல் - மீண்டுவரும் -414-1-2-1-1509	57,000	57,000	27,200	47.71
06	சமூகப் பாதுகாப்புச் சபை	அரச நிறுவனங்களுக்கு மாற்றுதல் - மீண்டுவரும்414-1-2-2-1509	44,000	44,000	29,609	67.29
07	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்	அரச நிறுவனங்களுக்கு மாற்றுதல் - மூலதனம் 414-1-2-1-2201	10,000	10,000	5,600	56
08	சமூகப் பாதுகாப்புச் சபை	அரச நிறுவனங்களுக்கு மாற்றுதல் - மூலதனம் 414-1-2-2-2201	15,000	15,000	13,000	86.66
09	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்குச் சம்பளத்தினை வழங்குதல். 414-2-7-0-1001	94,494.909	94,494.909	90,855.322	96.14
10	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கைச்செலவுக்	27,784.258	27,784.258	27,251.890	98.08

தொ. இல.	ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற அமைச்சு/திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் % மாக
			ஆரம்ப ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
		கொடுப்பனவு414-2-7-0-1003				
11	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்குப் பிரயாணச் செலவுகள் 414-2-7-0-1101	5,082.365	5,082.365	3,254.655	64.03
12	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு எழுதுகருவிப் கொடுப்பனவுகள் 414-2-7-0-1201	470.4	470.4	469.958	99.90
13	மொனராகல மாவட்ட செயலகம்	அஞ்சல் மற்றும் தொடர்பாடல் 414-2-7-0-1402	26.87	26.87	23.992	89.26
14	கம்பகா மாவட்ட செயலகம்	மின்சாரம் தொடர்பில் 414-2-7-0-1403	21.2	21.2	20.847	98.33
15	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா.5000/- கொடுப்பனவு 414-2-7-1-1501	4,320,000	4,320,000	4,311,336.582	99.79
16	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	சிறுநீரக நோயாளர்களுக்கு நிதியுதவியினை வழங்குதல். 414-2-7-4-1501	2,349,000	2,349,000	2,326,075.5	99.02
17	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	உளவளத்துணை உத்தியோகத்தர்களுக்கு ஆதனக் கடன் வட்டி தொடர்பில் அரசின் பங்களிப்பு 414-2-7-0-1506	1,974.889	1,974.889	1,353.229	68.52
18	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் 414-2-7-8-2509	8,544.446	8,544.446	8,337.028	97.57
19	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	சௌபாக்யா நிகழ்ச்சித் திட்டம் 414-2-3-3-2509	4,796,150.451	4,796,150.451	2,821,380.513	58.82
20	அலங்கார மீன், நன்னீர் மீன், இறால் வளர்ப்பு, மீன்பிடி துறைமுக அபிவிருத்தி, பலநாள் மீன்பிடி நடவடிக்கைகள்	2 இலட்சம் சமுர்த்திக் குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 414-2-3-4-2509	270,000	270,000	269,881.979	99.95

தொ. இல.	ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற அமைச்சு/திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடுகள்		உண்மையான செலவு	பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள், வழங்கப்பட்ட இறுதி ஒதுக்கீடுகளின் % மாக
			ஆரம்ப ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
	மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு					
21	ஆயுர்வேத திணைக்களம்	2 இலட்சம் சமுர்த்திக் குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 414-2-3-4-2509	3,600	3,600	1,111.164	30.86
22	தென்னை, கித்துள்,பனை வளர்ப்பு ஊக்குவிப்பு, தொடர்புடைய கைத்தொழில் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சு	2 இலட்சம் சமுர்த்திக் குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 414-2-3-4-2509	285,000	285,000	285,000	100
23	அரச நிறுவன தோட்ட சீர்திருத்தங்கள், தேயிலை, இறப்பர் தோட்டங்கள் தொடர்பான பயிர்கள் வளர்ப்பு, தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்கவிப்பு இராஜாங்க அமைச்சு	2 இலட்சம் சமுர்த்திக் குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 414-2-3-4-2509	50,000	50,000	50,000	100
24	சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்	2 இலட்சம் சமுர்த்திக் குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 414-2-3-4-2509	49,582.251	49,582.251	42,117.219	84.94
	நாடுபூராவுமுள்ள 25 மாவட்ட செயலகங்கள்	2 இலட்சம் சமுர்த்திக் குடும்பங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் 414-2-3-4-2509	5,091,817.749	5,091,817.749	2,949,156.146	57.91

3.8 நிதியல்லாத சொத்துக்களினை அறிக்கையிடுவதன் செயற்திறன்

ரூ. ,000

சொத்துக் குறியீடு	குறியீடு	31.12.2021 பொருட் கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் மீதி	31.12.2020திகதிய நிதி நிலவர அறிக்கையின் பிரகாரம் மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள	முன்னேற்றம் % ஆக அறிக்கையிடுதல்
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்புக்கள்	710,296,158.39	589,293,499.48		
9152	எந்திரங்கள்	383,927,507.82	418,979,363.61		
9153	காணிகள்	இல்லை	இல்லை		
9154	தொட்டுணர முடியாத சொத்துக்கள்	இல்லை	இல்லை		
9155	உயிரியல் சொத்துக்கள்	இல்லை	இல்லை		
9160	நடந்து கொண்டிருக்கும் பணி	இல்லை	இல்லை		
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	இல்லை	இல்லை		

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்,
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார இராஜாங்க அமைச்சின் 2021 திசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் பொழிப்பு அறிக்கை.

1. **நிதிசார் கூற்றுக்கள்**

1.1. **தகுதிவாய்ந்த கருத்துரை**

சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார இராஜாங்க அமைச்சின் 2021திசம்பர் 31 ஆந் திகதிய நிதி நிலவரக் கூற்று, அத்தினம் நிறைவு பெற்ற வருடத்திற்கான நிதிச் செயற்திறன் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களினை உள்ளடக்கிய 2021 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் திருத்தஞ் செய்யப்பட்டு வாசிக்கப்பட வேண்டிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154 (1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், எனது அவதானிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கு முன்வைக்கப்படும் இந்நிதிசார் கூற்றுத் தொடர்பில் எனது கருத்துக்களினை எடுத்தியம்புதல் மற்றும் அவதானிப்புக்கள் இவ் அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையுடன் திருத்தப்பட்டு வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 வது பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் 1.6 வது பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிசார் கூற்றுக்களில் 2021 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதிய சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலவரம் மற்றும் அன்றைய தினம் முடிவுற்ற வருடம் தொடர்பில் அதன் நிதிச் செயற்திறன் மற்றும் காசுப் பாய்ச்சல், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உண்மையாகவும் மற்றும் நியாயபூர்வமாகவுள்ளது என்பதே எனது கருத்தாகும்.

1

1.2. தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பிலான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு எனது தகுதிவாய்ந்த கருத்துரை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களின் (இ.க.நி.) பிரகாரம் என்மூலம் கணக்காய்வு இடம்பெற்றுள்ளது. நிதிசார் கூற்றுத் தொடர்பில் எனது பொறுப்பு, கணக்காய்வின் பொறுப்பு போன்ற பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. என் மூலம் புலனாய்வு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பில் அடித்தளமொன்றினை வழங்குவதற்கு என்மூலம் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுனமானவை எனவும் உசிதமானவை எனவும் நான் நம்புகின்றேன்.

1.3. நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 38 வது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயபூர்வமாகவும் எடுத்தியம்பக்கூடியவாறு, நிதிக் கூற்றுக்களினைத் தயாரித்தல், ஊழல் மற்றும் தவறின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவையான உள்ளக நிர்வாகத் தீர்மானம் எடுத்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(i) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக் கூற்றுக்களினை தயாரிப்பதற்கு இயலுமானவாறு சுய வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சரியானவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளினை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதி முகாமை தொடர்பில் விளைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்து முன்னெடுத்துச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அத்திட்டத்தின் விளைத்திறன் தொடர்பில் அடிக்கடி மீளாய்வொன்றினை முன்னெடுத்து அதன் பிரகாரம் திட்டத்தினை விளைத்திறனானதாக முன்னெடுத்துச் செல்லுவதற்கு தேவையான மாற்றங்களினை செய்தல் வேண்டும்.

1.4. <u>நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு</u>

ஒட்டுமொத்தமாக நிதிசார் கூற்றுக்கள், ஊழல் மற்றும் தவறின் காரணத்தினால் ஏற்படும் போதுமான தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து, நியாயத்தினை மேலும் வழங்குதல் மற்றும் எனது கருத்துரையினை உள்ளடக்கி கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கையினை வழங்குதல் எனது நோக்காகும். நியாயத்தினை உறுதிப்படுத்துதல் உயர் மட்ட உறுதிப்பாடு எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை முன்னெடுக்கும்போது, அது எந்நேரமும் கணிசமான தவறான கூற்றுக்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தப்படவில்லை. ஊழல் மற்றும் தவறு தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை விளைவிக்கும் என்பதால் தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், இந்நிதிக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு, பயன்பாட்டாளர்களினால் பொருளாதாரத் தீர்மானங்களினை எடுக்கும்போது அது தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

என்மூலம் தொழில் முறை தீர்ப்பு மற்றும் தொழில் முறை சந்தேகத்துடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. என் மூலம்மேலும்,

- ஊழல் அல்லது தவறின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய கணிசமான தவறான கூற்றில் கவனத்தினைச் செலுத்தியவேளையில் மற்றும் மதிப்பீடு செய்தவேளையில் தருணத்திற்கேற்ப உயர் கணக்காய்வு முறைமையினை திட்டமிட்டு ஊழல் மற்றும் தவறின் காரணத்தினால் ஏற்படும் பாதிப்பினை கைவிடுவதற்கு, போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சாட்சிகளினைப் பெற்றுக் கொள்ளுதல் எனது கருத்துரையாகும். போதிய தவறான கூற்றினால் இடம்பெறும் விளைவுகளுக்கு மேலாக ஊழல்களினால் இடம்பெறும் தாக்கம் அதிகமானது என்பதுடன், பிளவு, தவறு ஏட்டினைத் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கைவிடுதல் தவறொன்று ஏற்படுவதற்கு காரணமாகும்.

- தருணத்திற்கு ஏற்ப உகந்த கணக்காய்வு முறைமையினைத் திட்டமிடுவதற்கு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைத்திறன் தொடர்பில் கருத்துரையினை வெளிப்படுத்துவதற்கு எண்ணியிருக்கவில்லை.

- வெளிக்கொணரப்பட்ட நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு, உள்ளடக்கப்படுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்களினை, சிறந்தவாறும் மற்றும் நியாயபூர்வமானவாறும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்களினை முன்வைக்கும்போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்வாங்குதல் தொடர்பில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் சிறந்தவாறும் மற்றும் நியாயபூர்வமாகவும் உள்ளடக்கப்பட்டிருத்தல் தொடர்பானது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வினை அலசி ஆராய்தல், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தர் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்.

1.5. <u>பிற சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை</u>

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் கடந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் என்மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தது.

1.6. **நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துக்களினை எடுத்துக் காட்டுதல்.**

1.6.1. **நிதி நிலவரம் தொடர்பிலான கூற்று**

1.6.1.1. **நிதியல்லாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

(அ) நிர்மாணிக்கப்படும் சீதுவ பயிற்சி நிலையத்திற்கான கட்டிடம் தொடர்பில் மீளாய்வு ஆண்டு நிறைவில் ரூபா. 121,002,659 செலவு செய்யப்படுதல், நிதியல்லாத சொத்துக்களில் வீடமைப்பற்ற கட்டிடத்தின் கீழ், கொள்வனவு செய்ததாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சுக்கு உரித்தான பிலிமத்தலாவ மற்றும் பொரள்ளவில் அமையப் பெற்ற ஆய்வு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் காணிக் கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 4 சொத்து வகைகளுக்கு உரித்தான 77 விடயங்களின் பெறுமதி ரூபா. 3,815,643 சரியான சொத்துக்களினை வகைப்படுத்தலின் கீழ் கணக்கீடு செய்யப்படாது கணனி உதிரிப் பாகங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) வருட ஆரம்பத்தில் ரூபா. 589,293,499 ஆகிய அலுவலகக் கட்டிட மீதியில் சமூகப் பாதுகாப்புச் சபைக் கட்டிட நிர்மாணிப்புப் பெறுமதியும் அதாவது ரூபா. 540,000 உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) 2021 மார்ச் 26 ஆந் திகதி கழிப்பனவுக் குழுவினால் இனங்காணப்பட்ட 05 வாகனங்கள். திசம்பர் மாதத்தில் வேறு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டபோதிலும் நிலையான சொத்துக்கள் ஏட்டில் நீக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அமைச்சுக்கு உரித்தான சொத்துக்களின் செலவான ரூபா. 6,626,616 விடயம்15 உடன் தொடர்பிலான பொருள்அலகுகள் 144, வருடத்தில் கழிப்பனவாக ACA 6 இல் காட்டப்பட்டபோதிலும் பொருட்கள் கழிப்பனவுப் பட்டியலின் பிரகாரம் விடயம் 54 உடன் தொடர்பிலான பொருள் அலகுகள் 259 கழிப்பனவு செய்யப்பட்டிருந்தது.

1.6.1.2. **முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுருந்தன.

(அ) அங்கத்துவக் கடன் பதிவேட்டில் 7 உத்தியோகத்தர்களுடன் தொடர்பிலான ரூபா.1,680,826,கடன் மீதி கணக்குடன் முன்வைக்கப்பட்டிருந்த துணைப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், 7 உத்தியோகத்தர்களுடன் தொடர்பிலான ரூபா. 1,362,971 ஆகிய கடன் மீதி மொத்தம், கணக்குடன் முன்வைக்கப்பட்ட துணைப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டபோதிலும் அங்கத்துவக் கடன் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2022 ஜனவரி 03 ஆந் திகதி நடாத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த 2021 ஆம் ஆண்டின் அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திற்கான சிற்றுண்டிச் செயற்பாடுகளுக்கென முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா. 61,400 முற்பணமாக வழங்கப்படாது மீளாய்வு ஆண்டில் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.6.1.3. **அட்டுறுக் கணக்கு**

நிதிக்கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டிருந்த அட்டுறுக் கணக்கில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ACA – 3 இன்அட்டுறுக் கணக்கு இலக்கம் 7002-0-0-324-21 எனக் குறிப்பிடப்பட வேண்டியபோதிலும், 7002-0-0-324-19 எனத் தவறாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரி அச்சுக் குறிப்பு SA-70 இன் பிரகாரம் 7002-0-0-324-20 அட்டுறுக் கணக்கின் முன்னைய ஆண்டின் ரூபா. 2,241,771 ஆரம்ப மீதி ACA – 3 படிவத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

1..6.2. **நிதிச் செயற்திறன் கூற்று**

அமைச்சரின் பணியாட் தொகுதிக்கு ரூபா. 5,959,850 சம்பளம், கொடுப்பனவுகள், மேலதிகநேரம், எரிபொருள் கொடுப்பனவு 414-1-2 என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்படவேண்டியபோதிலும் 414-1-1 என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

1..6.3. **காசுப் பாய்ச்சல் கூற்று**

அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/03 இல் முன்வைக்கப்பட்ட படிவத்தில் மீளவும் இணக்கம் செய்யப்பட்ட மீதிகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் எனக் காட்டப்பட்ட போதிலும், 2021 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடம் தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள காசுப் பாய்ச்சல் கூற்றில் ACA-C தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா. 9,372,330 தேறிய தொழிற்பாட்டு பெறுமதி மீளவும் இணக்கம் செய்யப்படாது நிதியின் தேறிய மாறுபாடொன்றாகக் காட்டப்பட்டுள்ளது.

1.6.4.**ஏடுகள் மற்றும் புத்தகங்கள் (முன்னெடுக்கப்பட்டிருக்காமை.**

அமைச்சினால் பின்வருமாறு காட்டப்பட்ட ஏடுகள் முறைசார் வகையில் நாளதுவரைப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை என பரீட்சார்த்தமான கணக்காய்வுப் புலனாய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஏடுகளின் வகை	உரிய ஒழுங்கு விதி	அவதானிப்பு
(அ) இழப்பு மற்றும் நட்ட ஏடு	நிதிப் பிரமாணம் 110 மற்றும் 104	நாளதுவரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை
(ஆ) பொறுப்புக்கள் மற்றும் கடப்பாட்டு ஏடு	நிதிப் பிரமாணம் 94	பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு வருதல் தொடர்பில் கடப்பாட்டு ஏடு நாளதுவரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
(இ) பிணை ஏடு	நிதிப் பிரமாணம் 880	அமைச்சின் 29 உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவிலை.

2. **நிதிசார் மீளாய்வு**

2.1. **செலவு முகாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

(அ) அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 11,458,600,000 என்ற நிதி ஒதுக்கீட்டில் ரூபா. 6,694,694,598 வரை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அரச செலவுகள் மீளாய்வின் கீழான அமைச்சரவை ஆலோசனைகளின் பிரகாரம் ரூபா. 451,956,397 மீதியினைத் தவிர்த்து பயன்படுத்தப்படாத தொகை ரூபா. 4,311,949,005 அதாவது நூற்றுக்கு 37 ஆகும்.

(ஆ) 2020 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 வது பிரிவின் பிரகாரமும் மற்றும் 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்டு 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றுநிரூபத்தின் 5.1 வது பந்தியின் பிரகாரமும் வருடாந்தப் பாதீட்டு மதிப்பீடுகளினூடாக ஒதுக்கப்பட்டுள்ள மீண்டுவரும் மற்றும் மூலதன வரையறைகளினூடாக தேக்கி வைத்து வருடாந்தச் செலவுகளினை முகாமை செய்தல் இடம்பெறுதல் வேண்டுமென காட்டப்பட்டிருந்போதிலும், குறைநிரப்பு மதிபிப்பீடுகளின் அடிப்படையில் ரூபா. 5,755 மில்லியன் 2 செலவு விடயங்களுக்கு பெறப்பட்டிருந்ததுடன் திசம்பர் 31 ஆந் திகதியளவில் அதில் நூற்றுக்கு 23.2 அதாவது ரூபா. 1,337,328,743 மீதமாகியிருந்தது.

(இ) 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 5(1) மற்றும் 5(2) வது பிரிவுகளுடன் ஒப்பிட்டு வாசிக்கப்படவேண்டிய நிதிப் பிரமாணத்தின் 66 மற்றும் 69 பிரகாரம் வீரமன் நடைமுறையினைப் பின்பற்றி ஒதுக்கீடுகள் பெறப்பட்டிருந்தபோதிலும், செலவு விடயம் 2 உடன் தொடர்பிலான அதாவது நூற்றுக்கு 37 வருட நிறைவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் 26 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல் இலக்கம் 2021/03 இன் 3.5 வது பந்திக்கு முரணாகும் செலவு விடயம் 24 மீதி நூற்றுக்கு 6 தொடக்கம் நூற்றுக்கு 100 வரை காணப்பட்டது.

(உ) நிதிப்பிரமாணம் 138(1) பிரகாரம் உறுதிச்சீட்டு உறுதிப்படுத்திய உத்தியோகத்தரினால் உரிய செலவுத் தலைப்பு, நிகழச்சித் திட்டம், கருத்திட்டம் போன்றவற்றிக்கான கணக்குக்கு சரியான செலவுச் சுமையொன்றாக உறுதிப்படுத்தப்பட வேண்டியபோதிலும் செலவுச் செயற்திட்டத்தின் பிரகாரம் வகைப்படுத்தும்போது 02 கருத்திட்டங்களுக்கு குறிப்பிடப்பட்டிருந்த தடைவைகள், அதேபோல செலவுகள், நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே குறிப்புக்கள் இடும்போது 79 தடைவைகள் வகைப்படுத்தல் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ன.

2.2. **முற்பணக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) திணைக்களத்தின் இயலுமை, வலு எதிர்பார்க்கப்பட்ட தொழிற்பாடுகளின் அளவு மற்றும் உரிய செயற்பாடுகளின் செலவுகளுக்கு அரசுக்கு ஒதுக்கக்கூடிய நிதியத்தின் அளவு போன்ற விடங்களினை கவனத்திற்கொண்டு முற்பணக் கணக்கில் குறிப்பிட்ட வரையறைகளினை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வு ஆண்டில், செலவின் ஆகக்கூடிய வரையறை மற்றும் பற்று மீதியின் ஆகக்கூடிய வரைறை உண்மையான மதிப்பீடு முறையே நூற்றுக்கு 19 மற்றும் நூற்றுக்கு 42 ஆகக் காணப்பட்டது

(ஆ) சேவையினைத் தவிர்த்து 2 வருடங்கள் தாண்டியும் தீர்க்கப்படாத கடன் மீதி ரூபா. 202,508 ஆகவிருந்தது.

2.3. **பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு வருதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன

(அ) 09 செலவு விடயங்களுக்கான மீதித் தொகை ரூபா. 380,743 ஐத் தாண்டி ரூபா. 1,551,496 பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச செயலகங்களினால் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான தகவல்கள் திட்டத்திற்கு UPLOARD செய்யப்பட்டிருந்த பொறுப்புக்கள் மீதி ரூபா. 1,391,475,563 ஆகவிருந்தபோதிலும் நிதிக்கூற்றின் நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா. 2,086,571,257 ஆகவிருந்தது.

2.4. **சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டுள்ளன.

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க முன்வைத்தல்.	இணங்காமை
(அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் (1) நி.பி. 371 (2) ஆ	இடைக்கால அட்டுறு வழங்கப்பட்டதன் பின்னர் உரிய வருடம் நிறைவு பெற்று அட்டுறு செலுத்தப்பட வேண்டியபோதிலும் 45 தடைவைகளுக்கான மொத்தம் ரூபா. 697,038 தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(II) நிதிப் பிரமாணம் 1647 (அ) மற்றும் 1994 ஆகஸ்டு 3 ஆந் திகதிய 26/92 (1) என்ற இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிரூபம்.	அமைச்சுக்கு உரித்தான 43 வாகனங்கள் தொடர்பில் ஆய்வொன்றினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2016 திசம்பர் 26 ஆந் திகதிய 30/2016 என்ற இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிரூபம்.	சுற்றுநிரூபத்தின் பிரகாரம் தொழிற்பாட்டுக் குத்தகைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு வாகனங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய அன்றாட ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த ஓட்ட அறிக்கைகள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படாமை.
(இ) 2019 ஜனவரி 12 ஆந் திகதிய DMA 01/2019 என்ற இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றுநிரூபம்	சம்பளக் கொடுப்பனவு தொடர்பிலான ஆலோசனைத் தாளில் சம்பளத்தினைத் தயாரிக்கும் கணனி மென்பொருளுக்கான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இரகசியச் சொற்கள் (Pass Word) உத்தியோகத்தர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும் எனக் காட்டப்பட்டபோதிலும் அவ்வாறு முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.
(FF) 2020 திசம்பர் 28 ஆந் திகதிய 01/2020 என்ற இலக்க அரச நிதிச் சுற்றுநிரூபம்	நிறுவனங்களுக்கிடையே சொத்துக்களினை மாற்றுதல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பில் சொத்துக்களின் புத்தகப் பெறுமதியினை உள்ளடக்கிய பதிவேட்டினைத் தயாரித்தல், அவற்றினை மாற்றுதல், ஒப்படைக்கும் நிறுவனங்களுக்கு வழங்குதல், சொத்துக்களினை மதிப்பீடுசெய்தல், ஒப்புரவு செய்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுதல் வேண்டுமாயினும் அமைச்சினால் சொத்துக்களினை ஒப்படைத்தலினை முன்னெடுக்குபோது சுற்றுநிரூபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5. **சொத்துக் கணக்கு மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) 2021 திசம்பர் 31 ஆந் திகதிய 2 வைப்புக் கணக்குகளின் மொத்தம் ரூபா. 1,814,858 என்பதுடன், அம்மீதியில் 1 வருடம் 5 வருடக் காலப்பகுதி தொடர்பிலான பழைய, ரூபா. 1,059,123 வைப்பு மீதி காணப்பட்டது. 2022 ஏப்ரல் மாதமளவில் அதில் ரூபா. 240,000 தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பயிற்சி நிலையங்களிலிருந்து திரட்டப்பட்டுள்ள ரூபா. 526,472 வருமானம் மற்றும் வதிவிட வசதிகளினை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை திரட்டப்பட்ட ரூபா. 157,032 அரசின் வருமானத்திற்கு வரவு வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

(இ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் ஆசிய மன்றத்திலிருந்து பெறப்பட்ட ரூபா. 211,000 அப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

2.6. **வங்கிக் கணக்குகளினைச் செயற்படுத்துதல்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) ஏதேனும் விசேட ஒப்பங்களினைப் பெறும்போது அதன் கீழ் கொடுப்பனவு செய்யக்கூடிய ஆகக்கூடிய தொகை தொடர்பில் வங்கிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஒக்டோபர் 15 ஆந் திகதிய 03/2015 என்ற இலக்க திறைசேரி தொழிற்பாடுகள் சுற்றுநிரூபத்தின் 02 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட TOD/BA/01 படிவத்தின் 11 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நி.பி. 880 பிரகாரம் அமைச்சின் 29 உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை.

(இ) பழுதான அல்லது இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பிலான அறிக்கைகளினை வைத்திருத்தல் இடம்பெற்றபோதிலும் அவ் அறிக்கைகள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

3. தொழிற்பாட்டு மீளாய்வு

3.1. அமைச்சின் பணி

(அ) 2020 ஒக்டோபர் 06 ஆந் திகதிய 2196/27 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானியினூடாக இராஜாங்க அமைச்சினால் இடம்பெற வேண்டிய செயற்பாடுகள் மற்றும் பணிகள் தொடர்பில் 5 சிறந்தமுன்னுரிமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அச்சிறந்த முன்னுரிமைகளினை செயலாக்குவதற்கு 3 நிதியச்சட்ட நிறுவனங்களான சிறிய மற்றும் நடுத்தரளவிலன முயற்சியாண்மை மூலதன நிறுவனம், சிறிய மற்றும் நடுத்தரளவிலான முயற்சியாண்மை அதிகார சபை மற்றும் அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களின் நிர்வாக அதிகாரம் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், இராஜாங்க அமைச்சினால் சிறிய மற்றும் நடுத்தரளவிலான முயற்சியாண்மை மூலதன நிறுவனம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான முயற்சியாண்மைஅதிகார சபைபோன்ற இரண்டு நிறுவனங்களுக்கான தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்கள் நிறுவனப் பதிவாளர் நாயகம் மற்றும் முயற்சியாண்மைத் திணைக்களத்தினை வினவியபோதிலும் அந்நிறுவனங்கள் தொடர்பிலான தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச வள முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திடம் 2021 யூலை 15 ஆந் திகதிய ரூபா. 1,521,370 வங்கி மீதியும், ரூபா. 61,928,356 நிலையான வைப்பொன்றும் உள்ளதுடன், வரையறுக்கப்பட்ட இறப்பர் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தினைக் கொண்ட முகாமைத்துவம் மாத்திரம் இக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 3 சொத்துக்களினை வாடகைக்கு வழங்கி வருடாந்தம் ரூபா. 10,849,164 வாடகை வருமானமொன்று கூட்டுத்தாபனத்தால் 2021 யூலை 15 ஆந் திகதியன்று உழைக்கப்பட்டபோதிலும்இக்கூட்டுத்தாபனம் நிர்வாக சபையொன்றுடன் செயலாக்கப்படவில்லை என அமைச்சின் செயலாளரினால் நிதி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல கூட்டுத்தாபனத்திடம் காணப்பட்ட அல்பிட்டிய கைத்தொழிற்சாலை 20 வருடங்களாக மூடப்பட்டுள்ளதாகவும், இக்கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பிலான அறிக்கைகளினை சட்டரீதியாக உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல ஆவணங்கள் அமைச்சிடமில்லை எனவும் மேலும் நிதி அமைச்சுக்கு அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

3.2. செயற்திறன்

3.2.1. சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்திட்டம்

வறியவர்களினைப் பணக்காரர்களாக்கும் நோக்குடன், தெரிவு செய்யப்பட்ட 3 மாவட்டங்களின் 165 பயனாளிகளினை இலக்கிட்டு ரூபா. 16.08 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், திசம்பர் 31 ஆந் திகதியளவில் 108 பயனாளிகளுக்கு ரூபா. 10.52 மில்லியன் முன்னேற்றமொன்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இம்முன்னோடிச் செயற்திட்டத்தினை அமுலாக்கியவேளையில் மூன்று மாவட்டங்களினைத் தெரிவு செய்தல் தலைகீழாகஇடம்பெற்றுள்ளதுடன், பயனாளிகளினைத் தெரிவு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்கள், தெரிவு செய்யும் முறைமை மற்றும் முன்னோடிச் செயற்திட்டத்தின் விளைத்திறன் மதிப்பீட்டுத் திட்டம் தொடர்பிலான கணக்காய்வுக்குப் போதிய தகவல்கள் வெளிக்கொணரப்பட்டிருக்கவில்லை.

3.2.2. **பிற நேரொத்த அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினூடாக அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள ரூபா. 672,100,00 ஒதுக்கீடுகள்.**

சமுர்த்தி இராஜாங்க அமைச்சின் திருத்தப்பட்ட செயற்திட்டத்தின் பிரகாரம், ரூபா. 773.9 மில்லியன் பல்வேறு நிறுவனங்களுக்கு ஒதுக்கீடுகளாக ஒதுக்கப்பட்டு,22,215 செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதிலும் 2021 ஆம் ஆண்டின் 4வது காலாண்டின் முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கையின் பிரகாரம் 13,020 செயற்திட்டங்களினை முடிப்பதற்கு ரூபா. 686.66 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. முடிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான கட்டுநிதிக் கிடைப்பனவின் தாமதம் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், உபகரணங்கள் மற்றும் பிற செலவுகளுக்காக கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி ரூபா. 75,625,000 ஆகவிருந்தது.

3.2.3. **சௌபாக்யா தேசியக் கிராமங்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
(அ) சௌபாக்யா சமுர்த்தி உற்பத்திக் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதற்கு ரூபா. 1,800 மில்லியன் செலவு செய்யப்பட்டு 1,250 செயற்திட்டங்களினைஅமுலாக்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. திசம்பர் 31 ஆந் திகதியமுன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் 1,591 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் 1,436 செயற்திட்டங்களுக்கு ரூபா. 733.92 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் ரூபா. 819.22 மில்லியன் கையிலுள்ள பற்றுச்சீட்டுக்கள் எனவும் காட்டப்பட்டிருந்தது. மாவட்டச் செயலகங்களில் செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்குத் தேவையான கட்டுநிதியினை, கோரிய வருட நிறைவில் முன்னெடுத்திருத்தலின் காரணமாக செயற்திட்டங்களினைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்துள்ளதுடன் ஒதுக்கீட்டு நிதியில் ரூபா. 246.86 மில்லியன் மீதமாகியிருந்தது.

(ஆ) உற்பத்தித் துறைகளினை இனங்காணுதல் மற்றும் கிராமங்களினைத் தெரிவு செய்யும்போது, ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும் வளங்களின் கிடைக்கும் தன்மை, உற்பத்தி மாறுபாடுமற்றும் நிலைபேறானதாக அமுலாக்குவதன் இயலுமை அல்லது தற்போதுள்ள உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டு அல்லது கிராமங்களினைத் தெரிவு செய்தல் வேண்டும் எனவும் உற்பத்திகளினைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு மூலப்பொருட்கள் காணப்படுதல், பூகோளகாலநிலைப் பிரதேசங்களின் பிரகாரம் மிகவும் உகந்த உற்பத்தித் திறனினை அதிகரிப்பதற்கு தற்போதைய சாத்தியம் போன்ற கவனம் செலுத்தப்பட வேண்டிய விசேட விடயங்களின் மீது கவனத்தினைச் செலுத்தாது கிராமங்களினைத் தெரிவு செய்தல் இடம்பெற்றுள்ளதாக சில பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற பரீட்சார்த்தபரிசோதனையில் வெளிக்கொணரப்பட்டது. உதாரணம், தெங்குடன் தொடர்பான உற்பத்திக் கிராமங்கள்.

(இ) கொழும்பு மாவட்டத்தின் கோமாகம பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பரீட்சார்த்த பரீட்சிப்பின் பிரகாரம் சுற்றுநிரூபங்களின் பிரகாரம் தனி நபர் ஒருவருக்கு ரூபா. ஒரு இலட்சம் வரையில் வழங்கப்படுதல் வேண்டுமாயினும் பொறி ஒன்றின் பெறுமதி ரூபா. 605,0000 ஆன தேங்காய் எண்ணெயினை உற்பத்தி செய்யும் 8 எந்திரங்கள் 8 பயனாளிகளுக்கும், இரண்டு பயனாளிகளுக்கு தேங்காய் ஓட்டினை வெட்டும் எந்திரமொன்று வழங்கப்படுதல் வேண்டுமாயினும் ரூபா. 175,000 பெறுமதியினைக் கொண்ட தேங்காய் ஓட்டினை வெட்டும் எந்திரமொன்று ஒரு பயனாளிக்கும் என்றவாறு வழங்கப்பட்டிருந்தது. எனினும், தேவையான மூலப்பொருட்கள் இல்லாமையினால் செயற்திட்டங்களினை அமுலாக்குவதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக 2021 திசம்பர் 14 ஆந் திகதி இடம்பெற்ற பௌதிக பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டுள்ளது.

3.2.4. <u>சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களுடன் தொடர்பிலான பொது உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துதல்.</u>

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) பொது உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்தும்போது, 2021 ஆம் ஆண்டில் பணிகளினை நிறைவு செய்வதற்கு ஏற்ற முன்மொழிவுகளினை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும் எனவும் எதிர்வரும் வருடம் தொடர்பில் எதிர்பாராதவற்றினை செய்யாதுவிடுமாறு அறிவிக்கப்பட்டபோதும் பரீட்சார்த்த பரீட்சிப்பின் பிரகாரம் 3 பிரதேச செயலகங்களுக்கான 5 செயற்திட்டங்களுக்கான மொத்தம் ரூபா. 8,995,587 கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களாக இருந்தது.

(ஆ) திம்பிரிகஸ்யாய, கிருளப்பன இலைக்கஞ்சிபாரம்பரியஒளடத உற்பத்தி போன்ற சௌபாக்யா உற்பத்திச் செயற்திட்டத்தில் முன்னுரிமைக்குத் தேவையானவாறு புதிய உற்பத்திக் கிராமொன்றினை அமைப்பதற்கு இனங்கண்டபோதிலும், அத்தேவைப்பாடு தொடர்பில் கவனஞ் செலுத்தாது மீளாய்வு வருடம் தொடர்பிலான ஒதுக்கீடுகள் ரூபா. 3,000,000 நிதியில், ரூபா. 1,488,402 செலவு செய்யப்பட்டு தற்போதுள்ள உற்பத்திக் கிராமத்திற்கு அருகாமையிலுள்ள பழுதடைந்த வீதி பழுதுபார்க்கப்பட்டு ரூபா. 1,511,598 மீதமான நிதி அமைச்சினால் மீளவும் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களின் சமுதாயத்தின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு நேரடியாகப் பங்களிப்பு வழங்கும் பொது உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்தும் நோக்கம் நிறைவேற்றப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(இ) 2021 திசம்பர் 29 ஆந் திகதிய 01/2021 என்ற இலக்க அரச நிதி சுற்றுநிரூபத்தின் பிரகாரம் ஒப்பந்தங்களினை வழங்குவதை பரிந்துரை செய்யும்போது உரிய ஒப்பந்தக்காரருக்கு நிதி வசதிகள் உள்ளது என்பதற்கு வங்கிக் கூற்றினூடாக உறுதிப்படுத்துதல், ஒப்பந்தக்காரரின் அனுபவங்கள் பணி தொடர்பிலான நியமம் தொடர்பில் திருப்திபடக்கூடிய சாட்சிகளினை வழங்குதல், ஒரு வருடத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட போதிலும் பூர்த்தி செய்யப்படாதுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பிலும் மற்றும் உரிய பணி துணை ஒப்பந்தம் அறிந்திருக்காமை தொடர்பில் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள கூற்றுக்கள் தொடர்பில் திணைக்கத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயரிடப்படும் பிரதிநிதிகள் மூவரினைக் கொண்ட மூவர் குழுவினூடாக திருப்திப்படும் பட்சத்தில் ஒப்பந்தங்களினை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டபோதிலும், கோமாகம, பாதுக்கா மற்றும் கடுவல பிரதேச செயலகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதற்கு உரிய செயற்திட்டங்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக புலனாய்வில் தென்படவில்லை.

(ஈ) சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களுடன் தொடர்பிலான சமுதாயத்தின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு நேரடியான பங்களிப்பொன்றினை வழங்கும் உட்கட்டமைப்பு வசதிகளினை வழங்குதல் இச் செயற்திட்டத்தின் நோக்கமாயினும், அதற்கு முரணானதாக சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களின் வெளியேயுள்ள பகுதிகளில் வீதிகளினை நிர்மாணித்தல் மற்றும் பக்கச் சுவர்கள் மற்றும் கால்வாய் திட்டத்தினை அமைத்தல், விசேட செயற்திட்டங்களாகப் பெயரிடப்பட்டு மீளாய்வு ஆண்டில் 4 செயற்திட்டங்களுக்கு ரூபா. 5,306,972 செலவு செய்யப்பட்டுள்ளது.

3.2.5. **கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுள்ளன.

(அ) சமுர்த்தி உற்பத்திக் கிராமங்கள் மற்றும் சௌபாக்யா உற்பத்தி குக்கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள 50 கிராமங்களினுள் சமுதாயத்தின் வாழ்வாதாரத்தில் இடம்பெற்றுள்ள மாற்றங்கள் தொடர்பில் பரீட்சிப்பொன்றினை முன்னெடுத்தல் செயற்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வு ஆண்டின் நிறைவில் 25 மாதிரிக் கிராமங்கள் தொடர்பில் மாத்திரம் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கையில் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினை ஒழிக்கும் நோக்குடன் நிறுவனத்தின் செயற்திட்டம் மற்றும் பாதீட்டுஆவணத்தின் பிரகாரம் மீளாய்வு ஆண்டு தொடர்பில் ஒதுக்கப்பட்டுள்ள ரூபா. 50.36 மில்லியன் நிதியில், நிறுவனத்தின் நோக்கங்களினை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகள் 8 தொடர்பில் ஒதுக்கீட்டு நிதியில் நூற்றுக்கு 1.6 அதாவது ரூபா. 0.83 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்தது. மீதமான நூற்றுக்கு 82. ஒதுக்கீட்டு நிதியில் நூற்றுக்கு 10.6 கட்டிடம் பழுதுபார்த்தல் மற்றும் அலுவலக உபகரணங்களினைக் கொள்வனவு செய்வதற்கும் நூற்றுக்கு 72 மீண்டுவரும் செலவுகள் தொடர்பிலும் செலவு செய்யப்பட்டுள்ளது. வெளி நிறுவனங்களுக்குச் சேவைகளினை வழங்கி மீளாய்வு ஆண்டில் ரூபா. 538,378 வருமானமொன்றினைப் பெற்றிருந்ததுடன், இந்நிறுவனத்தினை அமைப்பதன் நோக்கங்கள் மற்றும் கடமைப் பொறுப்புத் தொடர்பில் நேரடியாகச் செலவு செய்யப்பட்ட நிதி நூற்றுக்கு 1.6 மாத்திரமேயாகும்.

3.2.6. **செயற்திறன் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள வரைவுச் செயற்திறன் அறிக்கையின் பிரகாரம் வீட்டு முகாமைத்துவம் மற்றும் குடும்பஅபிவிருத்திச் செயற்பாட்டினூடாக தொழில்முனைவோர் பயிற்சியினை வழங்குதல் மற்றும் அதனூடாக குறைந்த வருமானப் பயனாளிகளினை வலுவூட்டும் 04 ஒன்லைன் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு 179 பேர் கலந்துகொண்டுள்ளதாகவும், 2021 திசம்பர் 31 ஆந் திகதி முன்வைக்கப்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அக்குடும்பங்கள் 200 குடும்பங்களினை வலுவூட்டும் ஒன்லைன் நிகழ்ச்சித் திட்டங்கள் 19 நடாத்தப்பட்டு 850 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளதாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சமுர்த்திப் பயனாளி குடும்பங்கள், இரண்டு இலட்சம் செயற்திட்டத்திற்கு சமுர்த்தித் திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 192,958 செயற்திட்டங்களுக்கு ரூபா. 4,600.9 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், திசம்பர் 31 ஆந் திகதிய முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 75,768 செயற்திட்டங்கள் மற்றும் அரசின் பங்களிப்பு ரூபா. 2,649.37 எனவும் காட்டப்பட்டிருந்தது. அமைச்சின செயற்திறன் அறிக்கையின் பிரகாரம் 64,392 செயற்திட்டங்கள் மற்றும் ரூபா. 2,415.39 மில்லியன் செலவொன்று ஈடு செய்யப்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது.

3.3. **பிரதான பணிகளுக்கு முரணாகும் செயற்பாடுகள்**

(அ) சமுர்த்தி இராஜாங்க அமைச்சின் செலவு தலைப்புக்கு மேலாக 240 தலைப்பின் கீழ் குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக இரண்டு இலட்சம் சமுர்த்திப் பயனாளி குடும்பங்களினை வலுவூட்டும் செயற்திட்டத்திற்கு ரூபா. 5,750 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ரூபா.4,691,980,006 சகல மாவட்டச் செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், விடுவிக்கப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடுகளில் ரூபா. 102,071,740 மீளவும் வழங்கப்பட்டுள்ளது. செலவு செய்யப்பட்ட நிதியிலில் ரூபா. 433,337,832 2021/2022 வீட்டுத்தோட்டப் பயிர் வளரப்புச் செலவுகளுக்கு செலவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இரண்டு இலட்சம் சமுர்த்திப் பயனாளிகளினை,செயற்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா. 33.5 மில்லியன் ஒதுக்கீடுகளில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கணிக்கப்படாத பிரதான அலுவலகத்தின் தேவைப்பாடு தொடர்பில் 02 தேக்கு அலுமாரிகள் கொள்வனவு செய்தல் மற்றும் அலுவலக மேசை விரிப்புக்களினைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா. 227,788 வும், சமுர்த்தி ரன்பத் சான்றிதழ்களினை அச்சடிப்பதற்காக ரூபா.7,143,750 வும் திணைக்களத்தினால் செலவு செய்யப்பட்டுள்ளது. சமுர்த்தி ரன்பத் சான்றிதழ்களினை வழங்குதல் தொடர்பில் முறைசார் எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை.

3.4. சொத்துக்களின் முகாமை

பின்வருவம் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2020 ஆம் ஆண்டில் சமுதாயநிர்வாகம் மற்றும் உற்பத்திச் சேவைகளினை இழந்த 5,000 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினை ஏற்படுத்துவதனூடாக அக்கிராமத்தினுள் வாழும் மக்களின் வாழ்க்கை மட்டத்தினை மேம்படுத்துவதற்கு மக்களின் மாதாந்த வருமானத்தினை இரட்டிப்பாக்கும் நோக்கில் ஜனாதிபதி செயலகத்தினூடாக கிராம சக்தி மக்கள் இயக்கத்தினை அமுலாக்குவதற்கு 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடுகள் பெறப்பட்டுள்ளன. 2020 யூன் 30 ஆந் திகதியளவில் பெறப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் தொகை ரூபா. 2,391.90 ஆகும். 2021 திசம்பர் 31 ஆந் திகதியன்று பிரதேச செயலாளர்களினால் அனுப்பப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் 12 மாவட்டங்களில் அமையப் பெற்ற கிராம சக்தி சங்கங்களின் எண்ணிக்கை 1975 என்பதுடன். அத்தினத்தன்று காணப்படும் காசு மீதி ரூபா. 791,789,538 மற்றும் கிராம சக்திப் பணியகம் தொடர்பில் அறவீடு செய்யப்பட வேண்டிய கடன் மீதி ரூபா. 200,394,099 ஆகும். அச்சங்கங்களில் தற்போதளவில் 999 சங்கங்கள் செயலற்ற நிலையில் காணப்பட்டுள்ளது.

(ஆ) கிராம சக்திப் பணியகத்திடம் பல்வேறு விடய வகைகள் 49 க்கான அலுவலக உபகரணங்களின் அலகுகள் 519 காணப்படுவதுடன், அவ் அலுவலக உபகரணங்களில் 14 விடயங்களுக்கான பொருள் அலகுகள் 38 மாத்திரமே சௌபாக்யா பணியகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதிச் சொத்துக்களினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2021 சௌபாக்யா பணியகத்திற்காக அலுவலக உபகரணங்களினைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 5,717,938 செலவு செய்யப்பட்டது.

(இ) அமைசுக்கு உரித்தான நிறுவனங்ளின் மாற்றத்திற்கு முன்னர் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் காணப்பட்ட கிராம சக்தி அலுவலகத்தின் செயற்பாடுகள் இவ் அமைச்சுக்கு உரித்தான சௌபாக்யா பணியகத்திற்கு இணைக்கப்பட்ட போதிலும் ஜனாதிபதி செயலகத்திலிலிருந்து கிராம சக்தி அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட டபிள் கப் வாகனம் மற்றும் வான் சௌபாக்யா பணியகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

3.5. **இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பிலான பரிட்சிப்பு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2014 செப்பெரம்பர் 24 ஆந் திகதி விபத்துக்குள்ளான வாகன் தொடர்பில் நி.பி. 104 (3) பிரகாரம் ஆரம்ப அறிக்கையினை விபத்து இடம்பெற்று 2 வருடங்களின் பின்னர் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், 104 (4) பிராகரம் முழுமையான அறிக்கையினை முன்வைத்தல் மற்றும் நி.பி. 105, 106 பிரகாரம் செயற்படுதல் அமைச்சினால் இடம்பெறவில்லை. 2021 திசம்பர் 31 ஆந் திகதி வரை 7 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதி கடந்திருந்தாலும் விபத்துக்குள்ளான இவ் வாகனத்தினை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் விபத்து தொடர்பில் காப்புறுதி இழப்பீட்டினைக் கோருதல் 6 வருடங்களின் பின்னர் 2020 ஒக்டோபர் 26 ஆந் திகதி அமைச்சினால் இடம்பெற்றுள்ளது. நிதிக்கூற்றுக்களில் மேலும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்குள்ள இழப்புக்கள் தொடர்பிலான கூற்றில் இவ் விபத்துத் தொடர்பிலான விடயங்கள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இராஜாங்க அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளருக்கு இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம், 2021 யூலை 17 ஆந் திகதி அனுராதபுரம் தகய்யாக் கிராமத்தில் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், கப் வாகனத்தின் முகவர் நிறுவனத்தினால் பழுதுபார்ப்புச் செலவு ரூபா. 371,945 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், காப்புறுதி இழப்பீடாக 263,508 கிடைக்கப் பெற்றது. பழுதுபார்ப்புச் செலவின் மீதமாகிய ரூபா. 108,411 அமைச்சினால் முகவர் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், விபத்துடன் தொடர்பிலான நி.பி. 104(3) பிரகாரம் புலனாய்வு, விபத்து இடம்பெற்று 6 மாதங்களின் பின்னர் அதாவது 2021 செப்ரெம்பர் 29 ஆந் திகதி இடம்பெற்றது.

(இ) 2 வாகனங்கள் 3 தடைவைகள் விபத்துக்கு உள்ளாகியமை தொடர்பில் நிபி. 104 (4) பிரகாரம் முழுமையான அறிக்கைகள் முன்வைக்கப்படாதிருத்தல்

(ஈ) 2021 மார்ச் மாதம் 10 ஆந் திகதி விபத்துக்குள்ளாகிய ஜீப் வாகனத்திற்கு நேர்ந்துள்ள ரூபா. 18,400 இழப்புத் தொடர்பில் நி.பி. 110 பிரகாரம் நிதிக் கூற்றுக்களின் இழப்புக்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பிலான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2020 பொருள் கணக்கெடுப்புச் சபை அறிக்கைகளினூடாக வெளிக்கொணரப்பட்ட ரூபா. 138,000 இராஜாங்க அமைச்சர் செயலகத்தின் Dialog 1 phone 64 GB (90) 01 தொலைபேசியின் குறைபாட்டு இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பிலான ஏட்டில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

3.6. **முகாமைத்துவப் பலவீனங்கள்**

தொழிற்பாட்டுக் குத்தகைத் திட்டத்தின் கீழ் அமைச்சு தொடர்பில் பிரத்தியேக நிதி நிறுவனத்தின் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 05 வருடக் காலப்பகுதிக்கு 02 வாகனங்கள் பெறப்பட்டிருந்தன. இவ்விரண்டு வாகனங்கள் தொடர்பில் 2021 திசம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா. 13,542,304 நிதி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், மாதாந்தம் ஆகக்குறைந்த வகையில் ஓட்டக்கூடிய 3,000 கி. மீ. தூரத்தினை ஓட்டியிருக்கவில்லை. செலவு அறிக்கைகளின் பிரகாரம் அமைச்சின் Pool (பொது) வாகனங்களின் ஓட்டம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுதல் மற்றும் பொது வாகனங்களினை விளைத்திறனானதாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் அமைச்சுக்கு உரித்தான வாகனங்கள் பிற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் குத்தகை அடிப்படையின் கீழ் வாகனங்களினைப் பெற்று 2021 திசம்பர் 31 ஆந் திகதியளவில் குத்தகைத் தவணைகளாக ரூபா. 13,542,304 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

3.7. **கொள்முதல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) கொள்முதல் திட்டத்தினைத் தயாரிக்கும் போது அரசின் கொள்முதல் வழிகாட்டல் கோவையின் 4.2.1(இ) மற்றும் 4.2.2(அ) பிரகாரம் கொள்முதல் செயற்பாடுகள் விரிவானதாகவும் மற்றும் கொள்முதல் காலவரையறையினை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டில் பிரதான கொள்முதல் திட்டத்திற்கும் மற்றும் செயற்திட்டத்திற்கும் உள்ளடக்கப்படாத ரூபா 11,037,137 பெறுமதியான அலுவலக, கணனி உதிரிப்பாகங்கள், கட்டில்கள் மற்றும் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அரசின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டல் கோவைக்கு முரணாகும் 10 தடைவைகளில் மொத்தம் ரூபா. 11,037,137 பெறுமதியான அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் கணனி உபகரணங்கள் 2021 யூலை 05 ஆந் திகதிய அமைப/21/1118/313/036 என்ற இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திலுள்ளவாறு அரச வர்த்தக (பல்வேறு) சட்டரீதியான கூட்டுத்தாபனத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

4. **மனித வள முகாமைத்துவம்**

2021 திசம்பர் 31 ஆந் திகதியன்று அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பிலான தகவல்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின்

ஊழியர்களின் வகை	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்கள்/மேலதிகம்
சிரேஸ்டநிலை	25	26	+01
மூன்றாம் நிலை	01	04	+03
இரண்டாம் நிலை	16	283	+267
ஆரம்ப நிலை	18	55	+37
	60	368	308

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மூன்றாம்நிலை அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 01 என்றபோதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் பதவியினையும் உள்ளடக்கி 03 பதவிகள் மேலதிகமாகக் காணப்பட்டது.

(ஆ) இரண்டாம் நிலை மற்றும் ஆரம்பநிலை பதவிகள் முறையே 16 மற்றும் 18 அங்கீகரிக்கப்பட்டபோதிலும் உண்மையான பணியாட் தொகுதி முறையே 283 மற்றும் 55 என்றவாறு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையினைத் தாண்டி 304 சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை.

(இ) 2020 செப்ரெம்பர் 04 ஆந் திகதிய DMS/SM/02 என்ற இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைகளக் கடிதத்தின் 5 வது பந்தியின் பிரகாரம் இவ் அமைச்சு மக்களினை மையமாகக் கொண்டு அரசின் அபிவிருத்தி நோக்குகளினை அடைவதற்கு அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள், செயற்பாடுகள், முன்னுரிமைகள் மற்றும் அதற்கான இலக்குகளினை அடைவதில் உரிய துறைகளின் விசேட அறிவுகள் மற்றும் திறமைகளினைக் கொண்ட பணியாட்தொகுதி பங்களிப்பொன்று தேவை எனவும், அவ்விடயங்களினைக் கவனத்திற் கொண்டு பணியாட்தொகுதி திருத்தம் செய்யப்படுதல் வேண்டும் எனவும் அது தொடர்பில் முறைசார் முன்மொழிவுகளினை முன்வைக்குமாறும் எடுத்துக் காட்டியபோதிலும். அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினைத் தாண்டி தற்போதுள்ள உண்மையான பணியாட்தொகுதியினை அங்கீகரித்துக் கொள்ளுவதற்கு அமைச்சினால் 2021 ஜனவரி 19, 2021 பெப்ரவரி 11 மற்றும் 2021 ஆகஸ்டு 03 ஆந் திகதிய SMS/ADM//1/2/-2019 என்ற கடிதங்கள் முகாமைத்துவச் சேவைகள திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டபோதிலும் 2022 ஆம் ஆண்டு வரையில் அது தொடர்பில் அங்கீகாரம் பெற்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 என்ற இலக்க ஜனாதிபதிச் செயலகத்தின் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் அமைச்சரின் உதவி பணியாட்தொகுதிஇணைப்புமற்றும் எண்ணிக்கை காட்டப்பட்டிருந்ததுடன், அவ் இணைப்பில் உள்ளடக்கப்படாத வீடியோ புகைப்படக் கலைஞர், தொழிற் சங்க ஒருங்கிணைப்பாளர் மற்றும் புகைப்பட உதவியாளர் போன்ற பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு அவர்கள் அமைச்சின் பணியாட்தொகுதிக்கு இணைப்புச் செய்யப்பட்டு சம்பளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒப்பம்/கே.சீ.பீ. சேனாரத்ன,
சிரேஸ்ட உதவி கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதிக்காக.

பிரதி – பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்.
(சிங்கள மொழியில் வெளியிடப்பட்ட ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கையின் ஆங்கில மொழிபெயர்ப்பில் மேற்கூறியவை)

அத்தியாயம் 04 - செயற்திறன் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு)

	எதிர்பார்த்த விளைவின் சதவீதம் (%) ஆக உண்மைநிலை விளைவு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
நிர்வாகப் பிரிவு			
திறன், அறிவு விருத்தி, உளப்பாங்கு மற்றும் அறிவு விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பயிற்சியினைப் பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை.	√		
உளவளத்துணைப் பிரிவு			
தரப்படுத்தப்பட்ட உளவளத்துணை சேவையினை வழங்குவதற்கு தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு			√
முறைசார் அணுகுமுறையுடன் மறுவடிவமைக்கப்பட்ட 24 மணிநேர கையடக்கத் தொலைபேசி உளவளத்துணை சேவையினூடாக ஆலோசனை வழங்கப்பட்ட சேவைநாடியினர்களின் எண்ணிக்கை	√		
உளவளத்துணை சேயினை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட விளம்பரத் தொகுதிகளின் எண்ணிக்கை	√		
தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிக்கப்பட்ட உளவளத்துணைச் செயற்பாடுகளின் எண்ணிக்கை	√		
சமுதாயம் உளக் கோளாறுகளுக்கு ஆளாகாமல் தடுப்பதற்கு நடாத்தப்பட்ட குழுசார் உளவளத்துணை நிகழச்சிச் திட்டங்களின் எண்ணிக்கை	√		
நிர்மாணிக்கப்பட்ட, இடம் ஒதுக்கப்பட்ட, பராமரிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட மற்றும் அலுவலக உபகரணங்கள் வழங்கப்பட்ட சித்சரண உளவளத்துணை நிலையங்களின் எண்ணிக்கை	√		
உளவளத்துணை உத்தியோகத்தர்களின் திறன் விருத்தி	√		
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்			
உதவி உபகரணங்கள் வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை	√		
மருத்துவ உதவி வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை	√		
கல்வி உதவி வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை	√		
சுயதொழில் உதவி வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை	√		
வீடமைப்பு உதவி வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√ (55% சுப்பிரி வாசனா லொத்தர் வருமானம் குறைவடைந்த மையின் காரணத்தினா ல் எதிர்பார்த்த ஒதுக்கீடுகள் கி டைக்காமை)
ரூபா. 5000மாதாந்த வாழ்வாதார உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை	√		
மேம்படுத்தப்பட்ட தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை	√		
ரூபா. 5000 வாழ்வாதார உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை	√		
பராமரிப்புச் செலவுகளினை வழங்குவதனூடாக நலன்புரி கிடைக்கப் பெற்ற விக்டோரியா இல்லத்தில் தங்கியுள்ள தொகுதியினர்	√		
தொழிற் பயிற்சி கிடைக்கப் பெற்ற அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை	√		
திறன் விருத்தி செய்யப்பட்ட அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை	√		
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்			
சமூகப் பணியில் முதுகலைப் பாடநெறியினைத் தொடர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை	√		
சமூகப் பணியில் இளங்கலைப் பாடநெறியினைத் தொடர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை	√		

	எதிர்பார்த்த விளைவின் சதவீதம் (%) ஆக உண்மைநிலை விளைவு		
	100% - 90%	75% - 89%	50% - 74%
சமூகப் பணியில் உயர் டிப்ளோமாப் பாட நெறியினைத் தொடர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை	√		
திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்துகொண்ட நபர்களின் எண்ணிக்கை	√		
முதியோர் கல்வி மற்றும் முதியோர் பராமரிப்புத் தொடர்பில் டிப்ளோமாப் பாடநெறியில் கலந்துகொண்ட நபர்களின் எண்ணிக்கை	√		
உளவளத்துணை தொடர்பில் டிப்ளோமாப் பாடநெறியினைத் தொடர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை	√		
நிர்மாணிக்கப்பட்ட புதிய தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கட்டிடம்		√	
அச்சடிக்கப்பட்ட சமூகப் பணி தொடர்பிலான வெளியீடுகளின் எண்ணிக்கை	√		
பல்வேறு சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் இடம்பெற்ற ஆய்வுகள் மற்றும் சாத்திய வளக் கற்கை ஆய்வுகளின் எண்ணிக்கை		√	
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை			
ஓய்வூதியப் பிரேரணைத் திட்டம் தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை			√
ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் கிடைக்கப் பெற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை	√		
கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்			
பூர்த்தி செய்யப்பட்ட ஆராய்ச்சி/ஆய்வுகளின் எண்ணிக்கை (வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பிலான ஆராய்ச்சி/ஆய்வு)	√		
நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்ட சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமங்களின் எண்ணிக்கை		√	
கலந்துகொண்டோர்களின் எண்ணிக்கை மற்றும் அடையாளம் காணப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை (2021வருடாந்த திட்டம் தொடர்பிலான மீளாய்வு மற்றும் 2022வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்.		√	
பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் கலந்துகொண்டோர்களின் எண்ணிக்கை(குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களினை வலுவூட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்ட அபிவிருத்தி இடைத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்)	√		
வெளியிடப்பட்ட பிரசுரங்களின் எண்ணிக்கை (பிரஜாசக்தி சஞ்சிகை, இணைய வெளியீடு)	√		
நாளதுவரைப்படுத்தப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை (இணையத் தளத்தினை நாளதுவரைப்படுத்தல்)	√		
வெளியிடப்பட்ட பிரசுரங்களின் எண்ணிக்கை (தரணய செய்திக் கதிர், இணையப் பக்கம்)	√		
கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் எண்ணிக்கை (அலுவலக உபகரணங்களினைக் கொள்வனவு செய்தல்)	√		
செயற்திட்டங்களின் எண்ணிக்கை (கட்டிடங்கள் பழுதுபார்ப்பு)		√	
சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்			
நிறுவப்பட்ட சௌபாக்யா உற்பத்திக் கிராமங்களின் எண்ணிக்கை	√		
அபிவிருத்தி செய்யப்பட்ட பொது உட்கட்டமைப்பு வசதி செயற்திட்டங்களின் எண்ணிக்கை	√		
நடாத்தப்பட்ட சௌபாக்யா மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	√		
கொடுப்பனவு செய்து நிறைவு செய்யப்பட்ட கிராம சக்தி கையிலுள்ள பற்றுச்சீட்டுக்களின் எண்ணிக்கை	√		

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை (SDG) நிறைவேற்றுவதன் செயற்திறன்

5.1 இனங்காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி நோக்குகளினை எடுத்துக் காட்டவும்.

இலக்கு/நோக்கம்	இலக்குகள்	சாதனைக் குறிகாட்டிகள்	இதுவரையில் சாதனையினைப் பெற்றுக் கொண்டதன் முன்னேற்றம்		
			0 % - 49 %	50 % - 74%	75% -100%
நிர்வாகப் பிரிவு					
1. தன்னிறைவான, நியாயமான, தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள்பூராவும் கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.	உத்தியோகத்தர்களினால் வழங்கப்படும் சேவையின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனினை மேம்படுத்துதல்.	பயிற்சியினைப் பெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை			√
உளவளத்துணைப் பிரிவு					
1. ஆரோக்கியமான வாழ்க்கையினை உறுதிப்படுத்தி சகல வயதிலுமுள்ளவர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல்.	சமுதாயம் உளக் கோளாறிலிருந்து மீளுவதற்கு உளவளத்துணை சேவையினை அமுலாக்குதல்.	சேவையினைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை			√
2. பேண்தகு அபிவிருத்திக்கான அமைதியான மற்றும் முழுமையான சமூகமொன்றினை உருவாக்குதல், அனைவருக்கும் நீதிக்கான வாய்ப்புக்களினை வழங்குதல்அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்பான மற்றும் முழுமையான நிறுவனங்களை உருவாக்குதல்	தரப்படுத்தப்பட்ட உளவளத்துணை சேவையினை வழங்குவதற்கு சட்டவரைவினைத் தயாரித்தல்.	சேவையினைப் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை			√
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்					
1. எல்லா இடங்களிலுமுள்ள அனைத்து வகையான வறுமையினை ஒழித்தல்.	அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாதாந்தம் ரூபா. 5000/- வாழ்வாதார உதவியினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√
	தனிப் பெற்றாரினைக் கொண்ட குடும்பங்களினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்	தனிப் பெற்றாரினைக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை			√
	அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சுய தொழில் உதவிகளினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√
	அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவிகளினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை		√	

இலக்கு/நோக்கம்	இலக்குகள்	சாதனைக் குறிகாட்டிகள்	இதுவரையில் சாதனையினைப் பெற்றுக் கொண்டதன் முன்னேற்றம்		
			0 % - 49 %	50 % - 74%	75% -100%
2. ஆரோக்கியமான வாழ்க்கையினை உறுதிப்படுத்தி சகல வயதிலுமுள்ளவர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல்.	நீண்டகாலமாக சிகிச்சையினைப் பெறும் நோயாளர்களுக்கு மருத்துவ உதவிகளினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√
	சிறுநீரக நோயாளர்களுக்கு ரூபா. 5000/- வாழ்வாதார உதவிகளினை வழங்குதல்.	நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை			√
	அங்கவீனமுற்ற நபர்களுக்கு உதவி உபகரணங்களினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√
	விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவியினை வழங்குதல்.	விடுதிப் படுக்கையிலுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை			√
3. தன்னிறைவான, நியாயமான, தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள்பூராவும் கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தொழிற் பயிற்சியினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√
	அங்கவீனமுற்ற நபர்களுக்கு சுய தொழில் உதவிகளினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√
	அங்கவீனமுற்ற நபர்களுக்குத் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√
	அங்கவீனமுற்ற நபர்களுக்குக் கல்வி உதவிகளினை வழங்குதல்.	அங்கவீனமுற்ற பிள்ளைகள்			√
	அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்	அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை			√
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்					
1. தன்னிறைவான, நியாயமான, தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள்பூராவும் கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.	சமூகப் பணி தொடர்பிலான கல்வியினை வழங்குதல்.	பாடநெறியினைத் தொடர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை			√
	வெளிக்கள மேற்பார்வையாளர்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் தலைவர்களின் திறன் மேம்பாடு.	கலந்து கொண்ட நபர்களின் எண்ணிக்கை			√
	முதியோர் கல்வி மற்றும் முதியோர் பராமரிப்புத் தொடர்பில் கல்வியினை வழங்குதல்.	கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை			√
	உளவளத்துணை தொடர்பில் கல்வியினை வழங்குதல்.	கலந்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை			√

இலக்கு/நோக்கம்	இலக்குகள்	சாதனைக் குறிகாட்டிகள்	இதுவரையில் சாதனையினைப் பெற்றுக் கொண்டதன் முன்னேற்றம்		
			0 % - 49 %	50 % - 74%	75% -100%
	சமூகப் பணிக் கல்விக்குப் பொருத்தமான பௌதிகச் சுற்றுச்சூழலினை அமைத்தல்	நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடம்		√	
	சமூகப் பணி தொடர்பிலான விழிப்புணர்வினை அதிகரித்தல் (வெளியீடுகளினூடாக)	அச்சிடப்பட்ட வெளியீடுகளின் எண்ணிக்கை	√		
2. தன்னிறைவான, நியாயமான, தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள்பூராவும் கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.	பல்வேறு சமூகப் பிரச்சினைகள் தொடர்பிலான ஆராய்ச்சிசார் ஆய்வுகளினை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் சாத்தியவளக் கற்கை ஆய்வுகளின் எண்ணிக்கை		√	
கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்					
1. தன்னிறைவான, நியாயமான, தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள்பூராவும் கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.	பெண்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை		√	
	கிராமியச் சமுதாயம் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புக்களின் (CBO) அங்கத்தவர்களுக்கு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை			√
1.தன்னிறைவான, நியாயமான, தரமான கல்வியொன்றினை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள்பூராவும் கற்கும் வாய்ப்பினை வழங்குதல்.	கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள்/அரச சாரா உத்தியோகத்தர்களுக்கு சமூகத்தினை அணிதிரட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை			√
	கிராமப்புதொழில்முனைவோருக்கான பயிற்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களினை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை			√
2. சகல இடங்களிலுமுள்ள எல்லா வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டுவருதல்	வறுமை ஒழிப்பு, கிராமிய அபிவிருத்தி தொடர்பிலான பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினைத் தயாரித்தல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை			√
	அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு விடுதிகள், விரிவுரை மண்டபம் மற்றும் சிற்றுண்டிச்சாலை வசதிகளினை வழங்குதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை			√

இலக்கு/நோக்கம்	இலக்குகள்	சாதனைக் குறிகாட்டிகள்	இதுவரையில் சாதனையினைப் பெற்றுக் கொண்டதன் முன்னேற்றம்		
			0 % - 49 %	50 % - 74%	75% -100%
சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்					
1. சகல இடங்களிலுமுள்ள எல்லா வகையான வறுமையையும் முடிவுக்குக் கொண்டுவருதல்	உற்பத்திக் கிராமங்களினை நிறுவுவதனூடாக குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு நிலையான வருமான வழியினை அமைத்துக் கொடுத்தல்.	நிறுவப்பட்ட உற்பத்திக் கிராமங்களின் எண்ணிக்கை			√
2. வலுவான உட்கட்டமைப்பினை உருவாக்குதல்,முழு மற்றும் நிலையான தொழில்மயமாக்கலினை ஊக்குவித்தல் மற்றும் புதுமைகளினை உருவாக்குதல்.	வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவும் உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டங்களினை அமுலாக்குதல்.	மேம்படுத்தப்பட் உட்கட்டமைப்பு வசதி செயற்திட்டங்களின் எண்ணிக்கை			√

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளினை நிறைவேற்றுவதிலுள்ள சவால்கள்

தற்போதுள்ள கொவிட 19 தொற்றுநோய் நிலையின் காரணமாக செயற்திட்டங்களினை எதிர்பார்த்தவாறு உயர் மட்டத்தில் அமுலாக்குவதில் தடை ஏற்படுதல்.

1. போதுமான வகையில் பதவியணி மற்றும் பௌதிக வளங்கள் இல்லாமை.
2. புதிய செயற்திட்டங்களினை அமுலாக்கும் போது கிராம மட்டத்தில் உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு குறைவடைதல்.
3. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கியவேளையில், நவீன தொழில்நுட்ப முறைமையினைப் பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் காட்டும் எதிர்மறை உளப்பாங்குகள் மற்றும் அது தொடர்பில் போதுமான பௌதிக வளங்கள் இல்லாமை.
4. கிராம மட்டத்தில் அமுலாக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் சமுதாயத்தினை செயலூக்கமாகப் பங்குபற்றச் செய்வது கடினமாகுதல்.
5. திட்டமிட்டவாறு கட்டுநிதி கிடைக்காமை.

அத்தியாயம் 06 – மனித வளத் தோற்றுவாய்

6.1 ஆளணி முகாமைத்துவம்

நிறுவனம்	சிரேஸ்ட நிலை		மூன்றாம் நிலை		இரண்டாம் நிலை		ஆரம்ப நிலை		மொத்தம்		
	அங்கீகரிக்கப்பட்ட ஆணை	தற்போதுள்ள ஆணை	அங்கீகரிக்கப்பட்ட ஆணை	தற்போதுள்ள ஆணை	அங்கீகரிக்கப்பட்ட ஆணை	தற்போதுள்ள ஆணை	அங்கீகரிக்கப்பட்ட ஆணை	தற்போதுள்ள ஆணை	அங்கீகரிக்கப்பட்ட ஆணை	தற்போதுள்ள ஆணை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு	26	25	-	02	16	284	18	55	60	366	-306
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்	01	01	07	07	26	18	06	1	40	25	15
கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம்	04	03	13	13	17	15	11	07	45	38	07
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை	08	08	14	14	133	108	43	36	198	166	32
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்	53	33	11	05	47	40	27	22	138	100	38
சௌபாக்யா மேம்பாட்டுப் பணியகம்	09	10	04	-	74	29	10	-	97	39	58
பிராந்திய அபிவிருத்தி வங்கி	44	37	1703	1359	1298	1084	109	2600	3154	2600	554

6.2** நிறுவனத்தின் செயற்திறனில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கஞ் செலுத்துகின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக.

முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் DMS/SM/02என்ற இலக்க மற்றும் 2020.09.04, 2020.09.18, 2020.11.02 மற்றும் 2021.04.30 ஆந் திகதிய கடிதங்களினூடாக பதவியணி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம், மேற்குறிப்பிட்ட அட்டவணையில், "அங்கீகரிக்கப்பட்ட ஆளணி" பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஆனால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலாக அமைச்சின் பதவியணி உள்ளதால், தற்போதுள்ள மற்றும் பிரேரிக்கப்பட்ட பதவியணியினை அங்கீகரித்துக் கொள்வதற்காகSMS/ADM/1/2/1-2019 என்ற எனது இலக்க மற்றும் 2020.12.03 ஆந் திகதிய கடிதத்தில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் "தற்போதுள்ள ஆளணி" பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2021.01.19, 2021.02.11 மற்றும் 2021.08.02 ஆந் திகதிய கடிதங்களினூடாக பதவியணியினை அங்கீகரித்துக் கொள்ளுவது தொடர்பில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திறக்கு மீளவும் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது.

6.3 மனித வளத் திறன் விருத்தி

	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டதின் காலவரையறை	மொத்த முதலீடு		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாடு/வெளிநாடு)	வெளியீடு/பெற்றுக்கொண்ட அறிவு•
				உள்நாடு	வெளிநாடு		
1	கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பில் ஒரு வருடப் பட்டப்பின் படிப்பு - 2021/2021	3	1 வருடம் வார இறுதி ((மு.ப. 9.00 - பி.ப. 5.00)	450,000.00		உள்ளூர்	பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பில் விரிவான அறிவினைப் பெறுதல் மற்றும் தனது சேவை யாப்பின் பிரகாரம் முதலாவது வகுப்பினைச் சுவீகரித்துக் கொள்ளுவதற்கு வாய்ப்பினை வழங்குதல்.
2	பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்துவத்தினைப் புதுப்பித்துக் கொள்ளுதல்.		03 மாதங்கள் (18 மணித்தியாலம் என்றவாறு) ((மு.ப. 9.00 - பி.ப. 4.00)	16,000.00			
3	04 தொகுதிகள் தொடர்பில் நடாத்தப்பட்ட ஆங்கில மொழிப் பயிற்சிப் பாடநெறி	70	03 மாதங்கள் (18 மணித்தியாலம் என்றவாறு) ((மு.ப. 9.00- பி.ப. 4.00)	144,000.00		உள்ளூர்	நிறுவனத்தினுள் ஆங்கில மொழியில் கடமையினை நிறைவேற்றும் இயலுமை மேம்படுதல். நம்பிக்கை மற்றும் வினைத்திறனுடம் தமது சேவையினை விளைத்திறனாகப் பெற்றுக்கொள்ளுவதற்கு இயலுதல்.
4	உளப்பாங்கு விருத்தி தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	35	02 மணித்தியாலம் ((மு.ப. 9.30 - பி.ப. 11.30)	2,100.00		உள்ளூர்	உளப்பாங்கு விருத்தியினூடாக நிறுவனத்தினுள் தமது சேவையினை வினைத்திறனுடனும் மற்றும் விளைத்திறனுடனும் பெற்றுக் கொள்ளுவதற்கு உந்துதல் ஏற்படுதல்.
5	தகவல் முகாமைத்துவத் திட்டத்தினை உருவாக்குதல் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.	15	04 நாட்கள் ((மு.ப. 8.30 - பி.ப. 4.30)	30,155.00		உள்ளூர்	பெற்றுக் கொண்ட அறிவினைப் பயன்படுத்தி ஒவ்வொரு பிரிவு தொடர்பிலும் தகவல் திட்டத்தினை உருவாக்கி அந்தந்த பிரிவுகளில் வினைத்திறன் மற்றும் விளைத்திறனினை அதிகரித்தல்.
6	இரண்டாந்தர உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட 150 மணித்தியால தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறி.	100	150 மணித்தியாலம் ((மு.ப. 9.00 -மதியம் 12.00 மற்றும் பி.ப. 2.00 - பி.ப. 5.00) வாரத்தில் 03 நாட்கள் என்றவாறு 25 நாட்கள்.	0.00		உள்ளூர்	அரச மொழித் தேர்ச்சி மட்டம் பூர்த்தி செய்யப்படுதல், சம்பள ஏற்றம் மற்றும் பதவியுயர்வு கிடைப்பதனூடாக வினைத்திறனுடன் சேவையினை நிறைவேற்றுதல்.

	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட	நிகழ்ச்சித் திட்டதின் காலவரைய	மொத்த முதலீடு		நிகழ்ச்சித் திட்டத்	வெளியீடு/பெற்றுக்கொண்ட அறிவு•
7	விடுமுறை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் கடமை மற்றும் பொறுப்பு தொடர்பிலான ஒருநாள் நிகழ்ச்சித் திட்டம்.	1	01 நாள் (மு.ப. 8.30- பி.ப. 4.30)	4,000.00		உள்ளூர்	விடுமுறை விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் அறிவு மேம்படுவதனூடாக தமது கடமையினை நம்பிக்கை, வினைத்திறன் மற்றும் விளைத்திறனுடன் பெற்றுக்கொள்ளுவதற்கு இயலுதல்.
8	அரசின் வாகனங்களி னைப் பேணுதல் தொடர்பிலான ஒருநாள் நிகழ்நிலை (ஒன்லைன்) நிகழ்ச்சித் திட்டம்.	1	01 நாள் (மு.ப. 8.30 - பி.ப. 4.30)	5,000.00		உள்ளூர்	விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் அறிவு மேம்படுவதனூடாக தமது கடமையினை நம்பிக்கை, வினைத்திறன் மற்றும் விளைத்திறனுடன் பெற்றுக்கொள்ளுவதற்கு இயலுதல்
9	குணப்படுத்துவதற்கு சிகிச்சை தொடர்பிலான உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டம்.	61	02 மணித்தியாலம் (மு.ப. 10.00 - மதியம் 12.00)	6,900.00		உள்ளூர்	உளப்பாங்கு விருத்தியினூடாக நிறுவனத்தினுள் தமது சேவையினை வினைத்திறனுடனும் மற்றும் விளைத்திறனுடனும் பெற்றுக் கொள்ளுவதற்கு உந்துதல் ஏற்படுதல்.
10	இரண்டு நாள் (எக்செல்) கணனிப் பயிற்சி நிகழ்ச்சித் திட் டம்	5	02 நாட்கள் (மு.ப. 9.00 - பி.ப. 4.00)	60,000.00		உள்ளூர்	பெற்றுக் கொண்ட கணனி அறிவினைப் பயன்படுத்தி தமது கடமையினை நம்பிக்கை, வினைத்திறன் மற்றும் விளைத்திறனுடம் பெற்றுக் கொள்ளுவதற்கு இயலுதல்.
		291		**718,155.00**	**-**		

இந்த இராஜாங்க அமைச்சுக்கும் மற்றும் இணை நிறுவனங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைச் செயற்பாடுகளில் முன்னணியான செயற்பாடாக விளங்குவது, நாட்டின் பொருளாதார, சமூக, ஆரோக்கியம்சார் உடல் மற்றும் உள ரீதியில் பின்தங்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்டு ஓரங்கட்டப்பட்டு பாதத்திற்குள்ளாகி வாழும் சமூகங்களினை, பொருளாதார, சமூக, கலாசார மற்றும் ஆன்மீகம்சார் வகையில் வலுவூட்டி அவர்களுக்கு உயர்ந்த வாழ்கைத் தரத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை வடிவமைத்தல், அமுலாக்குதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பிடுவதுமாகும்.

இக்கடமைப் பொறுப்பினை அடையப் பெறுவதற்கு இவ்வமைச்சு மற்றும் இணை நிறுவனங்களிடமுள்ள மனித வள விடயம் மற்றும் தொழில்நுட்ப அறிவு வலுவூட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்குச் சமமாக தமது பொறுப்புக்களினைச் சரியான வகையில் நிறைவேற்றுவதற்கு உந்தப்படுவதற்கு சரியான வழிகாட்டலுடன் உளப்பாங்கு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தவறாது முன்வைக்கப்படுதல் வேண்டும்.

அந்நோக்கங்களினை மனதில் கொண்டு அமுலாக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குவதனூடாக தங்கள் வாழ்க்கையினைத் தக்கவைப்பதற்குத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடும் வறிய சமூகங்களுக்கு இரக்கமுள்ள சேவையினை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களினுள் உள உந்துதல் ஏற்படும் என்பதுடன், அமைச்சினதும் மற்றும் இணை நிறுவனங்களினதும் செயற்திறனினை மேம்படுத்துவதில் இது பாரிய பங்களிப்பினை வழங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
1	**பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/கணக்குள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதிக்கூற்றுகள்	இணக்கம்		
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கு	இணக்கம்		
1.3	வர்த்தக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு)	தொடர்பற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	தொடர்பற்றது		
1.5	விசேட முற்பணக் கணக்கு	தொடர்பற்றது		
1.6	பிற	தொடர்பற்றது		
2	**புத்தகங்கள் மற்றும் ஏடுகளினைப் பேணுதல் (நி.பி. 445)**			
2.1	பொதுநிர்வாக சுற்றுநிரூபம் 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
2.2	ஆளுக்குரிய வேதனாதி ஏடு/ ஆளுக்குரிய வேதனாதி அட்டைகளினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
2.3	கணக்காய்வு விசாரணை ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் ஏட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
2.5	சகல மாதாந்த கணக்குப் பொழிப்புக்களினை (CIGAS) தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் பொதுத் திறைசேரிக்கு முன்வைத்தல்.	இணக்கம்		
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்து முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
2.7	பொருட் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
2.8	இருப்புப் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
2.9	இழப்பு நட்டப் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி	தொடர்பற்றது		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
	முன்னெடுத்துச் செல்லுதல்.			
2.10	பொறுப்புக்களின் பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
2.11	அடிக்கட்டைப் புத்தகங்களின் (GAN -20) பதிவேட்டினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுதல்.	இணக்கம்		
3	**நிதி முகாமை தொடர்பிலான செயற்பாடுகள் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகார நிறுவனத்தினுள் அதிகாரங்கள் பகிரப்படுதல்.	இணக்கம்		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை தொடர்பில் நிறுவனத்தினுள் விழிப்புணர்வூட்டப்பட்டிருத்தல்.	இணக்கம்		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் இரண்டு உத்தியோகத்தர்கள் அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கையினைக் கொண்ட உத்தியோகத்தர்களினூடாக அங்கீகரிக்கக்கூடியவாறு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருத்தல்.	இணக்கம்		
3.4	2014.05.11 ஆந் திகதிய 171/2004 என்ற இலக்க பொதுக் கணக்குகள் சுற்றுநிரூபத்தின் பிரகாரம், அரசின் ஊதிய மென்பொருள் பொதினையினை பாவிக்கும்போது கணக்காளர்களின் முகாமையின் கீழ் நடவடிக்கைகளினை எடுத்தல்.	இணக்கம்		
4	**வருடாந்த திட்டங்களினைத் தயாரித்தல்.**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.	இணக்கம்		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தினைத் தயாரித்தல்.	இணக்கம்		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்.	இணக்கம்		
4.4	வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரித்து தேசியப் பாதீட்டுத் திணைக்களத்திற்கு (NBD) குறிப்பிட்ட தினத்தில் முன்வைத்தல்.	இணக்கம்		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் கூற்றினை குறிப்பிட்ட தினத்திற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.	இணக்கம்		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
5	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	கணக்காய்வாளர் அதிபதியினால் விதிக்கப்பட்ட தினத்தில் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் மறுமொழிகளினை வழங்கியிருத்தல்.	இணக்கம்		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.பி.134(2) DMA/1-2019 இன் பிரகாரம் வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்.	இணக்கம்		
6.2	சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒருமாத காலப்பகுதியினுள் விடையளித்திருத்தல்.	தொடர்பற்றது	சில கணக்காய்வு விசாரணைகள் தொடர்பிலான மறுமொழிகள் ஒருமாத காலப்பகுதியினுள் வழங்கப்படாமை	ஒரு மாத காலப்பகுதியினுள் மறுமொழிகளினை வழங்குவதற்கு உரிய பிரிவுகளினை விழிப்புணர்வூட்டுதல்.
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உப பிரிவின் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை முகாமைத்துவம் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல்.	இணக்கம்		
6.4	நிதிப் பிரமாணம் 134(3) இன் பிரகாரம் சகல உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்.	இணக்கம்		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
7.1	DMA சுற்றுநிரூபம் 1-2019 இன் பிரகாரம் ஆகக்குறைந்த வகையில் 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களையாவது உரிய வருடத்தினுள் நடாத்தியிருத்தல்.	தொடர்பற்றது	நாட்டில் காணப்பட்ட தொற்றுநோய் நிலை காரணமாக 2020.02.27 முதலாவது காலாண்டு தொடர்பிலும் 2020.12.21 நான்காவது காலாண்டு தொடர்பிலும் மாத்திரம் கூட்டங்களினை நடாத்துவதற்கு முடிந்துள்ளது.	04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களினை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	01/2017 என்ற இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றுநிரூபத்தின் 07 வது அத்தியாயத்தின் பிரகாரம் சொத்துக்களினைக் கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பிலான தகவல்களினை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு முன்வைத்திருத்தல்.	இணக்கம்		
8.2	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் 13 வது அத்தியாயத்தின் பிரகாரம் அச்சுற்றுநிரூபத்தின் ஏற்பாடுகளினை அமுலாக்குவதை ஒருங்கிணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பு உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்து அவ் உத்தியோகத்தர் தொடர்பிலான தகவல்களினை கொம்றோலர் ஜனரால் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருத்தல்.	இணக்கம்		
8.3	அரச நிதிச் சுற்றுநிரூப இலக்கம் 05/2016 இன் பிரகாரம், பொருட் கணக்கெடுப்பு ஆய்வுகளினை முன்னெடுத்து உரிய அறிக்கைகளினை குறிப்பிட்ட தினத்தன்று கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்.	இணக்கம்		
8.4	வருடாந்த பொருட் கணக்கெடுப்பு ஆய்வில் வெளிக் கொணரப்பட்ட மேலதிகம், பற்றாக்குறை மற்றும் பிற பரிந்துரைகளினை, சுற்றுநிரூபத்தில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முன்னெடுக்கப்பட்டிருத்தல்.	இணக்கம்		
8.5	முதிர்வடைந்த பொருட்களினை அகற்றுதல் நி.பி. 772 இன் பிரகாரம் முன்னெடுத்திருத்தல்	இணக்கம்		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழாம் வாகனங்கள் தொடர்பில் தினசரி ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கைகளினைத் தயாரித்து குறிப்பிட்ட தினத்தில் கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்தல்.	இணக்கம்		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்களினை கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குகள் அகற்றுதல்.	தொடர்பற்றது	அமைச்சுக்கு உரித்தான ஒரு வாகனம் அகற்றுவதற்கு உள்ளது. அந்த அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.	அகற்றும் செயற்பாட்டினை வினைத்திறனாக்குதல்.
9.3	வாகன லொக் புத்தகங்களினைப் பேணும்போது அவற்றினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்தல்.	இணக்கம்		
9.4	சகல வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.பி 103, 104, 109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணக்கம்		
9.5	2016.12.29 ஆந் திகதிய 2016/30 என்ற இலக்க பொது நிர்வாக சுற்றுநிரூபத்தின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீளவும் பரீட்சித்தல்.	இணக்கம்		
9.6	குத்தகைக் காலத்திற்குப் பிறகு, குத்தகை வாகன லொக் புத்தகங்களின் முழு உரிமையினையும் ஒப்படைத்திருத்தல்.	இணக்கம்		
10	**வங்கிக் கணக்கினை முகாமை செய்தல்.**			
10.1	குறிப்பிட்ட தினத்தன்று வங்கி இணக்கக் கூற்றுக்களினைத் தயாரித்து உறுதிப்படுத்தி அவற்றினைக் கணக்காய்வுக்கு முன்வைத்திருத்தல்.	இணக்கம்		
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னரான ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்.	இணக்கம்		
10.3	வங்கி இணக்கக் கூற்றுகளில் வெளிக்கொணரப்பட்ட மற்றும் இணக்கஞ் செய்யவேண்டியருந்த மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அம் மீதிகளினை ஒரு மாத காலப்பகுதியினுள் தீர்த்தல்.	இணக்கம்		
11	**வழங்கல் பயன்பாடு**			
11.1	செய்யப்பட்ட ஏற்பாடுகளினை அவற்றின் வரையறையினை மீறாத வகையில் செலவுகளினை	இணக்கம்		

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
	ஈடுசெய்தல்.			
11.2	நி.பி. 94(1) இன் பிரகாரம் செய்யப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்ட பின்னர் ஆண்டு இறுதியின் மீதி ஒதுக்கீடுகளின் வரையறையினைத் தாண்டாத வகையில் பொறுப்புக்களுக்கு வருதல்.	இணக்கம்		
12	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள்**			
12.1	கட்டுப்பாடுகளுக்கு இணங்குதல்.	இணக்கம்		
12.2	நிலுவையிலுள்ள கடன் மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வொன்றினை முன்னெடுத்திருத்தல்.	இணக்கம்		
12.3	ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதியினைத் தீர்த்திருத்தல்.	இணக்கம்		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	தாமதமான வைப்புத் தொடர்பில் நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல்.	இணக்கம்		
13.2	பொது வைப்புத் தொடர்பிலான வைப்புக் கணக்கினை நாளதுவரைப்படுத்தி முன்னெடுத்திருத்தல்.	இணக்கம்		
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியின் காசுப் புத்தகத்தின் மீதியினை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புதல்.	இணக்கம்		
14.2	நி.பி. 371 இன் பிரகாரம் தற்செயலான இடைக்கால கட்டுநிதியினை அத்தகை பணி நிறைவடைந்து ஒரு மாத காலப்பகுதியினுள் தீர்த்தல்.	இணக்கம்		
14.3	நி.பி. 371 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரையறையினை மீறாத தற்காலிய இடைக்காலக் கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல்.	இணக்கம்		
14.4	கட்டுநிதிக் கணக்கு மீதியினை, திறைசேரியின் புத்தகங்களுடன் மாதாந்தம் ஒப்புரவு செய்தல்.	இணக்கம்		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய விதிமுறைகளுக்கிணங்க திரட்டப்பட்ட வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்துதல் இடம்பெற்றிருத்தல்.	தொடர்பற்றது		
15.2	திரட்டப்பட்டிருந்த வருமானத்தினை வைப்புக் கணக்குக்கு வரவிடாது நேரடியாக வருமானத்திற்கு வரவிட்டிருத்தல்.	இணக்கம்		
15.3	நி.பி. 176 இன் பிரகாரம் நிலுவை வருமான அறிக்கைகளினை கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைத்திருத்தல்.	இணக்கம்		
16	**மனித வள முகாமைத்துவம்**			

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
16.1	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வரையறையினுள் பதவியணியினை முன்னெடுத்திருத்தல்.	தொடர்பற்றது	2194/74என்ற இலக்க மற்றும் 2020.09.25ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இவ்வமைச்சு, சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சாக நியமிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 60ஆகும். 2020.12.31ஆந் திகதிய பதவியணி 365ஆகும்.	தற்போதுள்ள பதவியணியினையும், உள்ளடக்க உத்தேசிக்கப்பட்ட பதவியணியினையும் அங்கீகரித்துக் கொள்ளுவதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது .
16.2	பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்துமூலம் வழங்கப்பட்டிருத்தல்.	இணக்கம்		
16.3	2017.09.20 ஆந் திகதிய MSD சுற்றுநிரூப இலக்கம் 04/2017 இன் பிரகாரம் சகல அறிக்கைகளினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைத்திருத்தல்.	தொடர்பற்றது	பதவியணி அங்கீகரிக்கப் படவில்லை என்பதாகும்.	பதவியணியினை அங்கீகரிப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது .

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
17	**பொதுமக்களுக்கு தகவல்களினை வழங்குதல்.**			
17.1	தகவல்கள் அறிந்துகொள்ளும் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல்களினை வழங்கும் ஆவணமொன்று நாளதுவரைப்படுத்தப்பட்டு முன்னெடுத்திருத்தல்.	இணக்கம்		
17.2	நிறுவனம் தொடர்பிலான தகவல்கள் அதன் இணையத்தளத்தினூடாக வழங்கப்பட்டிருத்தல். இணையத்தளத்தினூடாக அல்லது மாற்று வழிகளினூடாக நிறுவனம் தொடர்பில் பொதுமக்களின் புகார்கள்/குற்றச்சாட்டுக்களினை வெளிப்படுத்துவதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருத்தல்.	இணக்கம்		
17.3	தகவல்களினை அறிந்துகொள்ளும் சட்டத்தின் 08 வது மற்றும் 10 வது பிரிவின் பிரகாரம் வருடமொன்றுக்கு இரு தடைவை அல்லதுவருடமொன்றுக்கு ஒரு தடைவை அறிக்கைகள் முன்வைக்கப்பட்டிருத்தல்.	இணக்கம்		
18	**பிரஜைகள் பட்டயத்தினை அமுலாக்குதல்.**			
18.1	05/2008 மற்றும் 05/2018 (1) என்ற இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிரூபத்தின் பிரகாரம் பிரஜைகள்/பயனாளிகள் பட்டயம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருத்தல்.	இணக்கம்	பிரஜைகள்/பயனாளிகள் பட்டயம் தயாரிக்கப்பட்டுஅமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	
18.2	அச்சுற்றுநிரூபத்தின் 2.3 பந்தியின் பிரகாரம் பிரஜைகள்/பயனாளிகள் பட்டயத்தினைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்கும் செயற்பாடுகளினை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பில் நிறுவனங்களினூடாக மூலோபாயமொன்று தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணக்கம்		
19	**மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல்**			

இலக்கம்	பிரயோகிக்கப்பட வேண்டிய தேவை	இணக்க நிலவரம் (இணக்கம்/இணங்காமை)	இணங்கவில்லையாயின் அது தொடர்பில் சுருக்கமாக விளக்கவும்	இணங்காமையினை எதிர்வரும் காலத்தில் தவிர்ப்பதற்கு பிரேரிக்கும் துல்லியமான நடைமுறைகள்.
19.1	2018.01.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிரூப இலக்கம் 02/2018 இணைப்பு 02 படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு மனிதவளத் திட்ட மொன்று தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணக்கம்		
19.2	பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேரப் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்குறிப்பிட்ட மனித வளத் திட்டத்தினுள் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.	இணக்கம்		
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு அனைத்துப் பதவியணிக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பம் கைச்சாத்திடப்பட்டிருத்தல்.	தொடர்பற்றது	உத்தேசிக்கப்பட்டவாறு அமுலாக்குவதற்கு முடியவில்லை.	2022 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
19.4	மேற்குறிப்பிட்ட சுற்றுநிரூபத்தின் 6.5 வது பந்தியின் பிரகாரம் மனித வளத் திட்டத்தினைத் தயாரித்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை மேம்படுத்துதல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்குதல் தொடர்பில் பொறுப்புக்களினை ஒப்படைத்து மூத்த உத்தியோகத்தர் ஒருவரினை நியமித்தல்.	இணக்கம்		
20	**கணக்காய்வுப் பந்திகளுக்கு மறுமொழிகளினை வழங்குதல்.**			
20.1	கடந்த ஆண்டு தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளினூடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீர் செய்யப்பட்டிருத்தல்.	இணக்கம்		